# பாடம் 1 வரவேற்பு மற்றும் முன்னுரை

**பாடத் தலைப்புகள்**

| |
|---|
| வகுப்பறை நியதிகள் |
| அடிப்படைக் கொள்கைகள் மற்றும் மதிப்புகள் |
| வகுப்பின் பரந்த குறிக்கோள்கள் |
| வகுப்பின் மதிப்பீடு |

**வகுப்பறை நியதிகள்**

வகுப்பின்போது, உரிய கற்கும் சூழலைக் காக்கும் பொருட்டு, மாணவர்கள் வகுப்பறை நடத்தைக்கான விதிகளைப் பின்பற்ற சம்மதிக்கிறார்கள்.

**வகுப்பின் பரந்த குறிக்கோள்கள்**

**ஸ்ரீல பிரபுபாதரின் இயக்கம் மற்றும் அதன் உறுப்பினர்களின் நீண்ட கால நலனை விருத்தி செய்யும் நோக்கத்துடன், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தினுள், சிஷ்யத்துவத்தின் தரத்தை மேம்படுத்துவது.**

மாணவர்கள் கீழ்கண்டவற்றைப் புரிந்து கொள்வதன் மூலம், நாம் இந்த நோக்கத்தை அடையலாம் :

1. பொதுப்படையான கௌஷ்ய வைஷ்ணவ மரபுக்கேற்ப, ஸ்ரீல பிரபுபாதரின் உபதேசங்களில் கொடுக்கப்பட்டுள்ளது போல், சிஷ்யத்துவத்தின் நீடித்திருக்கிற கொள்கைகளை புரிந்து கொள்ளுவது மற்றும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தினுள் இவை பிரியோகிக்கப்படும் தனித்தன்மை வாய்ந்த சூழல்களை மெச்சுவது.

2. தனது குருக்கள் மற்றும் மூத்த வைஷ்ணவர்களிடம் ஆன்மீக ரீதியான ஆரோக்கியமான, ஆக்கப்பூர்வமான உறவை ஏற்படுத்துவதற்கும், அந்த உறவில் பொருத்தமான நடந்து கொள்ளவும் இந்தக் கொள்கைகளை உபயோகிப்பது.

3. ஒரு சிஷ்யருக்குத் தேவையான மனோநிலையும், மதிப்பையும் வளர்த்துக் கொள்வது.

4. ஸ்ரீல பிரபுபாதரின் உபதேசங்களையும், அவர் மேற்கொண்ட பணியையும் என்றும் நீட்டித்து நிலைத்திருக்கச் செய்வதற்காக, தனது சொந்த உதாரணம் மற்றும் கட்டளை மூலமாக, முழு முதற்கடவுளுக்கும், அவரது அநேக பிரதிநிதிகளுக்கும் ஒத்துழைப்புடன் சேவை செய்வது.

**"சிஷ்யர்" வகுப்பின் குறிக்கோள்கள்**

ஒரு சிஷ்யராக, நான் எந்த வழிகளில், மேம்பட முடியும்?

**வகுப்பின் கொள்கைகள் மற்றும் மதிப்புகள்**

1. ஸ்ரீல பிரபுபாதர் தலைமையான சீக்ஷா குரு
2. அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் மற்றும் பரம்பரையிடம் விசுவாசம்
3. அநேக அதிகாரிகள் மற்றும் மூத்த வைஷ்ணவர்களுக்குரிய மரியாதை
4. யோசனை செய்து குருவைத் தேர்ந்தெடுத்தல்
5. குருவின் கட்டளைகளில் நம்பிக்கை
6. ஸ்ரீல பிரபுபாதரின் இயக்கத்திற்கும், உறுதிமொழிகளுக்கும் அர்ப்பணிப்பு
7. உயர்வான சாதனா, நடத்தை மற்றும் சமச்சீரான வாழ்க்கை முறை
8. கேள்விகள் கேட்டல், பணிவு மற்றும் சேவை
9. அனுகூலமான சத்சங்கம், இணைத்துக் கொள்ளுதல் மற்றும் ஒத்துழைப்பு
10. புனித நாமத்தைப் பயிலுதல் மற்றும் பரப்புதல்

**வகுப்பு மதிப்பீடு**

கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகள் அல்லது அவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்டவை உங்கள் வகுப்பு ஆசிரியரால் உங்களுக்கு நிர்ணயிக்கப்படும். உங்கள் பதில்கள் தோராயமாக 100-200 வார்த்தைகளுக்ககு மிகாமல் இருக்க வேண்டும். இதில் சில கேள்விகளுக்குக் சுருக்கமாக பதில் அளித்தால் போதும். பெருக்கல் குறியிடப்பட்டுள்ள கேள்விகளுக்கு கட்டாயம் பதில் அளிக்கவும்.

**பாகம் ஒன்று — முன்னுரை, தத்துவம் மற்றும் சூழல்**

**குரு-தத்வா மற்றும் பரம்பரை: (பாடம் 2)**

1. இரண்டு முக்கிய குரு வகைகளுக்கு இடையேயுள்ள ஒற்றுமைகளையும், வேறுபாடுகளையும் விளக்குக.

2. ரித்விக் தத்துவத்தைத் தவறென நிரூபிக்கும் வாதங்கள் குறைந்த பட்சம் நான்கை எழுதுக. இதற்குரிய சாஸ்திர மேற்கோள்களை உங்கள் பதிலில் எழுதவும்.

**அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் குரு பாத அஷ்ரயா: (பாடங்கள் 3, 5 & 8)**

3. ஒரு சிஷ்யர் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் குரு-பாத ஆஷ்ரயாவினை ஏற்றுக் கொள்ளும் முறையினை விளக்குக

4. அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தபாக ஆச்சாரியராகவும், தலைமையான சீக்ஷா குருவாகவும் ஸ்ரீல பிரபுபாதர் எவ்வாறு செயல்படுகிறார் என்பதை விளக்குக.*

5. எதிர்கால சந்ததியினருக்கும், ஸ்ரீல பிரபுபாதர் தலைமையான சீக்ஷா குருவாக நீடித்திருப்பது எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்தது?*

6. ஸ்ரீல பிரபுபாதர் மற்றும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் குருக்களின் குருபூஜைகள் - இவை குறித்த பொருத்தமான முறைகளை, தற்போதைய அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சட்டங்களை மேற்கோள் காட்டி, சுருக்கமாக விளக்குக.

**அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் குருக்கள் (பாடம் நான்கு)**

7. ஸ்ரீல பிரபுபாதரின் உபதேசங்கள் மற்றும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தினுள் உள்ள அதிகார அமைப்பு - இவை சம்பந்தமாக அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் உள்ள ஒரு குருவிற்கு இருக்க வேண்டிய மனோநிலையை விளக்குக. *

8. அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தினுள் உள்ள சீக்ஷா மற்றும் தீக்ஷா குருக்களை ஒருவர் ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும்?

9. மற்ற கௌடிய வைஷ்ணவ பரம்பரா மற்றும் நிறுவனங்களில் உள்ள குருக்கள் குறித்து, ஒரு அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் உள்ள சிஷ்யருக்கு இருக்க வேண்டிய பொருத்தமான மனோநிலையை விளக்குக.

**பாகங்கள் இரண்டு & மூன்று**

**குருவிடம் உறவுமுறையை ஏற்படுத்திக் கொள்ளுதல் மற்றும் நடந்து கொள்ளுதல்**

**குருவைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் தீட்சை உறுதிமொழிகள்: (பாடம் 6 & 7)**

10. தீட்சை உறுதிமொழிகளின் முக்கியத்துவத்தை விளக்குக

11. சாஸ்திர மேற்கோள்களுடன், ஒரு குருவின் முக்கியமான தகுதிகள் சிலவற்றை பட்டியலிடுக

12. ஒரு குருவைத் தேர்ந்தெடுப்பதற்கான உரிய காரணங்கள் மற்றும் முறைகள், பொருத்தமற்ற காரணங்கள் மற்றும் முறைகளை விவாதிக்கவும். சாஸ்திரம் மற்றும் தற்போதைய அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சட்டங்களிலிருந்து பொருத்தமான மேற்கோள்களை உங்கள் பதிலில் அளிக்கவும். *

**குரு-சேவா (பாடங்கள் 9&10)**

13. குரு-சேவாவிற்கும், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் குறிக்கோளுக்கு சேவை செய்வதற்கும் உள்ள உறவை, உதாரணங்களுடன் விவாதிக்கவும். இந்த இரண்டு சேவைகளுக்குமான சமச்சீரான அணுகுமுறையின் முக்கியத்துவத்தை விளக்குக. *

14. குரு வாப்பு-சேவா மற்றும் குரு வாணி சேவா என்றால் என்ன? எது அதிக முக்கியத்துவம் வாய்ந்தது ? ஏன்?

15. குருவிடமிருந்து அறிவுரையை நாடுவதில், உள்ள உரிய மற்றும் பொருத்தமற்ற விஷயங்கள் குறைந்தபட்சம் நான்கை எழுதுக. பொருத்தமான சாஸ்திர மேற்கோள்களை உங்கள் பதிலில் குறிப்பிடவும்.

16. ஒருவர் தன்னுடைய குருவின் ஆன்மீகச் சகோதரர்/ஆன்மீகச் சகோதரியிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை விளக்குக. சாஸ்திரங்களிலிருந்து உரிய மேற்கோள்களை உங்கள் பதிலில் எழுதுக.

**பாகம் நான்கு**

**உறவுமுறையை ஒத்துழைப்புடன் நிறைவேற்றுதல்.**

**ஒருவருடைய குருவை, அறிமுகப்படுத்துதல் (பாடங்கள் 12, & 5)**

17. ஒரு அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சிஷ்யர் ஒருவருக்கு, தன்னுடைய குருவை பொது இடத்திலும், வைஷ்ணவர்களின் சமூகத்தினுள்ளும் மேம்படுத்துவது குறித்து இருக்க வேண்டிய மனநிலை மற்றும் நடத்தை பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள் என்று விவரிக்கவும். உங்களது பதிலில், சாஸ்திரம் மற்றும் தற்போதைய அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சட்டங்களை மேற்கோள் காட்டவும். இது சம்பந்தமாக அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சிஷ்யர்கள் உரிய மனோநிலையை வளர்த்துக் கொள்வது ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது?*

18. தற்போதைக்கும், எதிர்காலத்திற்கும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் ஸ்ரீல பிரபுபாதாவை ஸ்தாபக ஆச்சாரியராகவும், தலைமையான சீக்ஷா குருவாகவும் வெளிப்படையாக மேம்படுத்துவது ஏன் முக்கியம் ஆகும்? உங்கள் பதிலில் பொருத்தமாக சாஸ்திரம் மற்றும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சட்டங்களை மேற்கோள் காட்டவும். *

**அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தினுள் உறவுமுறைகள் (பாடம் 13)**

19. "ஒருவரின் தீக்ஷா குருவின் அடிப்படையில் பாரபட்சம்" குறித்து ஒரு அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சிஷ்யரிடம் காணப்படும் பொருத்தமற்ற மனோநிலை மற்றும் நடத்தை குறித்து விவாதிக்கவும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சிஷ்யர்கள் இது சம்பந்தமாக உரிய மனோநிலையை வளர்த்துக் கொள்வது ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது?*

20. அனைத்து அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் வைஷ்ணவர்களுடன் ஒத்துழைக்கின்ற உறவுமுறைகளை வளர்ப்பதற்கும், பேணிக்காப்பதற்கும் தேவையான நடைமுறைக்குரிய வழிகளை விவரிக்கவும். *

## பாடம் 2 குருதத்வா மற்றும் பரம்பரா

**பாடத் தலைப்புகள்**

| |
|---|
| குருதத்வா |
| குருக்கள் – வகைகள் |
| குரு பரம்பரா முறை |
| மறைவிற்குப் பிறகான ரித்விக் கொள்கையை தவறென நிரூபித்தல் |

**குரு தத்வா**

குருவின் நிலை குறித்து தங்களது சொந்த வார்த்தைகளில், சுருக்கமாக விளக்குக

**குரு – தத்வா**

**ஆன்மீக குருவிற்கும் கிருஷ்ணருக்கும் வேறுபாடில்லை**

குரு – கிருஷ்ண ரூப ஹன சாஸ்த்ரேர பிரமாணே
குரு - ரூபே கிருஷ்ண க்ருபா கரேண பக்த-கணே

அனைத்து சாஸ்திரங்களின் ஆழ்ந்த நிதானமான கருத்தின்படி ஆன்மீக குருவிற்கும், கிருஷ்ணருக்கும் வேறுபாடில்லை. பகவான் கிருஷ்ணர் ஆன்மீக குரு உருவில் தனது பக்தர்களை விடுவிக்கிறார்.

ஒரு சிஷ்யருக்கும், ஆன்மீக குருவிற்கும் இடையேயான உறவு, கிருஷ்ணரிடம் அவருக்கு உள்ள உறவைப் போன்றது.

- ஸ்ரீ சைதன்ய சரிதாமிருதா, ஆதி லீலா 1.45

ஆச்சார்யம் மாம் விஞ்ஞானீயான் நாவமன்யேத க்ர்ஹிசித்
ந மர்த்ய – புத்யாஸீயதே ஸர்வ-தேவ-மயோகுரு:ஹ

ஆச்சாரியரும் நானே என்பதையறிந்து ஒருவன் அவரை எவ்விதத்திலும் அவமதிக்கக்கூடாது. அவர் அனைத்து தேவர்களின் பிரதிநிதி என்பதால் அவரை ஒரு சாதாரண மனிதர் என்றெண்ணி அவரிடம் ஒருவன் பொறாமை கொள்ளக்கூடாது.

-ஸ்ரீமத் பாகவதம் 11.17.27

**ஆன்மீக குருவை ஒரு சாதாரண மனிதனாக் கருதுபவன் சர்வ நாசமடைவான்**

"ஆன்மீக குருவை பரம புருஷருக்குச் சமமான நிலையில் இருப்பதாக எண்ணி அவருக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஸாவுத் தரித்வேனஸமஸ்த-சாஸ்த்ரை. இது எல்லா சாஸ்திரங்களிலும் கட்டளையிடப்பட்டுள்ளது. ஆசார் யம் மாம் விஜானீயாத். ஒருவன் ஆச்சாரியரை பரமபுருஷருக்குச் சமமானவராகக் கருத வேண்டும். இவ்வளவு உபதேசங்கள் இருந்தும், ஆன்மீக குருவை ஒரு சாதாரண மனிதனாக் கருதுபவன் சர்வ நாசமடைவான்.

-ஸ்ரீமத் பாகவதம் 7.15.26

**ஒருவன் தன்னுடைய வேலையை குற்றமறச் செய்யும்பொழுது, அவனும் பக்குவமானவன்.**

ஒரு தபால்காரர் நமக்கு ஒரு நூறு டாலர்களை பட்டுவாடா செய்யலாம். ஆனால் தபால்காரர் நமக்கு நூறு டாலர்களை அளிப்பதாக நாம் கருதுவதில்லை. நண்பர் ஒருவரால் பணம் அனுப்பப்படுகிறது. அதில் இருந்து எதையும் எடுக்காமல் அல்லது அதனுடன் எதையும் கூட சேர்க்காமல் தபால்காரரின் வேலை அதை அப்படியே நம்மிடம் ஒப்படைப்பது ஆகும். அவருடைய பக்குவம் யாதெனில், தான் ஒருவரின் நண்பரால் அனுப்பப்பட்ட நூறு டாலர்களை அப்படியே பட்டுவாடா செய்வதில். அதுதான் அவரின் பக்குவம். தபால்காரர் பிற அநேக வழிகளில் குறைபாடுகள் உள்ளவராக இருக்கலாம், ஆனால் அவர் தனது வேலையைக் குற்றமறச் செய்யும்போது, அவர் பக்குவமடைந்தவர் ஆகிறார்.

பிரபுபாதரின் வியாச-பூஜா நாள்
வகுப்பு, நியூ விருந்தாவனா, செப்டம்பர் 2, 1972

**குறைந்த தகுதிகளைக் கொண்டவராக இருந்தாலும் அல்லது முக்தியடையாதவராக இருந்தாலும் குருவாக செயல்பட முடியும்**

பக்தி வினோத தாகூரின் கூற்றுகள் சாஸ்திரங்களுக்கு இணையானவை, ஏனென்றால் அவர் முக்தியடைந்தவர். பொதுவாக ஆன்மீக குரு பகவானின் நித்திய சகாக்களின் குழுவிலிருந்து வருபவர், ஆனால் யாரொருவர் அவ்வாறு எப்போதும் முக்தியடைந்தவரின் கொள்கைகளைப் பின்பற்றுகின்றாரோ, அவரும் மேற்கூறிய குழுவில் உள்ளவராகிறார். முக்தியடைந்த ஆச்சாரியர் மற்றும் குரு எந்த ஒரு தவறையும் இழைக்க முடியாது. ஆனால் சில நபர்கள் குறைந்த தகுதிகளைக் கொண்டவராக இருந்தாலும் முக்தியடையாதவராக இருந்தாலும் சீடப்பரம்பரையைக் கண்டிப்பாகப் பின்பற்றுவதன் மூலம் குருவாகவும், ஆச்சாரியராகவும் செயல்பட முடியும்.

- ஜனார்தனாவுக்கு எழுதிய கடிதம், நியூயார்க், 26, ஏப்ரல், 1965

**நீங்கள் தூய பக்தரைப் பின்பற்றினால், நீங்களும் தூய பக்தரே**

ஆதலால் நீங்கள் தூய பக்தரைப் பின்பற்றினால், நீங்களும் தூய பக்தரே. ஒருவர் நூறு சதவீதம் தூய்மையானவராக இல்லாமல் இருக்கலாம். ஏனென்றால் கட்டுண்ட வாழ்விலிருந்து நம்மை உயர்த்திக் கொள்ள முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். ஆனால், தூய பக்தரை நாம் பின்பற்றினால், நாமும் தூய பக்தரே. எந்த அளவிற்குச் பின்பற்றுகிறோமோ, அந்த அளவு தூய்மையானது. ஆதலால் தூய பக்தர் என்றால் உடனடியாக நூறு சதவீதம் தூய்மையுள்ளவராக வேண்டும் என்று பொருளல்ல. ஆனால் 'நாம் ஒரு தூய பக்தரைப் பின்பற்றுவோம்' என்ற கொள்கையில் உறுதியாகப் பின்பற்றினால், பின் அவரது செயல்களும் ….. அவரும் தூய பக்தருக்கு இணையானவர்.

- பகவத் கீதா, 2.1-10, லாஸ் ஏஞ்சல்ஸ், நவம்பர், 25, 1968

**குருக்கள் – வகைகள்**

**தீக்ஷா குரு (ஒருவர்)**

- அறிவுரைகள் வழங்குகிறார்
- தீட்சைஅளித்து, பரம்பராவுடனான தொடர்பை அதிகாரப்பூர்வமாக்கிறார்
- ஆன்மீகப் பெயரை வழங்குகிறார்
- மந்திரம் வழங்குகிறார் (மந்திர-குரு)
- சிஷ்யர்களின் உறுதிமொழிகளை ஏற்றுக்கொள்கிறார்
- சிஷ்யர்களின் பாவ விளைவுகளை அகற்றுகிறார் (தீக்ஷா வழங்கும் போது)

**சீக்ஷா – குரு (பலர்)**

- அறிவுரைகள் வழங்குகிறார்

**சீக்ஷா குருக்களின் எண்ணிக்கைக்கு வரம்பு இல்லை**

மந்திர-குரு ஆர யதா சீக்ஷா – குரு – கண
தான்ஹார சரண ஆகே கரியே வந்தன

எனது தீக்ஷா குருவிற்கும் மற்றும் எனது அனைத்து சீக்ஷா குருக்களுக்கும் எனது மரியாதைக்குரிய வணக்கங்களை, அவர்களின் தாமைரைப் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

**பொருளுரை**

ஒரு பக்தர் ஒரே ஒரு தீக்ஷா குருவை மட்டுமே கொண்டிருக்க வேண்டும், ஏனென்றால் ஒருவருக்கு மேலாக ஏற்றுக்கொள்வது என்பது சாஸ்திரங்களில் எப்பொழுதும் அனுமதிக்கப்படவில்லை. ஆயினும், ஒருவர் ஏற்றுக்கொள்ளக் கூடிய சீக்ஷா குருக்களின் எண்ணிக்கைக்கு வரம்பு இல்லை. பொதுவாக ஒரு சிஷ்யருக்கு ஆன்மீக அறிவில் எப்பொழுதும் அறிவுரை வழங்கும் குருவே, பின்னாளில் அவரின் தீக்ஷா குருவும் ஆகிறார்.

ஸ்ரீ சைதன்ய சரிதாமிருதா ஆதி 1.35

சீக்ஷா – குரு – பிருந்தா க்ருபா கொரியா அபார்
சாதகே சிகன் சாதனேர் அங்க – சாா

ஆனால், அநேக அறிவுரை வழங்கும் குருக்களை (சீக்ஷா குருக்கள்) மிக முக்கியமானவர்களாக நான் கருதுகிறேன். ஏனென்றால், நடைமுறை பக்தித் தொண்டின் (சாதனா பக்தி) அனைத்து அடிப்படையான, முக்கியமான நிலைகளிலும், ஆரம்பநிலை பக்தர்களை பயிற்றுவிப்பதன் மூலம், அளவில்லாத மிகுந்த கருணையை வழங்குகிறார்கள்.

- ஸ்ரீ ஸ்ரீ கல்யாண கல்ப-தரு ஸ்ரீல பக்திவினோத தாகூரா
- முதல் கிளை, ஆன்மீக அறிவு (உபதேசா)
- அறிமுகம் சீக்ஷா மற்றும் தீக்ஷா குருக்கள்

திவ்ய-ஞானம் ஆன்மீக அறிவு + க்ஷபயதி விளக்குதல் = தீக்ஷா

திவ்ய-ஞானம் ஆன்மீக அறிவு + இக்ஷா (தர்சனா) பார்ப்பது = தீக்ஷா

**தீக்ஷா என்பது திவ்யமான செயல்களைத் தொடங்குவதற்கான ஆரம்பம் …**

"தீக்ஷா" என்ற வார்த்தை "இது ஆரம்பம்" என்று குறிக்கிறது. "தீக்ஷா", "தீக்ஷா", தி….திவ்யம். இரு வார்த்தைகள் உள்ளன, திவ்ய-ஞானம், திவ்ய-ஞானம் என்பது திவ்யமான, ஆன்மீக அறிவு என்று அர்த்தம். ஆதலால் திவ்யா என்பது தி மற்றும் ஞானம், க்ஷபயதி, விளக்குதல். அது க்ஷா, தீ-க்ஷா இதுவே தீக்ஷா என்று அழைக்கப்படுகிறது, இணைத்தல். ஆதலால் "தீக்ஷா" என்றால் திவ்யமான செயல்களைத் தொடங்குவதற்கான ஆரம்பம். இதுவே "தீக்ஷா" என்று அழைக்கப்படுகிறது. ஆதலால் நாம் சிஷ்யர்களின் உறுதிமொழிகளை ஏற்கிறோம்: "நீ இத்தனை முறை ஜபம் செய்," "சரி சார்", "நீ இந்த நியமங்களைப் பின்பற்று," "சரி சார்." இதுவே தீக்ஷா. ஒருவன் பின்பற்ற வேண்டும். ஒருவன் ஜபம் செய்ய வேண்டும். பிறகு அனைத்தும் தானாகவே வருகிறது.

- வகுப்பு, ஸ்ரீமத் பாகவதம் 6.1.15 – ஆக்லேண்ட், பிப்ரவரி 22,1973

சமஸ்கிருதத்தில் உபயோகிக்கப்படும் வார்த்தை "தீக்ஷா" தீக்ஷா என்றால்…தி, திவ்ய ஞானம், திவ்யமான அறிவு, மற்றும் க்ஷா, இக்ஷா என்றால் தர்சனா, பார்ப்பது அல்லது க்ஷயபதி, விளக்குதல் இதுவே தீக்ஷா எனப்படுகிறது.

- வகுப்பு, பலி-மர்தன தாஸாவின் தீக்ஷை, மான்ட்ரீல், ஜீலை 29, 1968

**ஒருவருக்கு தீக்ஷை அளிக்கப்பட்டால் அன்றி, …..அவனது அனைத்து பக்தி செயல்களும் உபயோகமற்றவை**

ஆதிக்சிதஸ்ய வாமோரு க்ருதம் சர்வம் நிரர்தகம்
பஸு – யோனிம் அவாப்னோதி தீக்ஷா – விரஹிதோ ஜனஹ

ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குருவினால் ஒருவன் தீக்ஷை அளிக்கப்பட்டால் அன்றி, அவனது அனைத்து பக்தி செயல்களும் உபயோகமற்றவை. முறையாக தீக்ஷை அளிக்கப்படாத ஒரு நபர் மீண்டும் மிருக இனங்களுக்கு இழியக்கூடும்.

- ஹரி பக்தி விலாசா (2.6) "விஷ்ணு – யாமலா" வில் மேற்கொள்ளப்பட்டது
- சைதன்ய சரிதாமிருதா மத்ய 15.108 பொருளுரையில் எடுத்துக் கூறப்பட்டது

**முதல் தீக்ஷை (ஹரி – நாம)**

இவ்வாறாக, நமது கிருஷ்ண பக்தி இயக்கத்தின் மாணவர்கள் ஆரம்பத்தில் பக்தர்களுடன் வாழ ஒப்புக்கொள்கிறார்கள். மற்றும் மெதுவாக, நான்கு தடை செய்யப்பட்ட செயல்கள், தகாத உறவு, சூதாடுதல், மாமிசம் உண்ணுதல் மற்றும் போதைப் பொருட்கள் இவற்றைக் கைவிடுவதன் மூலம், ஆன்மீக வாழ்வின் செயல்களில் முன்னேறுகின்றனர். ஒருவன் இந்தக் கொள்கைகளை உறுதியாகப் பின்பற்றும் பொழுது, அவன் முதல் தீக்ஷை (ஹரி நாம) அளிக்கப்படுகிறான். அவன் தினமும் குறைந்தபட்சம் பதினாறு மாலைகள் முறையாக ஜபம் செய்கிறான் – பிறகு ஆறு மாதங்கள் அல்லது ஒரு வருடம் கழித்து,

இரண்டாம் முறை தீக்ஷை அளிக்கப்படுகிறான். முறையான யாகங்கள், சடங்குகளுடன் பூணூல் அணிவிக்கப்படுகிறான்.

- ஸ்ரீ சைதன்ய சரிதாமிருதா பொருளுரை, ஆதி 17.265

**ஹரி நாம தீக்ஷை & மந்திர – தீக்ஷை**

முதல் சடங்கு. ஹரி நாம தீக்ஷை. பிறகு மந்திர தீக்ஷை. ஹரி நாம தீக்ஷா. இங்கு இருக்கும் அனைத்து சிஷ்யர்களும், ஒரு வருடத்திற்கு முன்னால், ஜபம் செய்வதற்கு தீக்ஷை அளிக்கப்பட்டார்கள். இப்பொழுது இரண்டாம் முறையாக, மந்திர தீக்ஷை மூலம் தீக்ஷை அளிக்கப்படுகிறார்கள். ஆம்.

- வகுப்பு, காயத்ரி மந்திரா தீக்ஷை - பாஸ்டன், மே 9, 1968

## குரு பரம்பரை முறை

**ஏவம் பரம்பரா ப்ராப்தம்**

உன்னதமான இவ்விஞ்ஞானம் சீடர்களின் சங்கிலித் தொடர் மூலமாகப் பெறப்பட்டது.

- பகவத் கீதை உண்மை உருவில் 4.2

(வாழ்ந்து கொண்டிருக்கும்) தற்போதைய தீக்ஷா மற்றும் சீக்ஷா குருக்களை நாம் ஏன் ஏற்க வேண்டும்?

**பரம்பரை முறை**

சிஷ்யன் அளிக்கும் மரியாதையைக் குரு தனக்கென ஏற்றுக்கொள்ளாமல் அந்த மரியாதையைக் கிருஷ்ணரிடம் கொண்டு சேர்க்கிறார். குருவின் கருணையைப் பெறாமல் கிருஷ்ணரிடம் நேராகச் செல்வது மிகவும் கடினம்……..பகவத் கீதையில் கூறப்பட்டுள்ளது, 'ஏவம்பரம்பரா ப்ராப்தம்', குரு தம் குருவிற்கு மரியாதை செலுத்துகிறார். அந்த குரு தம் குருவிற்கு மரியாதை செலுத்துகிறார். இப்படியாக அது கிருஷ்ணரைச் சென்றடைகிறது. இவ்வாறாகக் கிருஷ்ணரின் கருணை பரம்பரை முறையில் கீழ் நோக்கியும், கிருஷ்ணருக்குச் செலுத்தப்படும் மரியாதை பரம்பரை முறையில் மேல்நோக்கியும் செல்கிறது.

- பகவான் ஸ்ரீல கபிலரின் யோகமுறை, அத்தியாயம் 13, சரணவடைதன் மூலம் பக்குவமான அறிவு பெறல்

**தற்போதைய ஆன்மீக குருவை ஒருவர் அணுக வேண்டும்.**

……ஸ்ரீமத் பாகவதத்தின் செய்தி சீடப் பரம்பரையின் மூலமாக கீழிறங்கி வருகிறது. ஸ்ரீமத் பாகவதத்தின் உண்மையான செய்தியைப் பெறுவதற்கு, சீடப் பரம்பரையின் சங்கிலித் தொடர் மூலமாக வரும் தற்போதைய ஆன்மீக குருவை ஒருவர் அணுக வேண்டும்.

- ஸ்ரீமத் பாகவதம் 2.9.7

**மேலேயுள்ள குருவிடம் நீங்கள் தாண்டிச் செல்ல முடியாது**

ஆதலால் பகவத்கீதையை நீங்கள் புரிந்துகொள்ள விரும்பினால், ஒருவர் நேரடியாகக் கேட்ட வழியிலேயே நாமும் புரிந்துகொள்ள வேண்டும். இதுவே பரம்பரா முறை எனப்படுவது. என்னுடைய ஆன்மீக் குருவிடமிருந்து நான் ஏதாவது கேட்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள், ஆதலால் அதே விஷயத்தை நான் தங்களிடம் சொல்கிறேன். ஆதலால் இதுதான் பரம்பரா முறை என்னுடைய ஆன்மீக குரு என்ன கூறினார் என்று தங்களால் கற்பனை செய்ய முடியாது. அல்லது நீங்கள் சில புத்தகங்களைப் படித்தாலும் கூட, என்னிடமிருந்து நீங்கள் கேட்டால் அன்றி, புரிந்துகொள்ள முடியாது. இதுவே பரம்பரை முறை என அழைக்கப்படுகிறது. உடனடியாக அடுத்த ஆச்சாரியரை அலட்சியம் செய்து, அவருக்கு மேலேயுள்ள குருவிடம் நீங்கள் தாண்டிச் செல்லமுடியாது.

- வகுப்பு, ஸ்ரீமன் பாகவதம் 1.15.30 – லாஸ் ஏஞ்சல்ஸ், டிசம்பர் 8,1973

**கிருஷ்ணரை நேரடியாக அணுக முயற்சிக்காதீர்கள், அது உபயோகமற்றது**

முதலில் தங்களுடைய ஆன்மீக குரு பிறகு அவரின் ஆன்மீக குரு, பிறகு அவரின் ஆன்மீக குரு, பிறகு அவரின் ஆன்மீக குரு, அவரின் ஆன்மீக குரு - இறுதியில் கிருஷ்ணா. இதுதான் கிருஷ்ணரை நேரடியாக அணுக முயற்சிக்காதீர்கள், அது உபயோகமற்றது. பரம்பரை முறையின் மூலம், படிப்படியாக எவ்வாறு அறிவைப் பெறுகிறீர்களோ, அவ்வாறே அதே படிக்கட்டுகளின் மூலம் கிருஷ்ணரை அணுக வேண்டும்.

- ஸ்ரீமத் பாகவதம் 1.24 – ரோம், மே 28, 1974

**ஒருவர் ஒரு வைஷ்ணவ குருவை ஏற்றுக்கொள்ள வேண்டும்,……. வெறும் புத்தகங்களைப் படிப்பதன் மூலம் அல்ல.**

புத்தகங்களைப் படிப்பதன் மூலமே பகவானுக்கு செய்யும் திவ்யமான, அன்பான தொண்டு குறித்து புரிந்து கொள்ள முடியும் என்று ஒருவர் அகந்தையுடன் நினைக்கக் கூடாது. ஒருவர் ஒரு வைஷ்ணவ குருவை ஏற்றுக் கொள்ள வேண்டும். (ஆதௌ குருவ் – ஆஷ்ரயம்) மற்றும் கேள்வி விடைகள் மூலம் மெதுவாக கிருஷ்ணருக்கு ஆற்றும் தூய பக்தித் தொண்டு குறித்து கற்க வேண்டும். இதுதான் பரம்பரை முறை என அழைக்கப்படுகிறது.

- ஸ்ரீ சைதன்ய சரிதாமிருதா, அந்த்ய லீலா 7.53, பொருளுரை

**நான் தீக்ஷை வழங்கும் அனைத்து சிஷ்யர்களும் பின்னாளில் ஆன்மீக குருக்களாக இருப்பர்**

என்னால் தீக்ஷை அளிக்கப்பட்ட இந்த மாணவர்கள், அனைவரும் நான் செய்வது போலவே செயலாற்றுவர். நான் அநேக ஆன்மீகச் சகோதரர்களைப் பெற்றிருக்கிறேன். அவர்கள் அனைவரும் செயலாற்றுகிறார்கள். அதைப் போலவே அவ்வாறே, என்னால் உருவாக்கப்படும், தீட்சை அளிக்கப்படும், இந்த அனைத்து சிஷ்யர்களும், பின்னாளில் ஆன்மீக குருக்களாக உருவாவதற்கு பயிற்சி அளிக்கப்படுகிறார்கள்.

- அறை உரையாடல், டெட்ராய்ட், ஜீலை 18, 1971

**நான் எனது சிஷ்யர்களை அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குருக்களாக காண்பதற்கு விரும்புகிறேன்.**

வெகு பரவலாக கிருஷ்ண உணர்வைப் பரப்புவதற்காக, நான் எனது சிஷ்யர்களை அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குருக்களாக, காண்பதற்கு விழைகிறேன். அதுவே என்னையும், கிருஷ்ணரையும் மிகவும் மகிழ்ச்சி அடையச் செய்யும்.

மிகவும் கண்டிப்பான முறையில் பயிலுங்கள். பிறகு நீங்கள் ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குருவாக, இதே அடிப்படையில் சிஷ்யர்களை ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால், உங்கள் ஆன்மீக குரு இவ்வுலகில் உள்ளவரை மரியாதை நிமித்தம் பொருட்டு, எதிர்கால சிஷ்யர்களை உங்கள் ஆன்மீக குருவிடம் அழைத்து வாருங்கள். அவருடைய மறைவிற்குப் பிறகு, எந்த தடையும் இல்லாமல், நீங்கள் சிஷ்யர்களை ஏற்றுக் கொள்ள முடியும். இது தான் சீடப் பரம்பரையின் நியதி.

- துஷ்ட கிருஷ்ணாவுக்கு எழுதிய கடிதம், டிசம்பர் 2, 1975

**நான் இல்லாத போது, எனது அனைத்து சிஷ்யர்களையும் அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குருவாக காண விரும்புகிறேன்.**

நான் இல்லாத போது, எனது அனைத்து சிஷ்யர்களையும் அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குருக்களாக காண விரும்புகிறேன். அங்கீகரிக்கப்பட்ட யாரொருவர் பகவான் சைதன்யரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் வழிகாட்டுதலின்கீழ், பகவான் சைதன்யரின் கட்டளைகளைப் பின்பற்றுகிறாரோ, அவர் ஆன்மீக குருவாக முடியும். இந்த உலகம் முழுவதும் கிருஷ்ண உணர்வைப் பரப்பும் பொருட்டு நான் இல்லாத சமயம், எனது அனைத்து சிஷ்யர்களையும் அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குருக்களாக காண விரும்புகிறேன்.

- "மது சூதனா" விற்கு எழுதிய கடிதம், நவத்வீபா, 2, நவம்பர், 1967

**அதிகமாக பணிவான நிலைக்கு நீங்கள் மாறும்போது, அந்த அளவு முன்னேறியவர்களாவீர்**

இது பரம்பரை முறை என்றழைக்கப்படுகிறது. கிருஷ்ணரின் சேவகனுக்கு சேவகனாக எவ்வாறு, மாறுவது என்று நீங்கள் கற்க வேண்டும். பணிவான நிலைக்கு அதிகமாக நீங்கள் மாறும்பொழுது – சேவகன், சேவகன், சேவகன், சேவகன், நூறு முறை சேவகன், சேவகன் – பிறகு அந்த அளவு நீங்கள் முன்னேறியவராவீர்கள்.

- வகுப்பு, பகவத் கீதை 2.2 – லண்டன், ஆகஸ்ட் 3, 1973

**மறைவிற்குப்பிறகான ரித்விக் – கொள்கையை தவறென நிரூபிக்கும் வாதங்கள்**

மறைவிற்குப்பிறகான ரித்விக் கொள்கை என்பது தவறான வழியில் திருப்புகின்ற ஒரு கொள்கை. இது யாதெனில், ஒரு குரு அவரது மறைவிற்குப் பின்னரும், ரித்விக்/ அவருக்குப் பதில் சடங்குகளை முன்னின்று நடத்தும் குருக்கள் மூலமாக, தீக்ஷா குருவாக செயல்படுகிறார் என்பதே.

- எந்தவொரு அங்கீகரிக்கப்பட்ட வைஷண்வ சம்பிரதாயாங்களிலும், ஒருவர் தன்னுடைய பரம்குருவிடம் இருந்து தீக்ஷை வாங்கியதற்கான உதாரணம் இல்லை.

- ஒருவர் பரம்குருவிடம் இருந்து தீக்ஷை பெறலாம் என்பதற்கான சாஸ்திர ஆதாரம் ஏதுமில்லை.

- ஜெயகோபால் என்பவர் தன்னை தன் பரம் குருவின் சிஷ்யர் என அறிவித்த காரணத்தால், அவரை வைஷ்ணவ சமுதாயத்திலிருந்து நீக்கியதாக, நித்யானந்த பிரபுவின் மைந்தரான வீரபத்ர கோஸ்வாமி ஸ்ரீல ஸ்ரீநிவாச ஆச்சாரியருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

  \- கௌடிய வைஷ்ணவ அபிதானா, காண்டம் 3

- பிரபுதாவின் சிஷ்யர்களிடையே இடையே தகுதி வாய்ந்த தீக்ஷா குருக்கள் இல்லை என்ற வாதம், "பிரபுபாதாவின் போதனைகள் சக்தி வாய்ந்தவை" என நிரூபணம் ஆகிவில்லை என்பதையே சுட்டிக்காட்டுகிறது. ஆதலால், எவ்வாறாயினும் ரித்விக் குரு மூலமாக பிரபுபாதரின் தீக்ஷா சிஷ்யராக மாறுவதில் என்ன நன்மை?

- ஒரு ரித்விக் குரு உபதேசங்கள் வழங்குகிறார். ஆனால் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தீக்ஷா குரு செயல்படுவதுபோல், ஒரு சிஷ்யரை விடுவிக்கும் பொறுப்பை முறைப்படி ஏற்பதில்லை.

கூடுதல் வாதங்கள்:

**கூடுதல் மேற்கோள்கள்        பாடம் 2 குரு தத்வா மற்றும் பரம்பரை**

**குரு தத்வா**

**ஆச்சாரியர் கடவுளைப் போல மதிக்கப்பட வேண்டும்.**

விஸ்வநாத் சக்கரவர்த்தி தாகூராவும் கூறியுள்ளார். 'ஸாஷாத் – தரித்வேன சமஸ்த – சாஸ்த்ரைத் யுக்தஸ் ததா பாவயதா ஏவ ஸத்பிஹி." ஆச்சாரியர், குரு கடவுளுக்கு சமமானவர். சாக்ஷாத் – தரித்வேனா." ஆச்சாரியர் கிருஷ்ணரைப் போன்று மதிக்கப்பட வேண்டும். ஆதலால் ஆச்சார்யம் மாம் விஞ்ஞானீயான் நாவமன்யேத க்ர்ஹிசித் SB 11.17.27)' யாரேனும் முட்டாள்தனமாக எண்ணினால் : "அவர்கள் ஒரு மனிதரை வழிபடுகிறார்கள். அந்த மனிதர் என்னைப் போன்றவர். அவர் அந்த அந்தஸ்தை எடுத்துக் கொண்டு சிஷ்யர்களிடமிருந்து மரியாதையையும் வழிபாட்டையும் எடுத்துக் கொள்கிறார்". சில சமயம் அவர்கள் அவ்வாறாக கேட்பதுண்டு. ஆனால் ஆச்சாரியர் எவ்வாறு மதிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் அறிவதில்லை. ஆச்சாரியர்கள் மதிக்கப்பட வேண்டும். சாக்ஷாத் தரித்வேனா – கடவுளைப் போல - இது மிகைப்படுத்துதல் இல்லை. இது சாஸ்திரங்களின் படியே மற்றும் ஆச்சாரியரும் அனைத்து இந்த மரியாதைக்குரிய வணக்கங்களையும் முழுமுதற்கடவுளுக்குச் சமர்ப்பிக்கவே ஏற்றுக்கொள்கிறார். இதுதான் முறை.

- ஸ்ரீமத் பாகவதம் 1.7.45-46 – விருந்தாவனா, அக்டோபர், 5, 1976

**ஸ்ரீமதி ராதாராணியின் அந்தரங்க சேவகர் மற்றும் நித்யானந்த பிரபுவின் பிரதிநிதி**

"முழுமுதற் கடவுளிடமிருந்து அனைத்தும் வேறுபட்டும் அதே சமயத்தில் ஒன்றுபட்டும் இருக்கின்றன" என நிரூபிக்கும் "அசிந்த்ய – பேத அபேத தத்வா"வே உண்மையான வேதாத்தம்.

இதுவே அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குருவின் உண்மையான நிலை என்றும், எப்பொழுதும் முகுந்தா (ஸ்ரீ கிருஷ்ணா)வுடன் அவருக்கு உள்ள நெருக்கமான உறவின் அடிப்படையிலியே அவரைக் கருத வேண்டும் என்றும். ஸ்ரீல ரகுநாத தாஸ கோஸ்வாமி உறுதிப்படுத்துகிறார். ஸ்ரீல ஜீவகோஸ்வாமி, தனது பக்தி சந்தர்பாவில் (213) தெளிவாக விளக்குகிறார்: "ஆன்மீக குருவும், சிவபெருமானும் முழுமுதற் கடவுளுக்கு நிகரானவர்கள் என்ற ஒரு தூய பக்தரின் கருத்து, அவர்கள் பகவானுக்கு மிகவும் பிரியமானவர்கள் என்ற அடிப்படையிலேயே அமைந்தது. அனைத்து விஷயங்களிலும் அவர்கள் பகவானைப் போல் அல்ல."

இந்த உண்மைகளை, ஸ்ரீல ரகுநாத தாஸ கோஸ்வாமி மற்றும் ஸ்ரீல ஜீவ கோஸ்வாமியின் அடிச்சுவடிகளைப் பின்பற்றி, ஸ்ரீல விஸ்வநாத சக்கரவர்த்தி தாகூரா போன்ற பின்னாளில் வந்த ஆச்சாரியர்களும் உறுதிப்படுத்துகின்றனர். "ஆன்மீக குரு முழுமுதற்கடவுளுக்கு மிகவும் பிரியமானவராகவும், அந்தரங்க சேவகராகவும் உள்ள காரணத்தால், அனைத்து சாஸ்திரங்களும் ஆன்மீக குருவை முழுமுதற் கடவுளுக்கு சமமாக ஏற்றுக் கொள்கின்றனர்" என்று ஸ்ரீல விஸ்வநாத சக்கரவர்த்தி தாகூரா, ஆன்மீக குருவிற்குச் செலுத்தும் தனது பிரார்த்தனையில் உறுதிப்படுத்துகிறார்.

கௌடிய வைஷ்ணவர்கள், முழுமுதற்கடவுளின் சேவகன் என்ற காரணத்தால ஸ்ரீல குருதேவரை (ஆன்மீக குரு) வழிபடுகின்றனர். அனைத்து புராதன இலக்கியங்களிலும், ஸ்ரீல நரோத்தம தாஸ தாகூர், ஸ்ரீல பக்தி வினோத தாகூர் மற்றும் பிற தூய வைஷ்ணவர்களின் சமீபத்திய பாடல்களிலும் இவ்வாறு கருதப்படுகிறது: " ஆன்மீக குரு என்பவர் எப்பொழுதும் ஸ்ரீமதி ராதாராணியின் அந்தரங்க சேவையில் இருப்பவர் அல்லது நித்யானந்த பிரபுவின் தோன்றிய பிரதிநிதி".

- ஸ்ரீல சைதன்ய சரிதாமிருதா ஆதி லீலா, 1.47

**ஆன்மீகக் குருவானவர் சைத்ய குருவின் புற வெளிப்பாடு**

கிருஷ்ணரே பரமகுருவாக விளங்குகிறார். ஆகையினால் அவர் 'சைத்ய குரு' என்றழைக்கப்படுகிறார். இது எல்லோர் மனதிலும் வீற்றிருக்கும் பரமாத்வைக் குறிக்கிறது. பகவத் கீதையில், அவர் உள்ளிருந்தும், அவர் அனுப்பும் ஆன்மீக குரு வெளியிலிருந்தும் உதவுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆன்மீகக் குருவானவர் சைத்ய குருவின் புற வெளிப்பாடு ஆவார் அல்லது ஆன்மீக குரு எல்லோருடைய மனதிலும் வீற்றிருப்பவர் ஆவார்.

- ஸ்ரீமத் பாகவதம் 4.8.44, பொருளுரை

**ஒரு தூய பக்தரை நீங்கள் பின்பற்றினால், நீங்களும் ஒரு தூய பக்தரே**

நாம் நூறு சதவீதம் குற்றமற்றவர்களாக இல்லாமல் இருக்காலாம், ஆனால் முடிந்தவரை, கட்டளையை உள்ளது உள்ளவாறே பின்பற்றினால், அந்த அளவு நாம் குற்றமற்றவர். இவ்வாறு ஒருவர் பக்குவத்தை அடையலாம். ஆதலால், ஒருவர் பின்பற்ற வேண்டும். ஒரு உதாரணத்தை புரிந்து கொள்ள முயலுங்கள். ஒரு சிறந்த தொழில் நிபுணர், இயந்திர வல்லுநர் வேலை செய்கிறார். ஒருவர் இந்த நிபுணரின் கட்டளையின்படி வேலை செய்கிறார். ஒரு நிபுணரின் கட்டளையின்படி கண்டிப்பாக வேலை செய்வதால், இவரும் நிபுணரே. அவர் நூறு சதவீதம் திறமையானவராக இல்லாவிட்டாலும், அவர் வேலை திறமையாக உள்ளது. தெளிவாகிறதா? ஏனென்றால் அவர் நிபுணரின் கீழ் வேலை செய்கிறார். உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா? ஆதலால், நீங்கள் ஒரு தூய பக்தரை பின்பற்றினால், நீங்களும் தூய பக்தரே. ஒருவர் நூறு சதவீதம் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதில்லை. ஏனென்றால் நாம் கட்டுண்ட வாழ்விலிருந்து நம்மை உயர்த்திக் கொள்ள முயற்சிக்கிறோம். ஆனால் ஒரு தூய பக்தரை கண்டிப்புடன் பின்பற்றினால், நாமும் தூய பக்தரே. எந்த அளவிற்குச் செய்கிறோமோ, அதுவரை தூய்மையானது. ஆதலால் தூய பக்தர் என்றால் உடனடியாக நூறு சதவீதம் தூய்மையுள்ளவராக வேண்டும் என்று பொருளல்ல. ஆனால் 'நாம் ஒரு தூய பக்தரைப் பின்பற்றுவோம்' என்ற கொள்கையில் உறுதியாகப் பின்பற்றினால், பின் அவரது செயல்களும் ….. அவனும் தூய பக்தருக்கு இணையானவர்.

- பகவத் கீதா, 2.1-10, லாஸ் ஏஞ்சல்ஸ், நவம்பர், 25, 1968

**அவர்கள் அநேகம் அல்ல, ஒருவரே, குரு-தத்வா…..**

**குருக்கள் - வகைகள்**

முதலில் மரியாதைக்குரிய பிரார்த்தனைகள் ஆன்மீக குருவிற்கு செலுத்தப்படுகின்றன. வந்தே குருன், மற்றும் குருன், பஹீ வசன, பன்மையில், அதாவது அநேக குருக்கள். ஆனால் அவர்கள் அநேகம் அல்ல, ஒருவரே, குரு-தத்வா…..

- வகுப்பு, ஸ்ரீ சைதன்ய சரிதாமிருதா, ஆதி லீலா 1.1, மாயாப்பூர், மார்ச் 25, 1975

**ஒருவருடைய முந்தைய பாவ விளைவுகளை தீக்ஷா அகற்றுகிறது**

தீக்ஷா – காலே பக்த கரே ஆத்ம – சமர்பணா
சேய் – காலே கிருஷ்ண தாரே கரே ஆத்ம – சமா

தீக்ஷை அளிக்கப்படும் சமயத்தில், ஒரு பக்தர் பகவானின் சேவையில் முழுமையாக சரணடையும் பொழுது, கிருஷ்ணர் அவரை தனக்கு சமமாக ஏற்றுக் கொள்கிறார்.

சேய் – தேகா கரே தார சித்-ஆனந்த-மயா
அப்ராக்ருத – தேஹே தான்ரா சரண பஜயா

இவ்வாறாக பக்தரின் உடல் ஆன்மீக மையமாக மாறும் பொழுது அந்த பக்தர், அந்த திவ்ய உடலில், பகவானின் பாதக்கமலங்களுக்கு சேவை செய்கிறார்.

- ஸ்ரீ சைதன்ய சரிதாமிருதா, அந்தியா 4.192

**தீக்ஷா மற்றும் சீக்ஷா குரு**

சாஸ்திரங்களின் நியமங்களுக்கேற்ப, தீட்சை அளிக்கும் ஆன்மீக குரு, தீக்ஷா-குரு என்றும், மேன்மை நிலையை அடையும் பொருட்டு, உபதேசங்களை வழங்கும் ஆன்மீக குரு சீக்ஷா குரு என்றும் அழைக்கப்படுகின்றனர்.

- ஸ்ரீ சைதன்ய சரிதாமிருதா, மத்ய 8.128

தீக்ஷா – புரஸ்சர்யா – விதி அபேக்சா நா கரே
ஜிஹ்வா - ஸ்பர்சே அ-சண்டள சபாரே உத்தரே

"ஒருவர் தீக்ஷை ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது தீக்ஷைக்கு முன்னதாக தேவைப்படும் செயல்களை நிறைவேற்ற வேண்டும் என்பதில்லை. ஒருவர் தனது உதடுகளால் பகவானின் நாமத்தை ஜபித்தால் போதும். தாழ்ந்த குலத்தை (சண்டாள)ச் சேர்ந்த ஒருவரைக் கூட இவ்வாறாக விடுவிக்கமுடியும்.

சத்யராஜ கானுக்கு பகவான் சைதன்யர் கூறியது
- சைதன்ய சரிதாமிருதா, மத்ய 15.108

**ஆன்மீகக் குரு, தனது சிஷ்யர்களின் பாவ காரியங்களை ஏற்றுக் கொள்கிறார்.**

முதல் தீக்ஷையிலிருந்து, ஆன்மீகக் குரு தனது சிஷ்யர்களின் பாவ காரியங்களை ஏற்றுக் கொள்கிறார். நான் வெகு எளிதாக தீக்ஷை வழங்கலாம். ஆனால் நான் என்ன செய்ய முடியும்? பகவான் சைதன்யரின் சேவை பொருட்டு, நான் நரகத்திற்குச் செல்லத் தயாராக உள்ளேன்.

- ஜாதுராணிக்கு எழுதிய கடிதம் – நியூ விருந்தாவன் – 4, செப்டம்பர், 1972

**இரண்டாவது தீக்ஷை உண்மையான தீக்ஷை**

உனது கேள்விகள் குறித்து: "இரண்டாம் தீக்ஷை உண்மையான தீக்ஷா. ஆரம்ப மற்றும் முதல் தீக்ஷா ஆரம்பநிலை, உயர்நிலைக் கல்விபோல, ஒருவரைத் தயார் செய்வதற்கு முதல் தீக்ஷை ஒருவருக்கு தூய்மையடைவதற்கு ஒரு வாய்ப்பாக அமைகிறது. எப்பொழுது உண்மையில் அவர் தூய்மையடைகிறாரோ, அப்பொழுது அவர் பிராமணராக அங்கீகரிக்கப்படுகிறார். அதுதான் உண்மையான தீக்ஷை. ஒருவர் ஆன்மீக குருவிடம் கேட்கும் முதல் நாளிலிருந்து, ஆன்மீக குருவிற்கும், சீடருக்கும் இடையேயான நித்தியமான பந்தம் ஆரம்பமாகிறது. எனது ஆன்மீக குருவைப் போல, 1922ல் எங்களது முதல் சந்திப்பில் கூறினார்: "நீங்கள் படித்த மாணவர்கள் ஏன் இந்த பக்தி கொள்கையை பிரச்சாரம் செய்யக் கூடாது?" அதுதான் ஆரம்பம். தற்போது உண்மையாகிறது. ஆதலால் உறவு அந்நாளிலிருந்து துவங்கியது.

- ஜாதுராணிக்கு எழுதிய கடிதம் – நியூ விருந்தாவன் – 4, செப்டம்பர், 1972

**விக்ரஹ வழிபாடு தேவைப்படுகிறது**

விக்ரஹ வழிபாடு அவசியம் இல்லை. ஆயினும், மிக அதிகமான மாணவர்களின் கட்டுண்ட தன்மையின் காரணமாக, அவர்களை இந்த சேவையில் ஈடுபடுத்தும் தேவை ஏற்படுகிறது. அவர்களது உடல் ரீதியான மற்றும் மனரீதியான நிலைகளை நாம் கருத்தில் கொண்டால், அத்தகைய மாணவர்களின் நடத்தை தூய்மையில்லாமலும், அவர்கள் மனம் நிம்மதியற்றதாகவும் சலனம் அடைந்து இருக்கக் காண்கிறோம்.

ஆதலால் இந்த ஜடரீதியான கட்டுண்ட தன்மையை நிவர்த்தி செய்வதற்காக, மாபெரும் முனி நாரதரும், மற்றவர்களும் வெவ்வேறு சமயங்களில் விஹ்ரஹ வழிபாட்டிற்கான பலதரப்பட்ட விதிமுறைகளைப் பரிந்துரைந்தார்கள்.

- பக்தி சந்தர்பா (283-84), ஸ்ரீல ஜீவ கோஸ்வாமி, ஸ்ரீ சைதன்ய சரிதாமிருதா, மத்ய 15.108

**குரு பரம்பரை முறை**

**முதலில் நீ எனது பக்தரின் பக்தராக மாறு – தாஸ – தாஸ – தாஸானுதாஸ**

நாம் கிருஷ்ணரிடம் தாவ முடியாது. அது மற்றுமொரு அபத்தம். நாம் குருவின் மூலமாக கிருஷ்ணரை அணுக வேண்டும். அதுதான் பரம்பரை முறை. நாம் நேரடியாக அணுகுவதற்கு, கிருஷ்ணர் ஒன்றும் மலிவான பொருள் அல்ல. ஒருவர் கூறலாம்: "ஓ, நான் ஏன் குருவை ஏற்றுக் கொள்ள வேண்டும்? நான் கிருஷ்ணரை நேரடியாக அணுகலாம்." இல்லை. கிருஷ்ணர் அவ்வாறு ஏற்றுக் கொள்வதில்லை.... மத்-பக்தஹ பூஜாப்யதிகஹ. கிருஷ்ணர் கூறுகிறார்: "முதலில் நீங்கள் பக்தனின் பக்தனாக மாறுங்கள்." சைதன்ய மஹா பிரபு கூறுகிறார், "கோபி-பர்து பத-கமலயோர் தாஸ-தாஸ-தாஸனுதாஸா". "நான் கிருஷ்ணரின் சேவகரின், சேவகரின் சேவகன்.

- வகுப்பு, பகவத் கீதா 2.2 லண்டன், ஆகஸ்ட் 3, 1973

**ஒரு சிஷ்யரின் முட்டாள்தனத்தை ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குரு நேரடியாகச் சுட்டிக்காட்டுகிறார்.**

கல்வி என்றழைக்கப்படும் விஷயத்தால் கர்வம் கொண்டு, பணிவில்லாமல் உள்ள ஒரு நபர், அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குருவின் பாதுகாப்பை நாடுவதில்லை. எனக்கு ஆன்மீக குரு தேவையில்லை எனவும், தன்னுடைய சொந்த முயற்சிகளால், மிக உயர்ந்த பக்குவ நிலையை அடைய முடியும் என்றும் அவர் நினைக்கிறார். வேதாந்த-சூத்தரத்தைக் கற்பதற்கான தகுதிகள் அவர்களுக்கு இல்லை. ஜட இயற்கையின், கட்டுப்பாட்டில் உள்ள ஒருவர், சீடப் பரம்பரையின் உபதேசங்களை பின்பற்றுவதில்லை, ஆனால் அவர்கள் சொந்தமாக எதையோ உற்பத்தி செய்ய முயற்சிக்கிறார்கள், ஆதலால் வேதாந்தக் கல்வியின் வட்டத்திற்கு வெளியே வருகின்றனர் ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குரு அத்தகைய தன்னிச்சையான மனக் கற்பனையாளர்களை எப்பொழுதும் கண்டிக்க வேண்டும். ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குரு ஒரு சிஷ்யரின் முட்டாள்தனத்தை நேரடியாகச் சுட்டிக் காட்டினால், அதை வேறு மாதிரியாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

- பகவான் சைதன்யரின் உபதேசங்கள் 18 பிரகாஸனந்தாவுடன் உரையாடல்

**குரு ஒருவராகவே இருக்க முடியும்**

குரு ஒருவராகவே இருக்க முடியும். ஏனெனில், அவர் சிஷ்ய பரம்பரையில் வருபவர். வியாச தேவரும் கிருஷ்ணரும் ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பு கற்பித்தது இப்போதும் கற்பிக்கப்படுகிறது. இந்த இரு படிப்பினைகளுக்கும் வித்தியாசமில்லை. ஆச்சாரியர்கள் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் வந்து போயிருந்தாலும், செய்தி ஒன்றே. உண்மையான குரு அவரது முன்னோடி பேசியதற்கு வித்தியாசமாகப் பேசுவதில்லை.

- தன்னையறியும் விஞ்ஞானம், 2 ஆன்மீக குருவைத் தேர்ந்தெடுத்தல், குரு என்றால் என்ன?

**பாடம் 3 ஸ்ரீல பிரபுபாதா – அகில உலக கிருஷ்ணபக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்**

**பாடத்தலைப்புகள்**

| |
|---|
| ஸ்தாபக ஆச்சாரியரின் செயல்கள் |
| பிரபுபாதா - ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் சக்தியளிக்கப்பட்ட பிரதிநிதி |
| எதிர்காலத்தில், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் |

**ஸ்தாபக ஆச்சாரியரின் செயல்கள்**

- அடிப்படை அல்லது உறுதியான ஆதரவு தருவது
- அறிவுரைகளை நிலைநிறுத்துவது (செய்ய வேண்டிய வகை குறித்த புத்திமதி)
- முதல் முறையாக (ஒரு நிறுவனம் முதலானவை) ஏற்படுத்துதல் அல்லது நிறுவுதல் மேலும் அந்த நிறுவனம் என்றும் நீடித்திருக்க, முன்னேற்பாடுகள், நிபந்தனைகளை ஏற்படுத்துதல்.

ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி, இரண்டாம் பதிப்பு, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகம் அலுவலகம்.

ஸ்ரீல பிரபுபாதா அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியராக செயல்படும் வழிகளை, கீழே வரிசைப்படுத்துக

**ஸ்ரீல பிரபுபாதா ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் சக்தியளிக்கப்பட்ட பிரதிநிதி**

நவீன காலத்தின், ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் சக்தியளிக்கப்பட்ட பிரதிநிதியாக ஸ்ரீல பிரபுபாதரை ஏன் ஏற்றுக்கொள்கிறோம் என்பதற்கான காரணங்களை, கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில், வரிசைப்படுத்துக.

**மோரா சேனாபதி பக்தா**

ஏபே நாம சங்கீர்த்தனா திக்ஷ்ண கடக லையா அந்தர அஸுர ஜீவேர பேலிபே கதியா
யதி பாபி சாடி தர்ம துரே தேசே யயா மோரா சேனாபதி பக்த யைபே ததயா

நிறைய மக்களுடன் சேர்ந்து ஹரே கிருஷ்ண மஹா மந்திராவை பாடுவது (நாம சங்கீர்தனா) என்ற கூரிய வாளை எடுத்துக்கொண்டு அனைத்து கட்டுண்ட ஆத்மாக்களின் இருதயங்களில் உள்ள அசுர மனப்பான்மையை அடியோடு அழித்து வேரறுப்பேன். மதக்கோட்பாடுகளை விடுத்து சில பாவ ஆத்மாக்கள் தூர தேசங்களுக்கு தப்புவதாயின், அவர்களுக்கு கிருஷண உணர்வை அளிப்பதற்கு எனது சேனாபதி பக்தா பிறகு வருவார்.

- லோசன தாஸ் தாகூரா தனது சைதன்ய மங்களாவில் (சூத்ர காண்டம், பாடல் 12 பதங்கள் 564-565)

**எதிர்காலத்தில் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம்**

எதிர்காலத்தில் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாப ஆச்சாரியராகவும், தலைமையான சீக்ஷா குருவாகவும் ஸ்ரீல பிரபுபாதர் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதை எவ்வாறு உறுதிப்படுத்த முடியும்?

கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் தங்களுடைய எண்ணங்களை எழுதுக.

**நான் பகவான் சைதன்யரின் செய்தியை எடுத்துச் செல்பவன் மட்டுமே.........**

என்னுடைய புத்தகங்கள், கடிதங்கள் மற்றும் நான் கூட்டங்களில் பேசுவதற்கும் ஆன உங்களது பாராட்டுதலுக்கு, நான் மிகவும் நன்றி கூறுகிறேன். அவை என்னுடைய வார்த்தைகள் இல்லை. நான் திரும்ப, திரும்ப தெரிவித்தது போல, நான் சீடப் பரம்பரை மூலமாக பகவான் சைதன்யரின் செய்தியை எடுத்துச் செல்பவன் மட்டுமே மற்றும் நான் கூடுதல், குறைத்தல் எதையும் செய்வதில்லை. அதைப்போலவே, நீங்கள் இந்த வார்த்தைகளை தொடர்ச்சியாக எடுத்துச் சென்றால், பிறகு திவ்யமான பரம்பரை முறை சரியாகப் பாதுகாக்கப்படும் மற்றும் மக்கள் பொதுவாக பயன்அடைவார்கள்.

- 'பகவானி'ற்கு எழுதிய கடிதம், லாஸ் ஏஞ்சல்ஸ், 10, ஜனவரி, 1970

**பாடம் நான்கு அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் குருக்கள்**

**பாடத் தலைப்புகள்**

- ஒரு சிஷ்யரின் குணங்கள்
- ஒரு அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் உள்ள குருவின் மனோநிலை
- குருக்கள் மற்றும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் அதிகாரிகளின் கட்டளைகள்
- அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்திற்கு வெளியே உள்ள குருக்கள்

**ஒரு சிஷ்யரின் குணங்கள்**

ஒரு சிஷ்யரின் முக்கியமான குணங்கள் சிலவற்றை வரிசைப்படுத்துக

**ஒரு அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் உள்ள குருவின் மனோநிலை**

கீழே கொடுக்கப்பட்டவை குறித்து, பொதுவாக ஒரு அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் உள்ள குருவின் (தற்போது உள்ள மற்றும் எதிர்காலத்திய) ஏற்ற மனோநிலை எவ்வாறு இருக்க வேண்டும் என்று கருதுகிறீர்கள்?

- ஸ்ரீல பிரபுபாதரின் உபதேசங்கள்
- அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் உள்ள அதிகார அமைப்பு

உங்கள் எண்ணங்களை எழுதுக...........

**குருக்கள் மற்றும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்க அதிகாரிகளின் உபதேசங்கள்**

**குழு பயிற்சி**

கீழே கொடுக்கப்பட்டவற்றை மையமாகக் கொண்டு, ஒரு சிறிய நாடகம் அரங்கேற்றுக.

1. உள்ளூர் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்க அதிகாரியின் உபதேசங்கள், ஒருவருடைய குருவின் உபதேசங்களுக்கு மாறாக இருக்கும் சூழ்நிலையை, பொருத்தமான வழியில் சமாளித்தல்.
2. உள்ளூர் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்க அதிகாரியின் உபதேசங்கள், ஒருவருடைய குருவின் உபதேசங்களுக்கு மாறாக இருக்கும் சூழ்நிலையை, பொருத்தமற்ற வழியில் சமாளித்தல்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தை, இந்த நாடகம் பற்றிய விவாதத்தின் போது, குறிப்புகள் எடுப்பதற்கு பயன்படுத்துக.

**அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்திற்கு வெளியே உள்ள குருக்கள்**

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்திற்குள் உள்ள தீக்ஷா மற்றும் சீக்ஷா குருக்களை ஏற்றுக்கொள்வதில் உள்ள நன்மைகளை, கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் பட்டியலிடுக.

**அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் ஒரு குருவின் மனோநிலை**

**ஸ்ரீல பிரபுபாதருக்கும், குரு பரம்பரைக்கும் சேவை**

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் தீக்ஷாகுரு அல்லது சீக்ஷா குரு என்ற சேவையை ஏற்றுக் கொள்ளுபவர்கள் ஸ்ரீல பிரபுபாதாவின் உபதேசங்களை எடுத்துச் சொல்வதில், தங்களுடைய வார்த்தைகளிலும், சொந்த நடத்தையிலும் உயர்வாக இருக்க உத்தரவிடப்படுகிறார்கள். ஸ்ரீல பிரபுபாதா மற்றும் நமது குரு பரம்பரையின் சார்பாக, சீக்ஷா குரு ஆன்மீக உபதேசங்கள் மற்றும் ஊக்கத்தினை வழங்குகிறார். ஸ்ரீல பிரபுபாதா மற்றும் நமது குரு பரம்பரைக்கும் ஒரு சேவையாக, ஆன்மீக உபதேசங்கள், உத்வேகம், முறையான தீக்ஷை, ஆன்மீகப் பெயர் மற்றும் பின்னாளில் தகுதி வாய்ந்த சிஷ்யருக்கு புனித காயத்ரி மந்திரங்கள் ஆகியவற்றை தீக்ஷா குரு வழங்குகிறார்.

- 303, ஸ்ரீல பிரபுபாதாவின் நிலை மீதான ஜி.பி.சி கூற்று

**பக்தி சித்தாந்த தாகூரின் நிர்வாக அமைப்பு**

பக்தி சித்தாந்த தாகூர், தனது மறைவின் சமயம், ஒரு நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி இயக்கத்தின் நடவடிக்கைகளை ஒத்துழைப்புடன் செயல்படுத்துமாறு, தனது அனைத்து சிஷ்யர்களையும் வேண்டிக்கொண்டார். அவர் ஒரு குறிப்பிட்ட மனிதரை அடுத்த ஆச்சாரியராக இருக்குமாறு ஆணையிடவில்லை. ஆனால் அவரது மறைவிற்குப் பிறகு,

அவருடைய தலையாய செயலாளர்கள், எந்தவித அதிகாரமும் இன்றி, ஆச்சாரியர் என்ற பதவியைப் பெறுவதற்காக, திட்டங்களை வகுத்தார்கள். யார் அடுத்த ஆச்சாரியராக இருக்கக்கூடும் என்பது குறித்து, இரண்டு பிரிவுகளாகப் பிரிந்தனர். அதன் விளைவாக, இரண்டு பிரிவுகளும் சாஸ்திரத்தின் அடிப்படையில் இல்லை அல்லது உபயோகமற்றவை. ஏனென்றால் அவர்கள் எந்தவொரு அதிகாரமும் இன்றி ஆன்மீக குருவின் கட்டளைக்குக் கீழ்படியாமல் நடந்து கொண்டார்கள்.

ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதா, ஆதி 12.8

## குரு மற்றும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் அதிகாரிகளின் கட்டளைகள்

**ஸ்ரீல பிரபுபாதருக்குப் பணியலாம், ஆனால் ஜி.பி.சி.யைப் பின்பற்ற வேண்டாம்.**

ஸ்ரீல பிரபுபாதருக்குப் பணியலாம், ஆனால் ஜி.பி.சி.யைப் பின்பற்ற வேண்டாம். தாங்கள் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் மற்றும் ஜி.பி.சி யை விரும்பவில்லை என்று அவர்கள் சொல்லும் பொழுது, உண்மையிலேயே அவர்கள் எனது ஆணையைப் பின்பற்ற விரும்பவில்லை என்றே கூறுகிறார்கள். அவர்கள் எனது ஆணையை விரும்பவில்லை என்பதே இதன் பொருள். எனது ஆணையில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை என்று அர்த்தம். என்னில் நம்பிக்கையில்லை என்று அர்த்தம். இது குரு அபராதமாகும். என் மேல் நம்பிக்கை உள்ளது என்று அவர்கள் கூறுவது வெறும் பாசாங்கு.

8 பிப்ரவரி 1975, இஸ்கான் ஹானலூலு ,ஹவாய் ,
ஸ்ரீல பிரபுபாதா லீலா – பிற்சேர்க்கை , ஸ்ரீல பிரபுபாதா லீலாம்ருதா – by SDG

## அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்திற்கு வெளியே உள்ள குருக்கள்

**நமது பரம்பரையில் இல்லாத ஒருவரிடமிருந்து கேட்க, எப்போதும் முயற்சி செய்யாதீர்கள்.**

தங்களுடைய ஆன்மீக குரு அல்லது அங்கீகரிக்கப்பட்ட நபர்களிடமிருந்து கேட்பதில் நீங்கள் உறுதியாக இருந்தால் நன்று. ஆனால் நமது பரம்பரையில் இல்லாத ஒருவரிடமிருந்து கேட்க, எப்போதும் முயற்சி செய்யாதீர்கள். அவ்வாறு கேட்பது வெறுமனே கால விரயம் மற்றும் பிறகு அந்தத் தவறை நிவர்த்தி செய்ய வேண்டும்.

- ஹம்ஸதூதாவிற்கு எழுதிய கடிதம், ஹம்பர்க், 5, செப்டம்பர், 1969

**தயவு செய்து அவர்களைத் தவிர்க்கவும்**

வான் (பான்) மகராஜா குறித்து கூற்று இணைக்கப்பட்டு, செப்டம்பர் 3, 1975 தேதியிட்ட உன்னுடைய கடிதம் கிடைக்கப் பெற்றேன். ஆதலால், நான் இப்பொழுது, எனது அனைத்து ஆன்மீகச் சகோதரர்களையும், எனது அனைத்து சிஷ்யர்களும் விலக்க வேண்டும் என ஆணையிட்டிருக்கிறேன். எனது சிஷ்யர்கள் அவர்களுடன் எந்த விவகாரங்களிலும் ஈடுபடக்கூடாது. கடிதத் தொடர்பு கூட இருக்கக் கூடாது. எனது எந்த புத்தகங்களையும் அவர்களுக்கு அளிக்கக்கூடாது. அவர்களது புத்தகங்களை வாங்கக் கூடாது. அவர்களது எந்த கோவில்களுக்கும் நீங்கள் செல்லக்கூடாது. தயவுசெய்து அவர்களைத் தவிர்க்கவும்.

- விஸ்வகர்மாவிற்கு எழுதிய கடிதம், மும்பை, 9, நவம்பர், 1975

**அவருக்கு பிரசாதம் அளியுங்கள், மூத்த வைஷ்ணவர் என கௌரவியுங்கள், ஆனால் அவர் பேசவோ அல்லது வகுப்பு அளிக்கவோ கூடாது.**

அனைத்து வைஷ்ணவர்களும் கிருஷ்ண உணர்வைப் பரப்புவதற்கு அதிகாரம் பெற்றவர்கள். இருப்பினும் அதிகாரத்தில் தரங்கள் உள்ளன. முழுமையாகப் பார்த்தால், (பான் மகராஜா) அவரின் நோக்கம் என்னை நசுக்குவதற்காக, அதற்காகவே அவர் வந்திருக்கிறார், அவ்வாறு இருக்கையில் நாம் அவரை எவ்வாறு வரவேற்க முடியும்? அவர் ஏற்கனவே ஒரு பேராசியருக்கு தவறான கருத்தை அளித்துவிட்டார். அவரை விருந்தாளியாக நடத்தலாம். அவர் நமது கிளைக்கு வந்தால், உபசரிக்கலாம். அவருக்கு பிரசாதம் அளியுங்கள். மூத்த வைஷ்ணவர் என கௌரவியுங்கள். ஆனால் அவர் பேசவோ, வகுப்பு அளிக்கவோ கூடாது. அவர் வகுப்பு அளிக்க விரும்பினால், "ஏற்கனவே ஒரு பேச்சாளர் பேசுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது" என நீங்கள் அவரிடம் சொல்லுங்கள். அவ்வளவுதான்.

- ஸத்ஸ்வரூபாவிற்கு எழுதிய கடிதம், ஹானலூலு, 4, ஜீன், 1975

**கூடுதல் மேற்கோள்கள் - பாடம் 4 - அகில உலக கிருஷ்ண பக்தி இயக்க குருக்கள் ஜி.பி.சி**

நிர்வாக அமைப்பு ஆணையம் (ஜி.பி.சி) முழு அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் இறுதி நிர்வாக ஆணையமாக இருக்கும்.

- ஸ்ரீல பிரபுபாதரின் உயில், ஜீன், 1977

**கௌடிய மடம் பிரச்சார சேவையில் தோற்றுவிட்டது**

இத்தகைய பிரச்சார செயல்களில் நீங்கள் தொடர்ந்து ஈடுபட வேண்டும். கௌடிய மடம் பிரச்சார சேவையில் தோற்றுவிட்டது. ஏனென்றால் அவர்கள் இந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டார்கள்: "ஒரு மடம் அல்லது கோவிலின் கீழ் சிறிது புகலிடம் கிடைத்தவுடன், மற்றும் சில டஜன், சில டஜன் இல்லை, ஒரு டஜன் சிஷ்யர்கள், பிறகு அவர்கள் அங்கேயே தங்களை ஸ்தர்பித்துக் கொள்கிறார்கள். இப்பொழுது "ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண" என்று பாடி, தன்னை ஒரு மாபெரும் ஜபம் செய்பவர் எனக் காட்டிக் கொள்கிறார். உனது பிரச்சாரம் என்ன….." ஆதலால் எனது குரு மகாராஜா இந்தக் கொள்கையைக் கண்டித்தார். "மன துமி கிஷோர வைஷ்ணவா". நீ எந்த மாதிரியான வைஷ்ணவர்? "பிரதிஷ்தார தரே நிர்ஜனேர கரே – மலிவான பிரபலத்திற்காக மட்டும், "ஓ அவர் ஒரு வைஷ்ணவர் அவர் ஜபம் செய்கிறார். சரிதான் …..". ஒரு கவலையுமில்லை. ஏனென்றால், பிரச்சாரம் செய்யவில்லை எனில் ஒரு கவலையுமில்லை. நீங்கள் மக்களுக்குக் காட்டலாம் "நான் இப்பொழுது மிகவும் முக்தியடைந்த ஆத்மா" என்று ஜபிக்கலாம், தியானிக்கலாம். இந்த மாதிரியான வேலை உறங்குதல் என அர்த்தம். இது எனது குரு மகாராஜாவால் கண்டிக்கப்படாது. "பரதிஷ்தார தரே நிர்ஜனேர கரே தவ ஹரிநாம கேவலா". இது வெறும் ஏமாற்றுதல். எனது குரு மகாராஜா இந்த வகையான செயலை ஆமோதிக்கவில்லை. அவர் ஆமோதிக்கவில்லை. அவர் ஒவ்வொருவரும் பிரச்சார சேவையில் ஈடுபட வேண்டும் என்றே விரும்பினார்.

- ஸ்ரீமத் பாகவதம் 6.3.18 – கோரக்பூர், பிப்ரவரி, 11, 1971

**ஜி.பி.சி யின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்வது என்பது ஸ்ரீல பிரபுபாதரின் கட்டளையாகும்**

வைஷ்ணவ கோட்பாடுகளின்படி ஒரு குருவின் அடிப்படையான, தகுதியான பண்பு யாதெனில் அவர் தனது சொந்த குருவின் கட்டளையைப் பின்பற்றுவது என்பதே. அவர் ஒரு பொழுதும் எஜமானராவதில்லை. எப்பொழுதும் சேவகனாகவே தொடர்ந்து இருக்கிறார். ஆதலால், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் ஒரு குரு என்ற தகுதியைக் கொள்வதற்கு, ஸ்ரீல பிரபுபாதரின் கட்டளைகளை கண்டிப்புடன் பின்பற்றுதல் என்பது மிகவும் அவசியம். ஸ்ரீல பிரபுபாதரின் ஆணை என்னவென்றால், ஜி.பி.சி யின் அதிகாரத்தின் கீழ், அனைத்து பக்தர்களும் ஒத்துழைப்புடன் சேவை செய்ய வேண்டும் என்பதே. ஜி.பி.சியின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளுதல் என்பது ஒருவரின் தன்னிச்சையான விருப்பம் இல்லை. ஏனென்றால் அது ஸ்ரீல பிரபுபாதரின் ஆணை. குரு என்ற சொல்லுக்கே அவசியமானது.

**ஒரு சிஷ்யர் தனது ஆன்மீக குருவின் கட்டளைகளை பிறழாமல், மாறுபாடு இல்லாமல் நிறைவேற்ற வேண்டும்.**

இது தொடர்பாக, ஸ்ரீ பக்தி சிந்தாந்த சரஸ்வதி கோஸ்வாமி மகராஜா விமர்சிக்கிறார்: "ஒருவர் அவருடைய ஆன்மீக குருவிடமிருந்து கேட்கும் வார்த்தைகளுக்கேற்ப, அவ்வாறே செயல்பட்டால், அவருடைய வாழ்வில் முழுமையாக வெற்றி பெற்றவராக முடியும்". ஆன்மீக குருவின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளுதல் "ஸ்ரௌத பாக்யா" எனப்படுகிறது. ஆன்மீக குருவின் கட்டளைகளை பிறழாமல் நிறைவேற்ற வேண்டும் என்பதை இது குறிக்கிறது. "ஒரு சிஷ்யர் தனது ஆன்மீக குருவின் வார்த்தைகளை தனது வாழ்வாதாரமாக ஆக ஏற்றுக்கொள்ள வேண்டும்" என ஸ்ரீல விஸ்வநாத சக்கரவர்த்தி தாகூரா இது தொடர்பாக, குறிப்பிட்டுள்ளார்.

- ஸ்ரீ சைதன்ய சரிதாமிருதா, ஆதி 7.72

**ஸ்ரீல பிரபுபாதா மட்டுமே, ஆனால் அவருடைய ஜி.பி.சி யை பின்பற்றவில்லை**

ஸ்ரீல பிரபுபாதரின் அறையில் மற்றுமொரு எதிர்ப்பு நிகழ்ந்தது. சில பக்தர்கள் "ஸ்ரீல பிரபுபாதரின் மேல் நம்பிக்கை கொண்டு அவருக்குக் கீழ்படிய முடியும், ஆனால் அவருடைய ஜி.பி.சி பிரதிநிதியையோ அல்லது அவரின் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தையும் பின்பற்ற முடியாது " என வற்புறுத்தினார்கள். ஸ்ரீல பிரபுபாதரின் அறையில் இருந்த பக்தர்கள் முன்னர் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஹவாய் கிளையின் தலைவர்களாக இருந்தனர். பிறகு அங்கிருந்து விலகி, தற்போது நிதி மற்றும் சொத்துக்களை அவர்களது சொந்த பெயரில் உபயோகிப்பதாக பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள். பிரபுபாதர் அவர்களை தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தார். "நீங்கள் ஏன் விலகிச் சென்றீர்கள்? ஏன் சரண் அடைவதில்லை? ஏன் நீங்கள் தங்குவதில்லை"? ஆனால் அவர்கள் தாங்கள் ஸ்ரீல பிரபுபாதரை நம்பும் அதே சமயம் ஜி.பி.சியை நம்ப முடியாது என வற்புறுத்தினர்.

ஸ்ரீல பிரபுபாதரின் "சரணடை" என்ற எளிய கோரிக்கையை அவர்கள் மறுத்ததில் எரிச்சலடைந்து அந்த அறையில் இருந்த ஜி.பி.சி உறுப்பினர்களில் ஒருவர் கேட்டார். "நீங்கள் பிரபுபாதரை ஏற்பதாக சொல்கிறீர்கள்"

அவர்கள் பதிலளித்தனர் "ஆம்"

"அவரில் நம்பிக்கை உள்ளது என கூறுகிறீர்கள்?

"ஆம்"

"அவர் என்ன கேட்டாலும், பின்பற்ற முடியும் என்று கூறுகிறீர்கள்?

"ஆம்"

"அப்படியானால், பிரபுபாதா் உங்களை ஜி.பி.சியைப் பின்பற்றச் சொன்னால், நீங்கள் அதை செய்வீா்களா?"

அறை முழுவதும் நிசப்தமும், பதற்றமும் ஆனது.

"இல்லை. நாங்கள் பின்பற்ற முடியாது"

அவா்கள் "இல்லை" என்று சொன்ன போது, ஸ்ரீல பிரபுபாதா் அவரது மேஜையின் மீது தனது முஷ்டியால் குத்தினாா். அந்த வழி தப்பிய பக்தா்களைச் சுட்டிக்காட்டி கூறினாா். "இந்த கபடத்தைப் பாருங்கள்". ஸ்ரீல பிரபுபாதரின் இந்த கூரான முடிவிற்குப் பிறகும் அவா்கள் தங்களுடைய "உங்களிடம் சரணடைகிறோம். ஆனால் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்திடம் அல்ல" என்ற கொள்கையை சாதித்தனா்.

ஸ்ரீல பிரபுபாதா் அவா்களை அறையை விட்டு வெளியேறச் சொல்லும் வரையிலும், அவா்கள் இதை சாதித்தனா். அந்த அறையில் இருந்த மற்ற பக்தா்களிடம் பிரபுபாதா் பிறகு குறிப்பிட்டாா்: "தாங்கள் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் மற்றும் ஜி.பி.சி யை விரும்பவில்லை என்று அவா்கள் சொல்லும் பொழுது, உண்மையிலேயே அவா்கள் எனது ஆணையைப் பின்பற்ற விரும்பவில்லை என்றே கூறுகிறாா்கள். அவா்கள் எனது ஆணையை விரும்பவில்லை என்பதே இதன் பொருள். எனது ஆணையில் அவா்களுக்கு நம்பிக்கையில்லை என்று அா்த்தம். என்னில் நம்பிக்கையில் என்று அா்த்தம். இது குரு அபராதமாகும். என் மேல் நம்பிக்கை உள்ளது என்று அவா்கள் கூறுவது வெறும் பாசாங்கு:

**ஒரு சிஷ்யா் தனது ஆன்மீக குருவின் முன்னிலையில் எப்பொழுதும் ஒரு முட்டாளாக இருக்க வேண்டும்**

ஒரு சிஷ்யா் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்குச் சைதன்ய மஹாபிரபுவே ஒரு குற்றமற்ற உதாரணமாகத் திகழ்ந்தாா். ஒரு ஆன்மீகக் குருவிற்கு ஒவ்வொரு சிஷ்யரையையும் ஒரு குறிப்பிட்ட சேவையில் எவ்வாறு ஈடுபடுத்த வேண்டும் என்று மிக நன்கு தெரியும். ஆனால் ஒரு சிஷ்யா் தன்னை மிகவும் முன்னேறியவராகக் கருதி, குருவின் கட்டளைகளை விடுத்து, தன்னிச்சையாக செயல்பட்டால், அவரது சொந்த ஆன்மீக முன்னேற்றத்தை அவரே தடை செய்கிறாா். ஒவ்வொரு சிஷ்யரும் கிருஷ்ண விஞ்ஞானத்தில் தனக்கு முற்றிலும் எதுவும் தெரியாது என தன்னைக் கருத வேண்டும், மற்றும் ஆன்மீக குருவின் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும். இவ்வாறாக கிருஷ்ண உணா்வில் திறமையுள்ளவராக முடியும். ஒரு சிஷ்யா் தனது ஆன்மீக குருவின் முன்னிலையில் எப்பொழுதும் ஒரு முட்டாளாக இருக்க வேண்டும்.


- ஸ்ரீ சைதன்ய சரிதாமிருதா ஆதிலீலா 7.72

**அறிவுள்ள ஒரு மனிதன் நல்லதையும், கெட்டதையும் பகுத்தறியக் கற்றுக் கொண்டு, அதற்கேற்ப செயற்பட்டு……**

ஆகவே தம்முடைய மனமும் புத்தியும் எப்பொழுதும் ஆரோக்கியமாகவும், உறுதியாகவும் இருக்கும்படி நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். இதனால் பிரச்சனைகள் நிறைந்த ஒரு வாழ்வில்கூட வாழ்வின் இலட்சியத்தை நம்மால் பகுத்தறிய முடியும். அறிவுள்ள ஒரு மனிதன் நல்லதையும், கெட்டதையும் பகுத்தறியக் கற்றுக் கொண்டு, அதற்கேற்ப செயற்பட்டு, வாழ்வின் இலட்சியத்தை அடைய வேண்டும்.

- ஸ்ரீமத் பாகவதம் 7.6.5

**அகில உலக கிருக்ஷ்ண பக்தி இயக்கத்தின் குருக்களுக்கும், நிர்வாகிகளுக்கும் இடையேயான உறவு**




குறிப்பு : மேற்கூறிய விளக்கப்படம், கற்கும் நோக்கங்களுக்காக மட்டுமே, நிர்வாக ஆணை அன்று.

## பாடம் 5 குரு பாத ஆஸ்ரயா

**பாடத் தலைப்புகள்**

| |
|---|
| பிரபுபாத ஆஷ்ரயா<br>தீக்ஷா , சீக்ஷா குரு – பாத ஆஷ்ரயா |

**பிரபுபாத ஆஷ்ரயாவிற்கான வழிகாட்டுதல்கள்**

நமது ஆன்மீக வாழ்வின் தொடக்கத்திலிருந்தே, ஸ்ரீல பிரபுபாதருடன் ஆழ்ந்த, நம்பத்தக்க, பக்தி ரீதியான உறவை வளர்த்துக் கொள்வதற்கு, சில குறிப்பிட்ட வழிகளைப் பட்டியலிடுக.

| |
|---|
| |

**ஸ்ரீல பிரபுபாதா ஒவ்வொரு அகில உலக கிருஷ்ண பக்தி இயக்க பக்தருடன் தனிப்பட்ட உறவு கொண்டுள்ளார்.**

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர், தலைமையான குரு மற்றும் இறுதி அதிகாரி என்ற முறையில், ஸ்ரீல பிரபுபாதா ஒவ்வொரு அகில உலக கிருஷ்ண பக்தி இயக்க பக்தருடன் தனிப்பட்ட உறவு கொண்டுள்ளார்.

- 303, ஸ்ரீல பிரபுபாதாவின் நிலை மீதான ஜி.பி.சி. கூற்று

**புதிய உறுப்பினர்களை ஸ்ரீல பிரபுபாதரிடம் புகலிடம் கொள்ள அறிவுறுத்துதல்**

ஸ்ரீல பிரபுபாதரிடம் புகலிடம் கொள்வதற்கும், பின் கிருஷ்ண உணர்வில் அவர்களுக்கு அறிவுரை வழங்குபவர்களிடமிருந்து வழிகாட்டுதல், பயிற்சி மற்றும் உதவியைப் பெறுவதற்கும், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்க பக்தர்கள் புதிய உறுப்பினர்களை அறிவுறுத்தலாம். எப்பொழுது, யாரிடமிருந்து தீக்ஷை பெற வேண்டும் என்பதை அகில உலக கிருஷ்ண பக்தி இயக்க உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கலாம். ஸ்தாபக ஆச்சாரியர் மற்றும் முதன்மையான சீக்ஷா குரு என ஸ்ரீல பிரபுபாதரின் மீது தனது கவனத்தை அவர்கள் ஒருமுகப்படுத்த வேண்டும்.

**குறைந்த பட்சமாக, ஸ்ரீல பிரபுபாதரின் பிரணாம மந்திரத்தின் முதல் பகுதியை உச்சரிக்க வேண்டும்**

தங்களது வணக்கங்களை சமர்பிக்கும் பொழுது, அனைத்து பேர- சிஷ்யர்களும், எதிர்கால சந்ததியினரும், தங்களுடைய தீக்ஷா குருவின் பிரணாம மந்திரத்தை உச்சரித்தபின், ஸ்தாபக ஆச்சாரியருக்கு மரியாதை செலுத்தும் விதமாக, குறைந்தபட்சமாக, ஸ்ரீல பிரபுபாதரின் பிரணாம மந்திரத்தின் முதல் பகுதியை உச்சரிக்க வேண்டும்.

**அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் சிக்ஷா மற்றும் திக்ஷா இவற்றின் நோக்கம்**

ஸ்ரீல பிரபுபாதரின் உபதேசங்களில் புகலிடம் கொண்டு, அவருடன் திடமான உறவை உறுதிப்படுத்திய பிறகு, குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்காவது நடைமுறை பக்தித் தொண்டினை (சாதனா) கண்டிப்புடன் பயிற்சி செய்த பிறகு, அவர்கள் ஒரு அங்கீகரிக்க அகில உலக கிருஷ்ண பக்தி இயக்க பக்தரை தனது எதிர்கால தீக்ஷா குருவாக ஏற்றுக்கொள்ளலாம். அதன் பிறகும், குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்குப் பிறகு, அவரிடமிருந்து வைஷ்ணவ தீக்ஷையை ஏற்றுக் கொள்ளலாம். விசுவாசம், பற்றுதல் மற்றும் அன்பு - இவைகளின் அடிப்படையில் ஸ்ரீல பிரபுபாதருடன் பக்தர்களுக்கு உள்ள உறவை பலப்படுத்துவதே, அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் சிக்ஷா மற்றும் திக்ஷா இவற்றின் நோக்கம் என புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

- இஸ்கான் சட்டம் 7.21 முதல் (ஹரிநாம) தீட்சை


**தீக்ஷா / சிக்ஷா குரு – பாத ஆஷ்ரயா மற்றும் பிரபுபாத ஆஷ்ரயா**

தீக்ஷா / சிக்ஷா குரு – பாத ஆஷ்ரயாவிற்கும், பிரபுபாதா ஆஷ்ரயாவிற்கும் உள்ள தொடர்பு என்ன?

| |
|---|
| |

**அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் குரு – பாத ஆஷ்ரயா**

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில், ஒரு சிஷ்யர் மூன்று இடங்களில் புகலிடம் கொள்ள வேண்டும்.



**தீக்ஷா குருவின் உபதேசங்களுக்கு எதிராக சிக்ஷா குரு எதையும், பேசுவதில்லை**

சில சமயம் தீக்ஷா குரு எப்போதும் இல்லாமல் இருக்கலாம். ஆதலால் ஒருவர் முன்னேறிய பக்தரிடமிருந்து பயிற்சி மற்றும் அறிவுரையை எடுத்துக் கொள்ளலாம். இதுவே சிக்ஷா குரு எனப்படுகிறது சிக்ஷா குரு என்றால் திக்ஷா குருவின் உபதேசங்களுக்கு எதிராக எதையாவது பேசுபவர் என்று அர்த்தமல்ல. அப்படியானால் அவர் ஒரு சிக்ஷர் குருவாக மாட்டார் அவர் ஒரு முட்டாள்.

- பகவத் கீதா 17.13 – ஹானலூலு, ஜூலை 4, 1974

**அவரது கருணையின் வெவ்வேறு தோற்றங்களை ஒன்று சேர்ப்பதன் மூலமாக, ஒரு பக்தர் இறுதியில் ஸ்ரீகிருஷ்ணரால் விடுவிக்கப்படுகிறார்.**

அவ்வாறாக, அவரது கருணையின் வெவ்வேறு தோற்றங்களை ஒன்று சேர்ப்பதன் மூலமாக, ஒரு பக்தர் இறுதியில் ஸ்ரீகிருஷ்ணரால் விடுவிக்கப்படுகிறார். சைத்ய குரு, ஸ்ரீல பிரபுபாதா, குரு பரம்பரை, ஒருவரின் தீக்ஷா குரு, மற்ற சீக்ஷா குருக்கள், கிருஷ்ணரின் புனித நாமம், சாஸ்திரங்கள் மற்றும் ஒன்பதுவித பக்தித் தொண்டுகள் ஆகியவை இவற்றில் அடக்கம். இவைதான் என வரையறுக்கப்படவில்லை.

- 303, ஸ்ரீல பிரபுபாதாவின் நிலை மீதான ஜி.பி.சி. கூற்று

**அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் தலைமையான குருவாக உள்ளார்.**

இத்தகைய ஒத்துழைக்கின்ற மூலத்தத்துவங்களுக்குள், ஸ்ரீல பிரபுபாதா அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர் என்ற முறையில், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் தலைமையான குருவாக உள்ளார். அனைத்து உறுப்பினர்களும், அனைத்து தலைமுறைகளுக்கும் ஸ்ரீல பிரபுபாதாவிடம் புகலிடம் கொள்வதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஸ்ரீல பிரபுபாதாவின் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம், சேவை, உபதேசங்கள், அவரது புத்தகங்கள் மூலமாக, ஸ்ரீல பிரபுபாதாவுடன் தனிப்பட்ட உறவு கொள்வதற்கு, அனைத்து அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் உறுப்பினர்களும் உரிமை பெறுகிறார்கள் மற்றும் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

- 303, ஸ்ரீல பிரபுபாதாவின் நிலை மீதான ஜி.பி.சி. கூற்று

## பாடம் 6 குருவைத் தேர்ந்தெடுத்தல்

**பாடத் தலைப்புகள்**

| |
|---|
| ஒரு அங்கீகரிக்கப்பட்ட குருவின் தகுதிகள்<br>குருவைத் தேர்ந்தெடுத்தல் |

ஒரு குருவிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?

**ஒரு அங்கீகரிக்கப்பட்ட குருவின் தகுதிகள்**

ஒரு அங்கீகரிக்கப்பட்ட குருவின் தகுதிகள் யாவை? விவாதங்களிலிருந்து கீழ்கண்ட கட்டத்தில், குறிப்புகளை எழுதுக -

**<u>ஒரு அங்கீகரிக்கபடப்ட குருவின் தகுதிகள்</u>**

வாசோ – வேகம் மனஸ: க்ரோத – வேகம்
ஜிஹ்வா – வேகம் உதரோபஸ்த – வேகம்
ஏதான் வேகான் யோ விஷஹேத தீர
ஸர்வாம் அபிமாம் ப்ருதிவிம் ஸ சிஷ்யாத்

'பேச்சின் தூண்டுதல், மனதின் தேவைகள், கோபத்தின் செயல்கள் மற்றும் நாக்கு, வயிறு, பாலுறுப்புகள் ஆகியவற்றின் தூண்டுதல்களை பொறுத்துக் கொள்ள கூடிய நிதான புத்தியுள்ள ஒருவர் உலகம் முழுவதிலும் சீடர்களை ஏற்கும் தகுதி வாய்ந்தவராவார்.

- உபதேசாமிருதம், பதம்1

**இரண்டு தகுதிகள்**

தத் - விஞ்னானார்தம் குரும் ஏவாபிகச்சேத்
சமித் - பானிஹி ஸ்ரோத்ரியம் ப்ரஹ்ம – நிஷ்தம்

\- முண்டக உபநிஷத் 1.2.12

இத்தகைய விஷயங்களை முறையாகப் புரிந்து கொள்வதற்கு, முழு முதற் கடவுளிடம் உறுதியாக பக்தி கொண்டுள்ளவரும் வேதங்களில் நன்கு கற்றறிந்தவருமான ஒரு ஆன்மீக குருவை ஒருவர் பணிவுடன், அணுக வேண்டும்.

தகுதி பெற்ற குரு தானே இட்டுக்கட்டி உருவாக்கிய அறிவு முறையைக் கற்பிப்பதில்லை. அவரது அறிவு பரம்பரை முறையில் கற்கப்பட்டதாகையால் தரமானது. மேலும், அவர் புருஷோத்தமனாகிய முழுமுதற் கடவுளின் சேவையில் திடமாக நிலை பெற்றவர். (ப்ரஹம நிஷ்டம்). இவை அவரது இரு தகுதிகள். அவர் வேத அறிவைப் பரம்பரை முறையில் கற்றிருக்க வேண்டும். பரமபுருஷனின் சேவையில் நிலைத்தவராக இருந்தல் வேண்டும். அவர் அறிஞராக வேண்டுமென்பதில்லை. ஆனால் அவர் அதிகாரம் பெற்ற ஒருவரிடமிருந்து கேட்டறிந்தவராக இருக்க வேண்டும்.


\- பகவான் ஸ்ரீல கபிலரின் யோகமுறை, பதம் 4, அதிகாரம் பெற்ற ஆன்மீக குருவை நாடல்

**குருவைத் தேர்ந்தெடுத்தல்**

குருவைத் தேர்ந்தெடுப்பதற்கான, சில பொருத்தமற்ற காரணங்களை, கீழேயுள்ள கட்டத்தில் பட்டியலிடுக.

**குருவைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிமுறைகள்**

கீழே கொடுக்கப்பட்ட வழிமுறைகள், தீக்ஷை அளிப்பதற்கான வழிமுறைகள் குறித்த அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சட்டத்தை தழுவியது



**ஒரு வருட தயார்படுத்தும் காலம்**

- அனுகூலமான பக்தித் தொண்டில் ஈடுபடுதல்
- நான்கு கட்டுப்பாட்டு விதிகளை கண்டிப்புடன் பின்பற்றுதல்
- ஒரு நாளைக்கு பதினாறு சுற்றுகள் ஜபம் செய்தல்
- முழு காலை நேர நிகழ்ச்சிகளில் பங்கெடுப்பது (கோவிலில் வசிப்பவர்)
- வீட்டில் அல்லது நாம – ஹட்டாவில் காலை நேர நிகழ்ச்சியில் பங்கெடுப்பது (கோவிலில் வசிக்காதவர்களுக்கு)

**பிரபுபாத ஆஷ்ரயா**

- தலைமையான சீக்ஷா குரு என்று ஸ்ரீல பிரபுபாதரின் மேல் கவனம் கொள்ளுதல்
- வணக்கங்களைச் சமர்பிக்கும் பொழுது, ஸ்ரீல பிரபுபாதரின் பிரணாம மந்திரங்களை உச்சரித்தல்
- அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சம்பந்தப்பட்ட ஆன்மீக அதிகாரிகளிடமிருந்து (சீக்ஷா குருக்கள்) வழிகாட்டுதலை பெறுதல்.

**தீக்ஷா மற்றும் சீக்ஷா குரு பாத ஆஷ்ரயா**

மேற்கூறியவற்றை குறைந்தபட்சம் ஆறு மாத காலம் பின்பற்றிய பிறகு, ஒருவர் தனது சீக்ஷா குருக்களின் மத்தியிலிருந்து, அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட தீக்ஷா குருவைத் தேர்ந்தெடுக்கலாம். ஆறு மாத காலம் என்பது குறைந்தபட்ச காலம் என்பதைக் கருத்தில் கொள்க. ஒருவர் இந்த தேர்வை செய்வதற்கு தேவைப்பட்ட கால அவகாசம் எடுத்துக் கொள்ளலாம்.

- தங்களது சொந்த புத்தியைப் பிரயோகித்து, குருவைத் தேர்ந்தெடுப்பது மாணவர்களின் பொறுப்பு.
- கோவில் தலைவர் அல்லது தொடர்புடைய அதிகாரிக்குத் தெரியப்படுத்துதல்.
- அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் அதிகாரியால் கொடுக்கப்பட்ட எழுத்துப்பூர்வமான தேர்வை எழுதவும்.
- அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் அதிகாரியிடமிருந்து முறையான சிபாரிசு கடிதம் பெறுதல்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட குருவிடமிருந்து அனுமதி பெறுதல்
- அந்த குருவை வழிபட ஆரம்பித்தல். அவருடைய பிரணாம மந்திரத்தை உச்சரித்தல், அதன்பிறகு குறைந்தபட்சம் ஸ்ரீல பிரபுபாதரின் பிரணாம மந்திரத்தின் முதல் பகுதியை, உச்சரித்தல்.
- ஒருவர் தன்னுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட தீக்ஷா குருவிடமிருந்து கட்டளைகளைப் பெறுவதோடு, தன்னுடைய சீக்ஷா குருக்களிடம் இருந்து தொடர்ந்து அறிவுரைகளை ஏற்றுக்கொள்கிறார்.
- ஒருவர் வேறொரு அகில உலக கிருஷ்ண பக்தி இயக்க குருவிடம் தீக்ஷை எடுக்க தீர்மானித்தால் குருவிற்கும், உள்ளூர் நிர்வாகிகளுக்கும் தெரியப்படுத்துதல்

**ஹரி – நாம தீக்ஷை**

- அதன் பின்னர் மேலும், குறைந்தபட்சம் ஆறு மாத காலத்திற்குப் பிறகு ஒருவர் வைஷ்ணவ திக்ஷையை ஏற்றுக் கொள்ளலாம்.
- குருவிற்கு ஒரு மாணவருக்குத் தீக்ஷை அளிக்க வேண்டும் என்ற எந்த கட்டாயமும் இல்லை.
- தீக்ஷைக்குப் பிறகு, தனது தீக்ஷா குருவின் அனுமதியோடு ஒருவர் மேலும் சீக்ஷா குருக்களை ஏற்றுக் கொள்ளலாம்.

**ஒரு அங்கீகரிக்கப்பட்ட குருவின் தகுதிகள்**
**தனிப்பட்ட நடத்தை மற்றும் பிரச்சாரம்**

ஆசார, பிரசார – நாமேர கரஹ 'துயி' கார்ய
துமி – சர்வ குரு, துமி ஜிகதேர ஆர்ய

"நீங்கள் ஹரி நாமத்திற்கு சம்பந்தமான உங்களது கடமைகளை, உங்களது தனிப்பட்ட நடத்தையின் மூலமாகவும், உங்களது பிரச்சாரம் மூலமாகவும் ஒரே சமயத்தில் நிறைவேற்றுங்கள் இவ்வாறாக, நீங்கள் மிகவும் முன்னேறிய பக்தர் என்பதால் இந்த முழு உலகின் ஆன்மீக குருவாவீர்கள்.

**பொருளுரை**

ஸநாதன கோஸ்வாமி இங்கே இந்த உலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குரு குறித்து தெளிவாக வரையறுக்கிறார். இதன் தொடர்பாக விவரிக்கப்பட்டிருக்கும் தகுதிகள் யாதெனில் ஒருவர் சாஸ்திரி விதிகளுக்கு ஏற்ப செயல்பட வேண்டும் மற்றும் அதே நேரத்தில் பிரச்சாரமும் செய்ய வேண்டும். இவ்வாறு செயல்படும் ஒருவர் ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குரு.

- ஸ்ரீ சைதன்ய சரிதாமிருதா அந்த்யா 4.103

**எந்த ஆஸ்ரமத்தில் இருந்தும்....**

கிபா விப்ரா, கிபா நியாஸி, சூத்ர கேன நயா
யே கிருஷ்ண – தத்வ – வேதா, சேய், குரு ஹயா

ஒருவர் ஒரு பிராமணராக, ஒரு சந்நியாசியாக அல்லது ஒரு சூத்ரா – அவர் என்னவாக இருந்தாலும், அவர் கிருஷ்ண விஞ்ஞானத்தை அறிந்திருந்தால், ஒரு ஆன்மீக குருவாக முடியும்.

- ஸ்ரீ சைதன்ய சரிதாமிருதா மத்ய 8.128

**நீங்கள் ஒவ்வொருவரும் ஆன்மீக குருவாகலாம்**

பகவான் சைதன்யர் கூறுகிறார். "நீங்கள் ஒவ்வொருவரும் ஆன்மீக குருவாகுங்கள். நீங்கள் ஒவ்வொருவரும். ஏன் ஒன்று, இரண்டு? நீங்கள் ஒவ்வொருவரும்." "ஒ ஆன்மீக குரு என்பது மிகவும் கடினமான செயல்" இல்லை. கடினமான செயல் இல்லை. சைதன்ய மஹா.... அமாரா அஜ்னாயா என்னுடைய கட்டளையை மட்டும் நிறைவேற்றுங்கள். அவ்வளவுதான், பிறகு நீங்கள் ஆன்மீக குருவாகலாம்.

- பகவத் கீதை, 4.1 – 2, கொலம்பஸ், மே 9, 1969

**"என் கட்டளையின் பேரில்"- இது தீர்மானிக்கிற முக்கிய குறிப்பு**

ஆதலால் நீங்கள் எவ்வாறு ஒரு ஆன்மீக குருவாக முடியும்? ஒரு ஆன்மீக குரு போதுமான அறிவை, இன்னும் பல தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்றில்லை. எந்த தகுதிகளும் இல்லாமலேயே, ஒருவர் ஒரு ஆன்மீக குருவாக முடியும் எவ்வாறு? இப்பொழுது இந்த வழியானது, சைதன்ய மஹாபிரபு கூறுகிறார். அமாரா அஜனாயா. "எனது கட்டளையின் பேரில்". இதுதான் தீர்மானிக்கிற குறிப்பு, ஒருவர் தன்னுடைய திடீர் விருப்பங்களால் ஆன்மீக குருவாக முடியாது. அவர் ஆன்மீக குரு அல்ல. ஒரு மேம்பட்ட அதிகாரியால் கட்டளையிடப்பட வேண்டும். பிறகு அவர் ஒரு ஆன்மீக குரு, அமாரா அஞ்னாயா. நமது விஷயத்தைப் போல. நமது மேம்பட்ட அதிகாரி, நமது ஆன்மீக குரு

எனக்குக் கட்டளையிட்டார்: "இந்தக் கடவுளின் நற்செய்தியை, என்னிடமிருந்து எதைக் கற்றிருந்தாலும், அதை ஆங்கிலத்தில் பிரச்சாரம் செய்ய முயற்சி செய்". ஆதலால் நாங்கள் முயற்சி செய்தோம். அவ்வளவுதான். நான் மிகவும் தகுதி வாய்ந்தவன் என்றில்லை. எனது ஒரே தகுதி யாதெனில் நான் எனது மேம்பட்ட அதிகாரியின் கட்டளையை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்தேன். அவ்வளவுதான். அதுதான் வெற்றியின் இரகசியம்.

- பகவத் கீதை 2.2, லண்டன், ஆகஸ்ட், 3, 1973

**குருவைத் தேர்ந்தெடுத்தல்**

**ஏதாவது வெறி காரணமாக ஒருவரைத் திடீரென்று குருவாக ஏற்கக்கூடாது. அது அபாயகரமான செயல்.**

ஒருவரை குருவாக ஒப்புக்கொள்ளுமுன், அவரிடம் நாம் சரணடையலாமா என்பதைக் கவனமாக ஆராய வேண்டுமென்று சாஸ்திரங்கள் பணிக்கின்றன. ஏதாவது வெறி காரணமாக ஒருவரைத் திடீரென்று குருவாக ஏற்கக்கூடாது. அது அபாயகரமான செயல். குருவும் ஒருவன் சிஷ்யனாவதற்குத் தகுதியுள்ளவனா என்பதைக் கவனிக்க வேண்டும்.

- தன்னையறியும் விஞ்ஞானம், 2- குரு என்றால் என்ன?

**குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்காவது ஒன்றாகச் சந்தியுங்கள்**

ஸ்நாதன கோஸ்வாமி எழுதிய "ஹரி பக்தி விவாஸா" வில் கூறப்பட்டிருக்கிறது :"ஆன்மீக குருவும் சிஷ்யரும் குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்காவது ஒன்றாகச் சந்திக்க வேண்டும்". இதனால், "இந்த நபரை நான் என்னுடைய குருவாக ஏற்றுக் கொள்ளலாம்" என சிஷ்யர் புரிந்து கொள்ளலாம்" மற்றும் "இங்கே ஒருவர் எனது சிஷ்யராக, தகுதியுள்ளவராக இருக்கிறார்" என குருவும் தெரிந்து கொள்ள முடியும் இந்த விவகாரம் பிறகு சுமுகமாகும்.

- ஸ்ரீமத் பாகவதம் 1. 16 25 – ஹவாய் ஜனவரி, 21, 1974

**குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்காவது, குருவிடமிருந்து கேட்க வேண்டும்.**

ஆதலால் ஒரு குருவை ஏற்றுக்கொள்ளும் முன், செய்முறை யாதெனில் குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்காவது அவரிடமிருந்து கேட்க வேண்டும். "இங்கே எனக்கு கற்பிக்கும் உண்மையான ஒரு குரு" என்று நம்பிக்கை கொள்ளும் போது, நீங்கள் அவரை குருவாக ஏற்றுக்கொள்ளுங்கள். ஷண சித்தத்தில் ஏற்றுக்கொள்ளாதீர்கள்.

**ஒருவர் தன்னுடைய ஆன்மீக குருவை நிராகரிக்கும்படியான பேராபத்தினை தானே தன்மேல் கொண்டு வரக்கூடாது.**

ஆன்மீக குருவும், சிஷ்யரும், ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்வதற்கு முன், ஒருவரை மற்றொருவர் ஆழ்ந்த சோதனைக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும் என சாஸ்திரங்கள் பரிந்துரைக்கின்றன. ஏனென்றால் சாதாரண வீட்டுப்பொருட்கள் கூட சோதித்துப் பார்த்த பிறகே கையகப்படுத்தப்படுகின்றன. உயிர்வாழிகளின் மிக சிறந்த நண்பரான, உண்மையான ஆன்மீக குருவை தேர்ந்தெடுப்பதில், ஒரு துரதிஷ்யசாலியான முட்டாள் மட்டுமே சோதனைக் காலத்திற்குத் தன்னை உட்படுத்திக் கொள்வதில் தோல்வியுறுவான். குறிப்பு என்னவென்றால் ஒருவன் விவேகமுள்ளவனாக இருந்தால், அவ்வாறான சூழ்நிலையைத் தவிர்க்க முடியும்.

- ஹரிநாம சிந்தாமணி 6

**ஒருவர் ஒரு ஆன்மீக குருவை சமூக மரபுகளின் அடிப்படையில் ஏற்கக்கூடாது**

ஒரு தீவிரமான நபர், சாஸ்திர நியமங்களின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஆன்மீக குருவை ஏற்க வேண்டும் என்பது முக்கியம். பரம்பரை, சமூக மற்றும் சபை மரபுகளின் அடிப்படையில் ஒரு ஆன்மீக குருவை ஏற்கக்கூடாது என ஸ்ரீ ஜீவகோஸ்வாமி அறிவுறுத்துகிறார். ஆன்மீக அறிவில் உண்மையான முன்னேற்றத்திற்கு ஒருவர் போலியல்லாத, தகுதி வாய்ந்த ஆன்மீக குருவைக் கண்டு கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

- சைதன்ய சரிதாமிருதா, அதி 1.35

**உங்களின் சொந்த புத்தியை உபயோகிதது, சரியாகத் தேர்ந்தெடு.**

ஒரு குறிப்பிட்ட பக்தரை, ஆன்மீக குருவாக, மாணவர்கள் தங்களது சொந்த புத்தியை உபயோகித்து சரியாகத் தேர்ந்தெடுப்பது தீக்ஷை எடுக்கும் பக்தர்களின் தனிப்பட்ட பொறுப்பு.

ஒரு ஆன்மீக குருவிடத்தில் மற்றும் தங்களை கடவுளின் திருநாட்டிற்கு அழைத்துச் செல்லும் அவரின் திறமையில் உறுதியான முதிர்ந்த நம்பிக்கையை வளர்த்த பிறகே, தீக்ஷை எடுக்க விழைபவர்கள் அவரிடமிருந்து தீக்ஷையை ஏற்றுக் கொள்ள வேண்டும் சாது சாஸ்த்திர மற்றும் குரு இவர்களின் அங்கீகரிக்கப்பட்ட மேற்கோள்களை உபயோகப்படுத்தி, ஒரு பக்தருடைய முன்னேற்றத்தின் அளவை கண்டு கொள்ள வேண்டும். ஒரு பக்தர் "அதிகாரப்பூர்வமான அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் குரு" என்ற ஆமோதிப்பைப் பெறுவது, அவர் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட முறைகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளார். மற்ற மூத்த பக்தர்களின் முடிவுகளின்படி அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள தரங்களுக்கும், வழிகாட்டுதலுக்கும் ஏற்ப தன்னை நடத்திக் கொள்கிறார் என்பதைக் குறிக்கிறது. ஆயினும் அந்த குருவின் கடவுளை உணர்ந்தறியும் அளவைக் குறிக்கும் கூற்றாக, அந்த அமோதிப்பை, நாமாகவே எடுத்துக்கொள்ளக்கூடாது. தீக்ஷை எடுக்கும் பக்தர்களின் புத்திசாலித்தனமான பாகுபாட்டிற்கு பதிலாக இந்த ஆமோதிப்பு என்று திட்டமிடப்படவில்லை.

- இஸ்கான் சட்டம் 7.2. தீக்ஷை எடுக்கும் நபரின் பொறுப்பு

**பாடம் 6 குருவைத் தேர்ந்தெடுத்தல் கூடுதல் மேற்கோள்கள்**

**அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குருவின் தகுதிகள்**

தஸ்மாத் குரும் ப்ரபத்யேத ஜிக்ஞாஸீ, ஸ்ரேய உத்தமம்
சாப்தே பரே ச நிஷ்ணாதம் ப்ரஹ்மணி உபசமாஸ்ரயம்

எனவே, உண்மையான ஆனந்தத்தை அடைவதில் உறுதி கொண்டுள்ளவன் உண்மையான ஆன்மீக குருவை நாடி, தீட்சை பெற்று, அவரிடம் சரணடைய வேண்டும். உண்மையான ஒரு குருவின் தகுதிமுறை என்னவென்றால், அவர் சாஸ்திர முடிவுகளைப் பூரணமாக உணர்ந்திருப்பதுடன், மற்றவர்களையும் இந்த முடிவுகளுக்குக் கொண்டுவரும் திறமை உடையவராவார். எல்லா பௌதிக விஷயங்களையும் விட்டுவிட்டு பரம புருஷரைச் சரணடைந்துள்ள இத்தகைய மகான்களைத் தகுதியுள்ள ஆன்மீக குருமார்களாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

- ஸ்ரீமத் பாகவதம் 11.3.21

**குருவைத் தேர்ந்தெடுத்தல்**

**ஒரு உத்தம அதிகாரியை ஆன்மீக குருவாக ஏற்றுக் கொள்வதில் ஒரு சிஷ்யர் கவனமுடன் இருக்க வேண்டும்.**

"நான் கிருஷ்ணரின் நித்ய சேவகன்" என உணரும்பொழுது கிருஷ்ணரின் சேவையைத்தவிர மற்றவைகளில் ஒருவருக்கு ஆர்வம் குறைகிறது. கிருஷ்ணரையே நினைத்துக் கொண்டு, கிருஷ்ணரின் புனித நாமங்களைப் பரப்ப செயல் முறைகளை வகுத்துக்கொண்டு, கிருஷ்ண பக்தி இயக்கத்தைப் பற்றி உலகம் முழுதும் பிரசாரம் செய்வதே தனது கடமை என்று அவர் எண்ணியிருப்பார். இத்தகையவரை உத்தமஅதிகாரியாக ஏற்றுக்கொண்டு ஆறுவகையான செயல்முறைகளின் படி அவரது தொடர்பும் சங்கமும் உடனடியாக ஏற்கப்பட வேண்டும். (ததாதி ப்ரதிக் ருஹ்நாதி) உண்மையில் மிகவும் முன்னேறியவரான வைஷ்ணவ பக்தரை ஆன்மீக (உத்தம அதிகாரி) குருவாக ஏற்றுக்கொள்ள வேண்டும். தன்னிடம் உள்ள அனைத்தையும் ஆன்மீக குருவிற்கு அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருப்பதால் ஒருவனது உடைமைகள் அவருக்கு அளிக்கப்பட வேண்டும்.

விழுப்பட்ட ஆத்மாக்களை வைணவத்திற்கு மாற்றும் திறனைக்கொண்டு உத்தம அதிகாரியான வைஷ்ணவரைக் கண்டு கொள்ளலாம் என்று ஸ்ரீல பக்திவினோத தாகுரர் குறிப்புத் தருகிறார்...... ஸ்ரீல ரூப கோஸ்வாமி இப்பதத்தில் கனிஷ்த அதிகாரி, மத்யம அதிகாரி மற்றும் உத்தம அதிகாரி ஆகியவர்களிடையே உள்ள வேறுபாடை அறியுமாறு பக்தருக்கு அறிவுரை தருகிறார்.....உத்தம அதிகாரியின் நிலையை அடைவதற்கு முன் ஒருவர் ஆன்மீக குருவாகக் கூடாது. முதனிலை வைஷ்ணவரோ இடைநிலை வைஷ்ணவரோ அதே நிலையில் உள்ளவர்களை, சீடர்களாக ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அத்தகைய சீட்டர்கள் அவரது குறையுள்ள வழிநடத்துகையால் வாழ்வின் முடிவான குறிக்கோளை அடைவதில் முன்னேற முடியாது. எனவே ஒரு சீடன் ஆன்மீக குருவாக ஓர் உத்தம அதிகாரியை ஏற்றுக்கொள்வதில் கவனமுடன் இருக்க வேண்டும்.

- உபதேசாமிருதம், பதம் 5, பொருளுரை

**உங்களுக்கு, குரு என்பதற்கு பெரிய வரையறை தேவையில்லை**

உங்களுக்கு, குரு என்பதற்கான பெரிய வரையறை தேவையில்லை. ஆதலால் வேத அறிவு வழங்கும் குறிப்பு என்னவென்றால், 'தத்-விஞ்ஞானார்தம்' ஆன்மீக வாழ்வின் விஞ்ஞானத்தை நீங்கள் அறிந்து கொள்ள விரும்பினால் 'தத்-விஞ்ஞானார்தம் ச குரும் ஏவ அபிகச்சேத் (மு.உ..1.2.12), நீங்கள் குருவை அணுகவேண்டும். மற்றும் குரு யார்? குரு என்றால் கடவுளின் நம்பகமான சேவகர் என்று பொருள்.

- ஸ்ரீ மத் பாகவதம், 6.1.26-27, பிலடெல்பியா, ஜீலை 12, 1975

## பாடம் 7 தீக்ஷை உறுதிமொழிகள்

**பாடத் தலைப்புகள்**

தீக்ஷை உறுதிமொழிகளைக் கண்டிப்புடன் பின்பற்றுதல்
தீக்ஷை உறுதிமொழிகளைப் பின்பற்றுவதில் எதிர்கொண்ட சவால்கள்
சவால்களுக்கான தீர்வுகள்
திருத்திக் கொள்வதற்கான வழிமுறைகள்

| | |
|---|---|
| மாமிசம் உண்ணாமல் இருத்தல் | தயை |
| போதை பொருட்களைத் தவிர்த்தல் | தவம் |
| தகாத உடல் உறவு கொள்ளாமல் இருத்தல் | தூய்மை |
| சூதாடுதல் தவிர்த்தல் | உண்மை |

- ஸ்ரீமத் பாகவதம் 1.7 24

**தீக்ஷை உறுதிமொழிகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம்**
**என்னால் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முடியாது அது முடியாத ஒன்று**

நான்கு கட்டுப்பாட்டு விதிகளைப் பின்பற்றுதல் என்பது மிகவும் கடினமானது இல்லை. நீங்கள் தீவிரமாக விளையாட்டல்லாமல் விரும்பினால், இந்த விஷயங்கள் நிறுத்தப்பட வேண்டும். இல்லையெனில் கேலிக்கூத்து. என்ன விரும்புகிறாயோ அதை செய். என்னால் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முடியாது. அது முடியாத ஒன்று. ஆதலால், நீங்கள் தீவிரமாக உள்ளீர்கள் எனில், இந்த விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். பிறகு தீக்ஷை எடுங்கள். மற்றபடி கேலிக்கூத்து செய்யாதீர்கள். கேலிக்கூத்து செய்யாதீர்கள். இது என்னுடைய விண்ணப்பம்.

- ஸ்ரீமத் பாகவதம் 1.16 35 – ஹவாய், ஜனவரி, 28, 1974

**<u>மற்றபடி, அவர்கள் என்னுடைய சிஷ்யர்கள் அல்ல</u>**

என்னுடைய அறிவுரை என்னவென்றால் எப்பொழுதும் குறைந்தபட்சம் பதினாறு சுற்றுகள் ஜபித்து, நான்கு கட்டுப்பாட்டு விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்பதே. என்னுடைய அனைத்து சிஷ்யவர்களும் இந்தக் கருத்தை கண்டிப்பாக ஒத்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் அவர்கள் என்னுடைய சிஷ்யர்கள் இல்லை…… நரகத்தில் வாழ்ந்தாலும், சுவர்கத்தில் வாழ்ந்தாலும், எனது சிஷ்யர்கள் இதனை பின்பற்றியே ஆக வேண்டும்.

- ராஜலட்சுமிக்கு எழுதிய கடிதம், மாயாபூர் 17, பிப்ரவரி, 1976

தீக்ஷை உறுதிமொழிகளைக் கண்டிப்பாக பின்பற்றுவதில் எதிர்க்கொள்ளும் சவால்களுக்கான சில உபயோகமுள்ள தீர்வுகளை, கீழே உள்ள கட்டிடத்தில் எழுதுக.

**தபஸ்யா என்பது கிருஷ்ண உணர்வில் நீங்கள் வெகு விரைவான முன்னேற்றம் அடைவதற்கு உங்களை வற்புறுத்தல்.**

நீங்கள் இன்னும் உங்கள் ஆன்மீக குருவிற்கு கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்ற முடியவில்லை எனில் தங்களை பக்தர் என்றும் சிஷ்யர் என்றும் கூறிக்கொள்வதில் என்ன பயன்? அது வெறும் பாசாங்கு. ஆதாலால் நீங்கள் இவ்வாறு நினைக்க வேண்டும். "நான் எனது ஆன்மீக குருவிடம் இவ்வாறாக உறுதி அளித்திருக்கிறேன். இப்பொழுது எந்த விதிவிலக்கும் அன்றி, நான் அவருக்குக் கீழ்படிய வேண்டும். இல்லையெனில், நான் என்னை அவரது சிஷ்யர் எனச் சொல்லிக்கொள்வதில் எந்த விஷயமும் இல்லை". இது கிருஷ்ண உணர்வைப் புரிந்து கொள்வதில் வெகு விரைவான முன்னேற்றம் அடைவதற்கு தங்களை வற்புறுத்தும் ஒரு தவம் அல்லது தபஸ்யா ஆகும். தவம், தபஸ்யா இல்லையெனில் முன்னேற்றம் அடைதல் இல்லை. ஆதலால் ஜட இயற்கை இன்னும் உங்களுக்கு கவர்ச்சியளிக்கக்கூடியதாய், உங்களால் இத்தகைய தியாகங்களைச் செய்ய இயலாது எனில், நீங்கள் இந்த முழு விஷயத்தையும் கைவிட்டு, உங்கள் விருப்பம் போல் செயல்படலாம். ஆனால் நீங்கள் உங்களை கிருஷ்ண பக்தர் என்று சொல்லிக்கொள்ள விரும்பினால், அந்த நிலையில் கிருஷ்ணருக்குச் சேவை செய்ய விரும்பினால் எந்த விதிவிலக்குகளும் இன்றி, அனைத்து சூழ்நிலைகளிலும் இந்த நான்கு அடிப்படையான விஷயங்களை விலக்க வேண்டும். நிச்சயம் ஒரு முறை, இரு முறை, கிருஷ்ணர் மன்னிக்கலாம். அது கடினமில்லை. ஆனால், அதற்கு மேலும் என்றால் கிருஷ்ணர் தங்களை மன்னிப்பது வெகு கடினம். தங்களின் முயற்சிகள் நேரம், இவற்றை செலவிட்டபோதும் எல்லாவற்றையும் இழக்கக்கூடிய பெரிய ஆபத்து உள்ளது.

- சங்கர்ஷணாவிற்கு எழுதிய கடிதம் மும்பை 31.டிசம்பர் 1972.

**<u>மீறுதல் என்பது ஆன்மீக குருவிடம் உள்ள உறவை துண்டித்துக் கொள்வது.</u>**

"தனது அனைத்து சிஷ்யா்களும் ஆன்மீக உலகத்தைச் சென்றடையும் வரை, ஆன்மீக குரு இந்த ஜட அண்டத்தில் இருக்கிறாா் என்பது உண்மையா" என நீ கேட்டிருக்கிறாய். 'ஆம்' என்பதே விடை. அதுதான் நியதி. ஆதலால் ஒவ்வொரு சிஷ்யரும் எந்தவொரு அபராதமும் செய்யாமல், மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். ஏனென்றால், இது ஆன்மீக ராஜ்யத்திற்கு செல்லும் உயா்வுக்கு சீரழிவாகும். அந்த சிஷ்யரை விடுவிக்கும் பொருட்டு ஆன்மீக குரு மீண்டும் தோன்ற வேண்டும் . இந்த வகையான மனோ பாவம், ஆன்மீக குருவிற்கு செய்யும் அபராதம். ஆன்மீக குருவின் கட்டளைகளுக்குக் கீழ்படியாமல் இருத்தல் என்பது பத்துவித குற்றங்களில் முதல் குற்றம் ஆகும். தீக்ஷையின் போது ஆன்மீக குருவால் சிஷ்யருக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும். அது ஒருவரை அவரது ஆன்மீகப் பாதையில் முன்னேறச் செய்யும். ஆனால் ஒருவா் வேண்டுமென்றே அத்தகைய கட்டளைகளை மீறினால், பிறகு அவரது முன்னேற்றம் தொடக்கத்திலிருந்தே தடுக்கப்படுகிறது. இவ்வாறு மீறுதல் என்பது ஆன்மீக குருவுடனான உறவை துண்டித்துக் கொள்ளுதல் என்று அா்த்தம். யாரொருவா் கட்டளைகளை மீறி, இவ்வாறாக ஆன்மீக குருவுடனான உறவை துண்டித்துக் கொள்கிறாரோ, ஜென்ம ஜென்மமாக ஆன்மீக குருவின் உதவி எதிா்பாா்க்க முடியாது இது போதுமான அளவிற்கு, உன்னுடைய கேள்விக்குத் தெளிவுபடுத்தும் என நம்புகிறேன்.

- ஜெயபதாகாவிற்கு எழுதிய கடிதம், லாஸ் ஏஞ்சல்ஸ், 11 ஜூலை, 1969.

**கூடுதல் மேற்கோள்கள் பாடம் : 7. தீக்ஷை உறுதிமொழிகள்**

**நான் அதன்மேல் தண்ணீா் ஊற்றினால், நெருப்பூட்டுதல் கடினமாக இருக்கும்.**

நிச்சயமாக இந்த ஹரி நாம ஜெபம், உங்களைத் தூய்மையாக்கும். மிகவும் நன்று. ஆனால் இந்த அக்னியைப் போல, நான் இப்போது நெருப்பூட்டப்போகிறேன். இது காய்ந்த விறகு. நான் இந்த விறகை காய்ந்த நிலையில் வைப்பதால் தீ நன்றாக ஒளிவீசி எரியும். ஆனால், நான் அதன்மேல் தண்ணீரை ஊற்றினால், பிறகு நெருப்பூட்டுவது கடினம். அதுபோல கிருஷ்ண உணா்வு என்ற நெருப்பு, உங்களைத் தொடா்ந்து முன்னேறச் செய்யும். ஆனால் அதே சமயம், நாமும், தானாக முன் வந்து, அந்த நெருப்பின்மீது தண்ணீா் ஊற்றவில்லை என்றால் நன்று. அதேபோல கிருஷ்ண உணா்வு அல்லது, கிருஷ்ண ஜபம் நீங்கள் முன்னேறச் செய்யும். அதே சமயம், தானாக முன் வந்து நீங்கள் இந்த அபத்தமான செயல்களைச் செய்யவில்லை. எனில் மிகவும் நன்று. நீங்கள் இந்த நீருற்றுவதை தொடா்ந்து செய்தால், பிறகு............ எவ்வாறு ஒரு மனிதன் மருந்து உட்கொண்டு, அதே சமயம் அனைத்து அபத்தங்களைச் செய்தால் பிறகு அவன் நோய் குணமடையாது அல்லது மிக, மிக நீண்ட காலமாகும். ஆகையால் நாம் பொறுப்பில்லாதவா்களாக இருக்கக்கூடாது. ஏனென்றால், வாழ்க்கை மிகவும் குறுகிய காலத்திற்கே.

- 'தீக்ஷை' வகுப்பு, சான் பிரான்சிஸ்கோ 10, மாா்ச் 1968

**இந்த ஒரு நிபந்தனையின்படி எல்லாவகையான பாவிகளையும் பகவான் சைதன்யா் ஏற்றுக் கொள்கிறாா்.**

பகவான் அவரது சுதா்தன சக்கரத்தை வரவழைக்கும் போது, அவ்விரு சகோதரா்களையும் மன்னித்துவிடும்படி நித்யானந்த பிரபு பகவானிடம் மன்றாடினாா். அச்சமயத்தில் இரு சகோதரா்களும் பகவானின் பாதங்களில் விழுந்து தங்களை மன்னித்துவிடும்படி வேண்டினாா். மனம் திருந்திய இந்த ஆத்மாக்களை ஏற்றுக்கொள்ளும்படி நித்யானந்த பிரபுவும் பகவானிடம் வேண்டினாா். ஆனால் அவா்கள் எல்லா பாவச் செயல்களையும்

விட்டொழிக்க வேண்டும் என்று பகவான் நிபந்தனை விதித்தார். அச்சகோதரர்களும் அதற்குச் சம்மதித்து, தங்களுடைய பாவச் செயல்களைக் கைவிடுவதாக வாக்களித்தனர். கருணையுள்ள பகவானும் அவர்களை ஏற்றுக்கொண்டதுடன், அவர்களது கடந்தகால பாவச் செயல்களை மீண்டும் சுட்டிக்காட்டாமல் இருந்தார்.

இதுவே பகவான் சைதன்யரின் தனிப்பெருங் கருணையாகும். இக்கலியுகத்தில் யாரும் தன்னை பாவத்திலிருந்து விடுபட்டிருப்பதாகக் கூறிக்கொள்ள முடியாது. ஆனால், தகுதியுள்ள ஆன்மீக குருவால் தீட்சை அளிக்கப்பட்ட பிறகு, எந்த பாவச் செயலிலும் ஈடுபடுவதில்லை என்று அவர்கள் வாக்களிக்க வேண்டும். இந்த ஒரு நிபந்தனையின்படி எல்லாவகையான பாவிகளையும் பகவான் சைதன்யர் ஏற்றுக் கொள்கிறார். கலியுக மக்கள் அனைவரும் ஜகாய், மதாயின் குணங்களை கொண்டுள்ளனர். பாவ விளைவுகளில் இருந்து விடுபட விரும்பினால், இவர்கள் ஸ்ரீ சைதன்ய மஹாபிரவுவிடம் புகலிடம் கொள்ள வேண்டும். மேலும் ஆன்மீக தீட்சை பெற்ற பிறகு, சாஸ்திரங்களால் தடை விதிக்கப்பட்டுள்ள விசயங்களில் இருந்து விலகி இருக்க வேண்டும்.

\- முன்னுரை, ஸ்ரீமத் பாகவதம்

**பக்தனின் இதயத்தில் தூய்மைப்படுத்தும் முறை ஏற்கனவே உள்ளது.**

வேதங்களின்படி, ஒருவன் தனது உயர்நிலையிலிருந்து வீழ்ச்சியடைந்தால், அவன் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ள பற்பல சடங்குகளைச் செய்தாக வேண்டும். ஆனால், இங்கே அத்தகு கட்டுப்பாடு இல்லை. ஏனெனில், புருஷோத்தமரான முழுமுதற் கடவுளை நினைப்பதன் காரணத்தால், பக்தனின் இதயத்தில் தூய்மைப்படுத்தும் முறை ஏற்கனவே உள்ளது. எனவே, ஹரே ஹரே , ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்னும் ஜபம் நிறுத்தாமல் தொடரப்பட வேண்டும்.

\- பகவத்கீதை 9.31

<u>பின் தாங்கள் ஒரு பண்புள்ள மனிதர் கூட இல்லை. பக்தர் என்பது குறித்து என்ன சொல்ல?</u>

ஹ்ரிதயானந்தா : (மொழிபெயர்த்தல் செய்கிறார்)

குருவுக்குக் கீழ்படியாமலிருப்பது மிக உயர்ந்த அபராதமா என அவர் தெரிந்து கொள்ள விரும்புகிறார்.

பிரபுபாதா : ஆமாம். அது முதல் அபராதம் "குரோர் அவஜ்னா", ஸ்ருதி – சாஸ்த்ர நிந்தனம். "ஸ்ருதி சாஸ்த்ர நிந்தனம் குரோர் அவஜ்னா" நீங்கள் குருவை ஏற்றுக்கொண்டு, மீண்டும் அவருக்குக் கீழ்படியாமலிருப்பது என்றால் உங்களின் நிலை என்ன? நீங்கள் ஒரு பண்புள்ள மனிதர் இல்லை. குருவின் முன்பாக, கிருஷ்ணரின் முன்பாக, அக்னியின் முன்பாக நீங்கள் உறுதிமொழி எடுக்கிறீர்கள். "நான் உங்கள் கட்டளைக்கு கீழ்ப்படிகிறேன்", நான் இதை நிறைவேற்றுவேன் என்று பிறகு நீங்கள் அதைச் செய்யவில்லை. நீங்கள் ஒரு பண்பட்ட மனிதர் கூட இல்லை. பக்தர் என்பது குறித்து என்ன சொல்ல? இது பொது அறிவு.

\- பகவத் கீதா 2.11. மெக்ஸிகோ பிப்ரவரி 11.1975

## பாடம் - 8 குருபூஜை

**பாடத் தலைப்புகள்**

8.1 ஸ்ரீல பிரபுபாதாவை முறையாக வழிபடுதல்

8.2 குருபூஜையின் முக்கியத்துவம்

8.3 அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் குருக்களை முறையாக வழிபடுதல்

**குருபூஜையின் முக்கியத்துவம்**

ஸாக்ஸாத் தரித்வேன சமஸ்த சாஸ்த்ரைர்
யுக்தஸ் ததா பாவ்யத ஏவ ஸத்பி

முழுமுதற் கடவுளுக்கு நிகராக ஆன்மீக குருவை மதிக்க வேண்டும் ஏனெனில் அவர் கிருஷ்ணரின் மிகவும் நம்பகமான சேவகர் ஆவார்.

- ஸ்ரீஸ்ரீ குருவஷ்டகம், பதம் 7

**ஆராதனானாம் ஸர்வேசாம் விஷ்ணோர் ஆராதனம் பரம்**

**தஸ்மாத் பரதரம் தேவி ததியானாம் சமர்சனம்**

சிவபெருமான் தேவி துர்க்கையிடம் கூறியது : ''என் அன்பிற்குரிய தேவி, வேதங்கள் தேவர்களின் வழிபாட்டை பரிந்துரைத்தாலும், விஷ்ணு வழிபாடே மிகச் சிறந்தது. எவ்வகையேனும், பகவான் விஷ்ணுவுடன் தொடர்புடைய வைஷ்ணவர்களுக்குச் செய்யும் சேவை விஷ்ணு வழிபாட்டைவிட மேலானது''.

- பத்மபுராணத்திலிருந்து, சைதன்ய சரிதாமிருதம் மத்திய லீலை11.31

யே மே பக்த-ஜனா பார்த்த ந மே பக்தாஸ் ச தே ஜனா
மத்-பக்தானாம் ச யே பக்தாஸ் தே மே பக்த-தமா மதா

கிருஷ்ணர் அர்ஜுனரிடம் கூறியது: '' என்னிடம் நேரிடையாக பக்தி செலுத்தும் பக்தர்கள் உண்மையில் என்னுடைய பக்தர்கள் அல்ல. ஆனால் என்னுடைய சேவகரின் பக்தர்கள் உண்மையிலேயே என்னுடைய பக்தர்கள்''.

- ஆதி புராணம், சைதன்ய சரிதாமிருதம் மத்திய லீலை11.28

**குருபூஜை என்பது தன்னைத்தானே உயர்த்திக் கொள்வதாகாது அதுவே உண்மையான கல்வி**

நாம் செய்து கொண்டிருக்கும் இந்த குருபூஜை தன்னைத்தானே உயர்த்திக் கொள்வதாகாது. அது உண்மையான கல்வி. நீங்கள் தினமும் பாடுகிறீர்கள். அது என்ன? ''குரு முக பத்ம வாக்ய ஆர்னா கோரிே ` ா மனே ஆசா''. நான் வெளிப்படையாகச் சொல்கிறேன். இந்த கிருஷ்ண உணர்வு இயக்கத்தில் உள்ள சிறிய வெற்றி யாதாயினும், எனது குரு மகாராஜாவால் கூறப்பட்டதை நான் நம்பியதால் கிடைத்ததாகும். நீங்களும் அதைத் தொடருங்கள். பிறகு எல்லா வெற்றிகளும் வரும்

- வருகை பேச்சு – நியூயார்க் ஜீலை 1976.

வழக்கமான குருபூஜையின் சில நன்மைகளை பட்டியலிடுக.

| |
|---|
| |

**8.3 பிரணாம மந்திரங்கள்**

பிரபுபாதாவின் பேர சிஷ்யா்களும், எதிா்கால சந்ததியினரும், தங்களுடைய தீட்சை குருவின் பிரணாம மந்திரத்தை ஜபித்த பிறகு ஸ்தாபக ஆச்சாா்யாருக்கு மரியாதை செலுத்தும் விதமாக, தங்களுடைய வணக்கங்களை சமா்ப்பிக்கும்போது குறைந்த பட்சம் ஸ்ரீலபிரபுபாதாவின் பிரணாம மந்திரத்தின் முதல் பகுதியை ஜபிக்க வேண்டும்.

- அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சட்டம் 7.2.1

**ஆரத்தி செய்தல்**

தங்களுடைய தீட்சை குரு, அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின அங்கீகரிக்கப்பட்ட குருவாக, நல்ல நிலையில் உள்ள பட்சத்தில், ஒரு பூஜாரி தன்னுடைய தீட்சை குருவின் சிறிய படத்தை கருவறையில் வைக்காது, ஆரத்தி தட்டிலோ அல்லது மேஜையிலோ, கோவிலில் ஆரத்தி செய்யும் போதோ அல்லது கோவில் சம்பந்தமான விழாக்களின் போதோ வைத்துக்கொள்ளலாம். அப்படி வைக்கப்படும் படமானது கருவறையிலுள்ள ஸ்ரீலபிரபுபாதாவின படத்தைவிட சிறியதாக இருக்க வேண்டும். மேலும் ஆரத்திக்கு பிறகு அப்படத்தை அகற்றிவிட வேண்டும்.

- அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சட்டம், 6.4.8

**குரு பூஜை (தற்போதைய அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் தீட்சை குருக்களுக்காக)**

ஸ்ரீலபிரபுபாதா அல்லாத மற்ற இஸ்கான் குருக்களின் சிஷ்யா்கள் தங்களுடைய குருக்களுக்கான குருபூஜையை கோவில் அறையின் வெளியே செய்து கொள்ளலாம். இந்த சிஷ்யா்களின் வழிபாட்டிற்கான வசதிகளை கோவில் செய்து கொடுக்க வேண்டும்.

- அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சட்டம் 6.4.8.1.1

**தடை செய்யப்பட்ட பட்டங்கள்**

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் உள்ள யாரையும் வெளிப்படையாக ‘‘தெய்வத்திரு’’ என்ற மரியாதைக்குரிய பெயரால் குறிப்பிடக்கூடாது. மேலும் ‘‘பாதா’’ அல்லது ‘‘தேவா’’ என்று முடியும் மரியாதைக்குரிய பெயா்களால் தனிமையிலோ, வெளிப்படையாகவோ குறிப்பிடக்கூடாது. சிஷ்யா்கள் தங்களுடைய தீட்சை மற்றும் சிக்ஷா குருக்களை ‘‘குருதேவா’’ அல்லது ‘‘குருமகாராஜா’’ என்று அழைத்துக்கொள்ளலாம்.

- அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சட்டம், 6.4.8

**வைஷ்ணவர்களை வரவேற்பது**

குருக்களாக சேவை செய்வோர் உட்பட அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் கோவில்களுக்கு வருகை தரும் வைஷ்ணவர்களை வரவேற்கும் நிகழ்ச்சிகள் மிதமாக இருக்க வேண்டும். உதாரணமாக ஒரு ஆசனத்தை அளிப்பது, பிரசாதத்தை அளிப்பது, அருந்த ஏதாவது அளிப்பது, மாலையிடுவது மற்றும் கீர்த்தனம் செய்வது.

- அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சட்டம், 6.4.8.2

**வியாச பூஜை**

வியாச பூஜையில் கலந்து கொள்வது பற்றிய தங்களுடைய எண்ணங்களை எழுதுக

| |
|---|
| |

**அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் தற்போதைய தீட்சை மற்றும் சிக்ஷா குருக்களின் வியாச பூஜை**

ஸ்ரீலபிரபுபாதாவையும், ஒவ்வொரு பக்தருக்கும் அவரிடம் உள்ள சிறப்பு உறவுமுறையையும் மையப்படுத்தும் வகையில் ஓர் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சிக்ஷா அல்லது தீட்சை குரு ஒரு பொதுவிடத்தில் குரு பூஜையை ஏற்றுக்கொள்ளலாம். (ஆரத்தி மற்றும் / அல்லது பாதபூஜை) இது வருடத்திற்கு ஒரு முறை அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்திற்கு சொந்தமான இடங்களில் அவருடைய வியாச பூஜை அன்று நடத்தப்படலாம். இந்த பூஜை கோவில் அறையினுள் அனுஷ்டிக்கப்படலாம். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் குருக்களுக்கு வியாச பூஜை விழாக்களை நடத்தும் அங்கத்தினர்கள், குறிப்பாக ஸ்ரீலபிரபுபாதாவின் வியாச பூஜையைப் போல விரிவாக இல்லாமல் அவற்றை மிதமாக செய்ய வேணடும். பொதுவாக வியாச பூஜை கொண்டாட்டங்களை பக்தர்கள் தங்களுடைய அமைவிடங்களில் அனுஷ்டிக்க வேண்டும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் வியாச பூஜை புத்தகங்களை ஸ்ரீலபிரபுபாதாவிற்காக மட்டுமே வெளியிடலாம்.

- அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சட்டம் 6.4.8.1

**ஸ்ரீலபிரபுபாதாவின் வியாச பூஜை மற்றும் திரோபாவ திதி**

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் அங்கத்தினர்கள் ஸ்ரீலபிரபுபாதாவின் வியாச பூஜை(& திரோபாவ) கொண்டாட்டங்களை அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஒப்புயர்வற்ற வியாச பூஜையாக(& திரோபாவ) கொண்டாட வேண்டும். அனைத்து அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் அங்கத்தினர்களும் ஸ்ரீலபிரபுபாதாவிற்கு வருடாந்திர வியாச பூஜை சமர்ப்பணத்தை எழுதுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சட்டம் 6.4.8

**கூடுதல் மேற்கோள்கள்**

**ஆன்மீக குருவின் உருவப்படத்திற்கான மரியாதை**

எனக்கும் என்னுடைய படத்திற்கும் வேறுபாடு இல்லை. ஆதலால் இந்த மனநிலையுடன் நாம் படங்களை வைத்து மரியாதை செலுத்த வேண்டும். நாம் அங்கே, இங்கே என்று படங்களை எறிவது குற்றம். நாமமும் படமும் ஆன்மீக உலகத்தில் உள்ள நபருக்குச் சமம்.

- ஜாது ராணிக்கு எழுதிய கடிதம் - புது விருந்தாவனம் செப்டம்பர் 4 1972

**ஆன்மீக குரு தோன்றிய தினத்தை வியாச பூஜையாக அனுஷ்டிப்பது**

பழுத்த பழம் சீடப் பரம்பரையின் மூலமாக பெறப்படுகிறது. யாரொருவர் ஸ்ரீல வியாச தேவரின் சீடப் பரம்பரையில் இதைச் செய்கிறாரோ, அவர் வியாச தேவரின் பிரதிநிதியாகக் கருதப்படுகிறார். அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குருவின் தோன்றிய தினம் வியாச பூஜையாக அனுஷ்டிக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல , ஆன்மீக குரு அமரும் மேன்மையான ஆசனம் வியாசாசனம் என்றும் அழைக்கப்படுகின்றது.

- பலிமர்த்தனாவிற்கு எழுதிய கடிதம் - டோக்கியோ ஆகஸ்ட் 25 1970

**பரிசளிக்கப்பட்ட பொருட்களையோ நகைகளையோ தொடமுடியாத வைஸ்ராய்**

ஆதலால் இந்த வியாச பூஜை என்பது, வருடத்தில் ஒரு நாள், ஆன்மீக குரு தோன்றிய தினத்தன்று, அவருக்கு மரியாதை அளிப்பதாகும். ஏனெனில், அவர் வியாசதேவரின் பிரதிநிதி, சீடப் பரம்பரையில் வரும் ஞானத்தை எந்த மாற்றமும் இன்றி அப்படியே வழங்குகிறார். இது வியாச பூஜை எனப்படும். ஆன்மீக குரு தனக்கு அளிக்கப்படும் அனைத்து மரியாதையையும், பரிசுகளையும் முழுமுதற்கடவுளின் சார்பாக பெற்றுக் கொள்கிறார், அவருக்காக அல்ல. நமது நாட்டில் இங்கிலாந்து ஆட்சி நடந்த போது அரசரின் பிரதிநிதியாக ஒரு வைஸ்ராய் இருப்பார். இயல்பாகவே, வைஸ்ராய் எந்த நிகழ்ச்சிக்குச் சென்றாலும் பலர் மதிப்புமிக்க நகைகள் மற்றும் பொருட்களை, அவரை கௌரவிப்பதற்காக அளித்தார்கள். ஆனால் சட்டப்படி எதையும் வைஸ்ராய் எடுத்துக் கொள்ளக்கூடாது. அது அரசு கஜானாவிற்கு சென்றுவிடும். அரசரின் சார்பில் எல்லாப் பரிசுகளையும் ஏற்றுக் கொள்ள முடியும். அது போலவே வியாச பூஜை தினத்தன்று ஆன்மீக குருவிற்குச் சமர்ப்பிக்கப்படும் மரியாதையை, பரிசுப் பொருட்கள், உணர்வுகள் யாதாயினும் நாம் ஞானத்தை மேலிருந்து பெற்றுக் கொண்டதைப் போல இந்த மரியாதை கீழிலிருந்து மேலாக செலுத்தப்படுகிறது. இதுவே வழிமுறை. ஆன்மீக குரு, தன்னுடைய மாணவருக்கு கற்பிப்பவர் , கடவுளுக்கு உரிய மரியாதை மற்றும் பங்களிப்பை எவ்வாறு திருப்பிச் செலுத்த வேண்டும் என்பதை கற்றுக் கொடுக்க வேண்டும். இது வியாச பூஜையாகும்.

- ஸ்ரீவியாச பூஜா – புது விருந்தாவனம் செப் 2 1972

**ஸ்ரீ வியாச பூஜையின் ரகசியம்**

ஸ்ரீ வியாச பூஜையின் ரகசியம் இங்கே உள்ளது. நாம் முழுமுதற் கடவுளின் திவ்யமான லீலைகளை தியானிக்கும் பொழுது நாம் அவருடைய நித்திய சேவகர்கள் என்று பெருமிதம் கொள்கிறோம். உவகை கொண்டு ஆனந்தத்தில் நடனம் ஆடுகிறோம். என்னுடைய தெய்வீகமான எஜமானருக்கே எல்லாப் புகழும். ஏனென்றால் தன்னுடைய தடையில்லாத கருணையால், நமக்குள் நித்திய வாழ்விற்கான தூண்டுதலை ஏற்படுத்தியவர் அவரே. அவருடைய தாமரை பாதங்களில் பணிவோமாக.

- ஸ்ரீலபிரபுபாதா வியாச பூஜை, பக்தி சித்தாந்த தாகூருக்கு அஞ்சலி, பம்பாய் பிப் 1935

## பாடம் - 9 குரு சேவை

**பாடத் தலைப்புகள்**

9.1 சிஷ்யரின் தகுதிகள்

9.2 குரு சேவை மற்றும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்திக்குரிய சேவை

**"சேவையா"**

நீங்கள் எதையாவது வாங்கினால் அதற்குரிய மதிப்பை நீங்கள் செலுத்த வேண்டும், அது போல. அதனால் அது சேவையா என்று அழைக்கப்படுகின்றது. ஆன்மீக குருவால் கற்பிக்கப்பட்டதற்கான விலையை உஙகளால் திருப்பி அளிக்க இயலாது. அது இயலாதது. அதனால் அது சேவையா என்று அழைக்கப்படுகின்றது. உங்களுடைய வாழ்வை அவருடைய சேவைக்காக அர்ப்பணம் செய்யுங்கள். நீங்கள் திருப்பி செலுத்த முடியாது. நீங்கள் ஆன்மீக குருவிற்கு செலுத்த வேறு எதை வைத்திருக்கிறீர்கள் ?

- ஸ்ரீமத் பாகவதம், 2.3.25, லாஸ் ஏஞ்சல்ஸ், ஜீன் 23, 1972

**குரு சேவை மற்றும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்திற்கான சேவை**

| ஆன்மீக குருவிற்கு நாம் சேவை செய்யும் வழிகள் | அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் குறிக்கோளுக்காக சேவை செய்யும் வழிகள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

ஆன்மீக குருவுக்கும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் குறிக்கோளுக்கும் சீரான முறையில் சேவை செய்வதன் முக்கியத்துவத்தை பற்றிய கருத்தை எழுதவும்.

**கடமைகளை சீரான முறையில் எதிர்கொள்ளுதல்**

தங்களுடைய வாழ்வில் உள்ள கடமைகளை, (குருவிற்கான கடமைகளைத் தவிர) சிலவற்றைக் குறிப்பிடவும்.

ஆன்மீக குருவுக்கும் மற்றவர்களுக்குமான கடமைகளை சீராக நிறைவேற்றுவதில் உள்ள சவால்களை சந்திக்கும் வழிமுறைகளை பரிந்துரைக்கவும்.

**ஆணையை நிறைவேற்றுவதில் சிஷ்யரின் கடமை... ஸ்ரீசைத்தன்யரின் செய்தியை உலகம் முழுவதும் பரப்புதல்.**

ப்ரிதிவீதே ஆச்சே யதா நகராதி கிராம
சா்வத்ர பிரசார ஹைபே மொர நாம

- ஸ்ரீ சைத்தன்ய பாகவதம் அந்திய காண்டம் 4.126

உலகத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும் ஸ்ரீ சைத்தன்யரின் பக்தா்கள் கிருஷ்ண உணா்வினை பிரச்சாரம் செய்ய வேண்டும். அது அவரை திருப்தி அடையச் செய்யும். ஒருவன் தன்னுடைய மனம் போன போக்கில் தன்னை திருப்திபடுத்துவதற்காக செயல்பட வேண்டும் என்பதில்லை. சீடப் பரம்பரை வழியாக ஆணை வருகிறது. பகவான் ஸ்ரீசைத்தன்யரின் செய்தியை பரப்பும் பொருட்டு, ஆன்மீக குரு சிஷ்யருக்கு ஆணைகள் வழங்குகிறாா். அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குருவின் ஆணையை நிறைவேற்றுவது மற்றும் பகவான் சைத்தன்யரின் செய்தியை உலகம் முழுவதும் பரப்புவது, ஒவ்வொரு சிஷ்யரின் கடமையாகும்

- ஸ்ரீ சைத்தன்ய சரிதாமிருதம் பொருளுரை, மத்திய லீலை 16.65

தத் வித்தி பிரானி பாடேன பரிப்ரஸ்னேன சேவையா
உபதேக்ஸ்யந்தி தே ஞானம் ஞானினஸ் தத்வ-தா்சினஹ

ஆன்மீக குருவை அணுகி உண்மையை அறிய முயற்சி செய். அடக்கத்துடன் அவரிடம் கேள்விகள் கேட்டு அவருக்கு தொண்டு செய். உண்மையை கண்டவா்களான தன்னுணா்வு பெற்ற ஆத்மாக்கள் உனக்கு ஞானத்தை அளிக்க முடியும்.

அது மாதிரியான ஒரு குருவை முழுமையாகச் சரணடைவதன் முலம் ஏற்றுக் கொள்ள வேண்டும். மற்றும் ஒரு சேவகனைப் போல பொய் அகங்காரம் இல்லாமல் அவருக்கு சேவை செய்ய வேண்டும். தன்னை உணா்ந்த ஆன்மீக குருவை திருப்திபடுத்துவதே ஆன்மீக வாழ்வில் முன்னேற்றம் அளிக்கும் ரகசியம் ஆகும்.

- பகவத்கீதை 4.34

**சரணடைதல் இல்லையென்றால் முன்னேற்றமில்லை**

நமது இயக்கம் ‘ஆன்மீக வாழ்வின் ஆரம்பம் என்றால் சரணடைதல்’ என்பதே. சரணடைதல் இல்லையென்றால் முன்னேற்றமில்லை. ஸ்வ-தா்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ (ப.கீ 18.66). இது ஆரம்பம். இது இல்லையென்றால் ஆரம்பம் கூட இல்லை, முன்னேற்றத்ததைக் குறித்து என்ன சொல்ல? இது ஏற்கனவே விவாதிக்கப்பட்டிருக்கிறது. ந சித்திம் ச அவாப்னோதி ந சுகம் ந பரம் கதி. இது ஆன்மீக வாழ்வின் ஆரம்பம். சிஷ்யா் என்றால் ஒழுக்கத்தை ஏற்றுக் கொள்பவா் என்று பொருள். ஒழுங்கு இல்லையென்றால், சிஷ்யா் எங்கே?

- அறை உரையாடல் ஜீலை 1, 1974, மெல்போா்ன்

**ஆணையை நிறைவேற்றுவதற்கு ஒருவா் கண்டிப்பாக முயல வேண்டும்**

ஆன்மீக குருவின் ஆணையை மிகவும் திடத்துடன் அப்படியே நிறைவேற்றுவதல் என்ற கொள்கையை பின்பற்ற வேண்டும். வெவ்வேறு சீடா்களுக்கு வெவ்வேறு ஆணைகளை ஆன்மீக குரு வழங்குகிறாா். உதாரணமாக, ஜீவகோஸ்வாமி, ரூபகோஸ்வாமி மற்றும் சனாதன கோஸ்வாமியை, பிரச்சாரம் செய்ய ஆணையிட்ட ஸ்ரீசைத்தன்யா், ரகுநாததாசகோஸ்வாமியை துறவு நிலையின் விதிகளையும் கட்டுப்பாடுகளையும் கண்டிப்பாக பின்பற்றுமாறு ஆணையிட்டாா். ஆறு கோஸ்வாமிகளும் ஸ்ரீசைத்தன்யரின் ஆணைகளை கண்டிப்புடன் பின்பற்றினாா்கள். இதுவே பக்தித் தொண்டில்

முன்னேறுவதற்கான கொள்கை. ஆன்மீக குருவிடமிருந்து ஆணையைப் பெற்ற பிறகு அதை நிறைவேற்றுவதற்காக ஒருவா் கண்டிப்பாக முயல வேண்டும். அதுவே வெற்றிக்கான வழி.

- ஸ்ரீ சைதன்ய சரிதாமிருதா, அந்த்யா, 6.313

**இவ்வாறாக பக்திக்கொடி சுருங்குகிறது.**

கட்டுப்பாட்டு விதிகளை கைவிட்டு, ஒருவருடைய உணா்ச்சிகளுக்கேற்ப வாழ்தல் ஒரு மதயானைக்கு ஒப்பிடப்படுகிறது. இது பக்திக் கொடியை வேரோடு சாய்த்து அதை துண்டு துண்டாக்குகிறது. இதனால் பக்திக் கொடி சுருங்கிவிடும். முக்கியமாக ஒருவா் ஆன்மீக குருவின் ஆணைகளை மீறும் பொழுது இந்த குற்றம் நிகழ்கிறது. இது ''குரு அவஞ்னா'' எனப்படும். அதனால் ஆன்மீக குருவின் ஆணைகளை மீறும் குற்றத்தைச் செய்யாமல் ஒரு சிஷ்யா் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஆன்மீக குருவின் கட்டளைகளிலிருந்து விலகும் பொழுது பக்திக் கொடியை வேரோடு சாய்ப்பது ஆரம்பமாகிறது. மெதுவாக அனைத்து இலைகளும் காய்ந்து விடுகின்றன.

- ஸ்ரீ சைத்தன்ய சரிதாமிருதம் மத்ய லீலை 19.156

**சீடனின் வாழ்வாதாரமாகும் குருவின் ஆணை**

ஒரு குருவிடமிருந்து தீட்சை பெற்ற பிறகு ஒருவன் அவரது கட்டளைகளை எவ்வித தயக்கமுமின்றி நிறைவேற்ற வேண்டும். அத்தோடு வேறு ஏதாலும் அவன் குழப்பமடையாமல் இருக்க வேண்டும். இது ஸ்ரீல விஸ்வநாத சக்கரவா்த்தி தாகூரின் தீா்ப்பாகும். அவா் பகவத் கீதை 2.41 என்ற பதத்தை விளக்கும் போது குருவின் கட்டளையினை ஒரு சிஷ்யன், தான் வீடு பேறு பெற்று முழுமுதற் கடவுளை அடையப் பெறுவோமா என்பவற்றை பற்றியெல்லாம் நினைக்காது தனது முதற்கடமை குருவின் கட்டளையினை நிறைவேற்றுவதே என்று செயல்படவேண்டும். இவ்வாறாக குருவின் அறிவுரைகளை தியானிப்பதே சிறந்த தியானமாகும். அவன் அக்கட்டளையை நிறைவேற்றுவதோடு மட்டுமல்லாது, அதிலிருந்து எவ்வாறு சரியான வழிபாட்டினை செய்வது , அதனை எவ்வாறு செயல்படுத்துவது என்ற வழியினையும் கண்டுபிடித்தல் வேண்டும்.

- ஸ்ரீமத் பாகவதம் 4.24.15

**கூடுதல் மேற்கோள்கள்**

**''சிஷ்யா்'' , ''ஒழுங்கு'' என்ற சொல்லுடன் தொடா்புடையது**

ஆன்மீக குருவை ஏற்றுக் கொள்வது என்பது தானாக முன்வந்து, ஒரு சான்றோன் வழங்கும் விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு இணங்கி நடந்து கொள்ள சம்மதிப்பது ஆகும். தானாக முன்வந்து ஏற்றுக்கொள்வதே 'சிஷ்யா்' என்பதற்கு அா்த்தமாகும். ''சரி சாா். நீங்கள் என்ன சொன்னாலும் நான் ஏற்றுக்கொள்கிறேன்''. சிஷ்யன் என்ற சமஸ்கிருத வாா்த்தை விதிகளின்படி நடப்பவரையே குறிக்கிறது. ஆங்கிலத்தில், 'சிஷ்யா' என்ற வாா்த்தை, ஒழுங்கு என்ற வாா்த்தையுடன் தொடா்பு உடையது. ஆதலால் ஆன்மீக குருவினால் ஒரு சிஷ்யா் ஒழங்குபடுத்தப்படுகிறாா். ''என்னுடைய தனிப்பட்ட அசௌகரியங்களை பொருட்படுத்தாது என்னுடைய ஆன்மீக குருவின் ஆணைகளுக்கிணங்கி நான் நடந்து கொள்ள வேண்டும்''.

- உபதேசம் 5.5.1 டிட்டன ஹா்ஸ்ட், லண்டன் செப் 12, 1969

**குருவிடம் அடைக்கலம் பெற்று ஆத்மார்த்தமாக அவருக்கு சேவை செய்தல்**

ஆன்மீக முன்னேற்றத்திற்கான எளிமையான வழி என்னவென்றால் ஒரு உண்மையான ஆன்மீக குருவிடம் அடைக்கலம் பெற்று மனமும், ஆத்மாவும் ஒன்றிட அவருக்கு தொண்டு செய்வதாகும். அதுவே வெற்றியின் ரகசியம். விஸ்வநாத சக்கரவர்த்தி தாகூரின் குருவஷ்டகத்தில் ''யஸ்ய பிரசாதாத் பகவத் பிரசாதா'' என்று உள்ளதைப் போல. குருவின் கருணையைப் பெறுவதன் மூலம் ஒருவர் முழுமுதற் கடவுளின் கருணையைப் பெறுகிறார்.

பக்தரான, தன்னுடைய கணவர், கர்தம முனிக்கு சேவை செய்வதன் மூலம் அவரின் சாதனைகளை தேவஹூதியினாலும் பகிர்ந்து கொள்ள முடிந்தது. அதைப்போல, ஒரு உண்மையான சிஷ்யர் ஆன்மீக குருவிற்கு சேவை செய்வதன் முலம் கிருஷ்ணரின் பெருங்காருண்யத்தையும் குருவினுடைய கருணையையும் ஒரே சமயத்தில் அடையலாம்.

- ஸ்ரீமத் பாகவதம் 3.23.7

**குருவின் வார்த்தைகளுக்கு கட்டுப்படுதல்**

தனது குருவின் லட்சியத்தை மிகத் தீவிரமாக நிறைவேற்றும் சிஷ்யன் உடனடியாக முழுமுதற்கடவுளை வாணி அல்லது வாபுவினால் தொடர்பு கொள்கிறான். இது ஒன்றே முழுமுதற்கடவுளைக் காணும் வெற்றியின் ரகசியமாகும். விருந்தாவனத்திலிருக்கும் புதர்களில் பகவான் கிருஷ்ணரைத் தேடிக் கொண்டே புலனுகர்ச்சியில் ஈடுபடுவதைக் காட்டிலும், தனது குருவின் வார்த்தைகளை பின்பற்றும் ஒருவன் முழுமுதற்கடவுளை எவ்வித இடையூறுமின்றி காண்கிறான்.

- ஸ்ரீமத் பாகவதம் 4.28.51

**என்னுடைய இயக்கத்தின் செயல்பாடுகளில் உதவும் பொழுது.... அதுவே உண்மையான சத்சங்கம்**

என்னுடைய சத்சங்கத்தை மீண்டும் பெற விரும்புவதாக எழுதுகிறாய். ஆனால், எப்போதும் என்னுடைய சத்சங்கத்திலே இருக்கிறாய் என்பதை நீ ஏன் மறந்து போகிறாய்? நீ என்னுடைய இயக்கத்தின் செயல்பாடுகளில் உதவும்போது நான் எப்போதும் உன்னையே நினைத்திருக்கிறேன். மேலும் நீயும் என்னை எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கிறாய். அதுவே உண்மையான சத்சங்கம்.

- கோவிந்தாவிற்கு எழுதிய கடிதம் - லாஸ் ஏஞ்சல்ஸ் ஆகஸ்ட் 17, 1969

**என்னுடைய குருமகாராஜா என்னுடன் இருப்பதைப்போல் நான் உன்னுடன் இருக்கிறேன்**

ஒரு உண்மையான சீடன் குருவின் ஆணைகளை நிறைவேற்ற முயலும் இடத்தில் குரு இருக்கிறார். இது கிருஷ்ணரின் கருணையால் முடிகிறது. நீ எனக்கு சேவை செய்யும் எல்லா முயற்சிகளிலும், பக்தி உணர்வுகளிலும், என் குரு மகாராஜா என்னுடன் உள்ளதைப் போல நான் உன்னுடன் இருக்கிறேன். இதை எப்போதும் நினைவில் கொள்.

- பக்த டானுக்கு எழுதிய கடிதம் - லாஸ் ஏஞ்சல்ஸ் டிசம்பர் 1, 1973

## பாடம் 10 குரு வாப்பு மற்றும் வாணி சேவா.

**பாடத்தலைப்புகள்**

| |
|---|
| குருவிற்கு 'வாப்பு' மற்றும் 'வாணி' சேவை செய்யும் முறைகள் |
| குரு வாப்பு - சேவையின் முக்கியத்துவம் |
| குருவின் முன்னிலையில் உரிய முறையில் நடந்து கொள்ளுதல் குருவிடம் இருந்து கேள்விகள் கேட்டு அறிதல் |
| குரு வாணி – சேவையின் முக்கியத்துவம் |

| வாப்பு | வாணி |
|---|---|
| உடல் | உபதேசங்கள் |

சாது சங்க', சாது சங்க – ச்ர்வ சாஸ்த்ரே – கயா
லவ –மத்ர சாது –சங்கே ச்ர்வ – சித்தி ஹயா

அனைத்து சாஸ்திரங்களின் தீர்ப்பு என்னவென்றால், ஒரு தூய பக்தரின் கண நேர சத்சங்கத்தினால் கூட, ஒருவர் அனைத்து வெற்றிகளையும் அடைய முடியும்.

- சைதன்ய சரிதாமிருதம், மத்ய லீலா, 22.54

### B. குருவின் முன்னிலையில் உரிய முறையில் நடந்து கொள்ளுதல் :

**ஹரி பக்தி விலாஸத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சிஷ்யருக்கான ஆசார விதிகள் :**

- ஒரு ஆன்மீக குருவைக் கண்டவுடன், ஒரு வேர் அறுக்கப்பட்ட மரம் சடாரெனக் கீழே விழுவதைப் போன்று, விழுந்து வணங்க வேண்டும். (தண்டவத்)
- ஒரு ஆன்மீக குரு அணுகும் பொழுது, உடனே அவரை எதிர்கொண்டு வணங்க வேண்டும். அவர் அந்த இடத்தை விட்டு அகலும் போது அவரைப் பின் தொடர வேண்டும்.
- ஒரு ஆன்மீக குருவின் அனுமதியின்றி, அவர் இருக்கும் இடத்தை விட்டு அகலக் கூடாது.
- ஆன்மீக குருவின் பெயரை கவனக் குறைவாக உச்சரிக்கக்கூடாது. எப்பொழுதும் மிகுந்த மரியாதையுடன் உச்சரிக்க வேண்டும்.
- ஆன்மீக குருவின் நடை, செயல்கள், பாஷை ஆகியவற்றை அவர் பாவனை செய்யக் கூடாது.
- ஆன்மீக குருவின் வார்த்தைகளை அவர் மிகுந்த மரியாதையுடன் மனதில் கொள்ள வேண்டும்.
- ஆன்மீக குரு அவருக்குத் தண்டனைக் கொடுத்தாலும், அதை அவர் தயவில்லாததாக எண்ணக் கூடாது.

- பகவான், சாஸ்திரங்கள் மற்றும் ஆன்மீக குருவை யாராவது குறை கூறினால், அவா் அதை பொறுத்துக் கொள்ளக் கூடாது. அந்த இடத்தை விட்டு உடனே அவா் அகல வேண்டும்.
- ஆன்மீக குருவின் மாலைகள், படுக்கை, காலணிகள், நிழல் அல்லது மேஜை மீது அவரது காலடி படக்கூடாது.
- அவா் ஆன்மீக குருவின் முன் கால் நீட்டி உட்காரவோ, சிரிக்கவோ, கொட்டாவி விடவோ மற்றும் மரியாதைக் குறைவான சப்தங்களை எழுப்பவோ கூடாது.
- ஆன்மீக குருவின் முன் ஆசனத்திலோ. படுக்கையிலோ அவா் அமரக் கூடாது.
- ஆன்மீக குருவைத் தவிர்த்து, மற்றவா்களுக்கு முன்னுரிமை அளித்து, வணங்கக் கூடாது.
- அவா் ஆன்மீக குருவின் முன்னிலையில் தீட்சை அளிப்பதோ, சாஸ்திரங்களுக்கு விளக்கம் அளிப்பதோ, அல்லது தனது மேன்மையைக் காட்டவோ கூடாது.
- ஆன்மீக குருவின் ஆன்மீக குருவையும் அவா் இதே முறையில் மதிக்க வேண்டும்.
- ஆன்மீக குருவிற்கு கட்டளைகள் இடக் கூடாது. மாறாக, எப்பொழுதும் அவருக்குக் கீழ்படிய வேண்டும்.
- அவா் ஆன்மீக குருவின் மனைவி, மகன் மற்றும் உறவினா்களுக்கு, ஆன்மீக குருவிற்கு அளிக்கும் அதே மரியாதையைக் கொடுக்க வேண்டும். இருப்பினும், ஆன்மீக குருவின் மகனுக்குக் குளிப்பாட்டுதல், அவருடைய பாதங்களைக் கழுவுதல் மற்றும் அவா் சாப்பிட்ட உணவின் மிச்சத்தை உண்ணுதல் போன்ற சேவைகளைச் செய்யக் கூடாது.

- 'பாஞ்சாராத்ர ப்ரதீபா' வில் கூறப்பட்டது :-
ஒரு சிஷ்யரின் தகுதிகள்-ஹரிபக்தி விலாஸா

**குரு வாப்பு - சேவா**

**குருவிற்குத் தேக சௌகரியங்களைக் கொடுப்பதன் மூலமாக, அவருக்கு நேரடியாகத் தொண்டு செய்தல்.**

ஒருவன் குருவிற்குத் தேக சௌகரியங்களைக் கொடுப்பதாலும், குளித்தல், ஆடை அணிதல், உண்ணுதல் போன்ற செயல்களில் உதவி செய்வதாலும் நேரடியாக அவருக்குத் தொண்டு செய்ய வேண்டும், என்பதே 'குரு-ஸுஷ்ருஷயா' என்ற சொல்லின் பொருளாகும். இது 'குரு-ஸுஷ்ருஷயம்' என்று அழைக்கப்படுகிறது. ஒரு சிஷ்யா் எளிய சேவகனாக இருந்து குருவிற்கு சேவை செய்ய வேண்டும். தன்னிடம் இருப்பதை எல்லாம் அவரிடம் அவா் அா்ப்பணித்து விட வேண்டும்.

- ஸ்ரீமத் பாகவதம் 7.7.30-31

**இடியைப் போன்று கடுமையாகவும், ரோஜா மலரைப் போன்று மென்மையாகவும்**

ஒரு ஆச்சாரியா் மற்றும் வைஷ்ணவ சம்பிரதாயத்தின் மிகவும் பிரசித்த பெற்றவா் தன்னுடைய கொள்கைகளில் மிகவும் கண்டிப்புடன் இருப்பாா் ஒரு இடியைப் போன்று கடுமையானவராக இருப்பினும், சில சமயங்களில் ஒரு ரோஜ மலரைப் போன்று மென்மையானவா் இவ்வாறாக, அவா் உண்மையில் சுதந்திரமானவா்.

- சைதன்ய சரிதாமிருதம், ஆதி லீலா, 7.55

சிரேயஸ் - து – குரவத்- விரித்திா்
நித்யம் - ஏவ சமாச ரேத்
குரு புத்ரேஷு தாரேஷு குரோஸ்
சைவ ஸவ- பந்துஷு

ஒரு சிஷ்யா் ஆன்மீக குருவிடம் மரியாதையுடன் நடந்து கொள்ளும் விதமாகவே, ஆன்மீக குருவின் மனைவி, குழந்தைகள் மற்றும் உறவினா்களிடமும் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

- 'ஹரிபக்தி விலாஸ' த்திலிருந்து ஒரு சிஷ்யரின் தகுதிகள்
- பாஞ்சராத்ர – ப்ரதீபா, பதம் 84, முதல் விலாஸா.

**குடும்ப அங்கத்தினா்கள் அவரை சாதாரண மனிதராக கருதுவதால் .......**

பரம புருஷரான கிருஷ்ணா் அல்லது பகவான் ராமச்சந்திரரை ஒரு சாதாரண மனிதன் என்று யாரேனும் கருதுவதால், பகவான் ஒரு சாதாரண மனிதராக மாறிவிடுவதில்லை. அவ்வாறே, பரமபுருஷரின் உண்மையான பிரதிநிதியாக ஆன்மீக குருவின் குடும்ப அங்கத்தினா்கள் அவரை ஒரு சாதாரண மனிதராக கருதுவதால், அவா் ஒரு சாதாரண மனிதராக மாறி விடுவதில்லை. ஆன்மீக குரு பரம புருஷருக்குச் சமமானவா். எனவே ஆன்மீக முன்னேற்றத்தில் நாட்டம் கொண்டுள்ளவன், ஆன்மீக குருவை இதே முறையில் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதிலிருந்து சிறிது விலகினாலும், சிஷ்யரின் வேதக் கல்விகளிலும் தவங்களிலும் பெரும் நாசம் ஏற்பட்டுவிடும்.

- ஸ்ரீமத் பாகவதம், 7.15.27.

**ஒரு ஆன்மீக குருவின் ஆன்மீகச் சகோதரா்களை மதித்தல்**

பகவான் சைதன்யரின் ஆன்மீக குருவான ஈஸ்வரி பூரி, ஸ்ரீ அத்வைத பிரபு - இவ்விருவரும் மாதவேந்திர பூரியின் சிஷ்யா்கள் ஆவா். மாதவேந்திரபூரி நித்யானந்த புரபுவின் ஆன்மீக குருவுமாவாா். இவ்வாறாக, பகவான் சைதன்யரின் ஆன்மீக தந்தை போன்று, அத்வைத பிரபு எப்பொழுதும் மதிக்கப்பட வேண்டும். ஏனெனில், ஒருவா் தன்னுடைய ஆன்மீக குருவை மதிப்பது போலவே தன்னுடைய ஆன்மீகக் குருவின் ஆன்மீகச் சகோதரா்களையும் மதிக்க வேண்டும்.

- சைதன்ய சரிதாமிருதா, ஆதி, 5.147

**ஒரு பக்தனின் பண்பு, வைஷ்ணவ ஆசாரத்தை கடைப்பிடிப்பது மற்றும் பேணிக்காப்பது**

"எனதருமை சநாதனா, இந்த முழு பிரபஞ்சத்தையும் உங்களால் விடுவிக்க முடியும் என்றாலும், தேவா்களும் இறந்த முனிவா்களும் கூட உங்களைத் தொடுவதால் புனிதம் அடைகிறாா்கள் என்ற போதிலும், ஒரு பக்தரின் பண்பு யாதெனில் வைஷ்ணவ ஆசாரத்தை கடைப்பிடிப்பதும், பேணிக்காப்பதும் ஆகும். வைஷ்ணவ ஆசாரத்தைக் கடைபிடித்தல் ஒரு பக்தரின் ஆபரணம். ஒருவா் ஆசார விதிகளை மீறினால், மக்கள் அவரை பரிகாசம் செய்கின்றனா். இவ்வாறாக இந்த மற்றும் அடுத்த உலகங்களில் தோல்வியுறுகிறாா். ஆசாரத்தைக் கடைபிடிப்பதால் நீங்கள் எனது மனதினை திருப்தி செய்துள்ளீா்கள்."

- சைதன்ய சரிதாமிருதா, அந்திய லீலா – அத்.4
- - சைதன்ய மஹாபிரபு சநாதன கோஸ்வாமிக்கு

**சவால் விடும் நோக்கத்தில் இதை செய்யக்கூடாது**

பாகவதத்தைக் கேட்பவா்கள் தெளிவான அா்த்தத்தை அறிவதற்காக பிரசங்கம் செய்பவரிடம் கேள்விகள் கேட்கக் கூடும். ஆனால் சவால் விடும் நோக்கத்தில் இதைச் செய்யக் கூடாது. பிரசங்கம் செய்தவருக்கும், விஷயத்திற்கும் பெரும் மரியாதை அளித்து

அடக்கத்துடன் கேள்விகள் கேட்க வேண்டும். இநத முறைதான் பகவத் கீதையில் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. சரியான அதிகாரிகளிடமிருந்து பணிவுடன் ஒருவர் தெய்வீக விஷயத்தைக் கேட்டறிய வேண்டும். ஆகவே, பிரசங்கியான சூத கோஸ்சுவாமியிடம் மிகுந்த மரியாதையுடன் இந்த முனிவர்கள் பேசினர்.

- ஸ்ரீமத் பாகவதம் 1.1.5

**ஒருவர் கேட்கும் கேள்விகளானது கண்டிப்பாக திவ்ய ஞானத்திற்கு சம்பந்தப்பட்டவையாகவே இருக்க வேண்டும்.**

ஒருவன் ஜிக்ஞாஸுவாக அதாவது அதிகாரமுள்ள ஆன்மீக குருவிடமிருந்து கற்றறிந்து கொள்ள ஆவலாயிருத்தல் வேண்டும். அவன் கேட்கும் கேள்விகளானது கண்டிப்பாக திவ்ய ஞானத்திற்கு சம்பந்தப்பட்டதாகவே இருக்க வேண்டும். (ஜிக்ஞாசு: ஷ்ரேய உத்தமம்). ஜட அறிவுக்கு மேற்பட்ட ஒன்று என்பதை உத்தமம் என்ற சொல் தெளிவுபடுத்துகிறது. "தம" என்பதன் பொருள் "ஜட உலகின் இருள்" ஆகும். "உத்" என்றால் "திவ்யமான" என்று பொருள். பொதுவாக மக்கள் ஜட விஷயங்களைப் பற்றி அறிவதிலேயே ஆர்வமாக உள்ளனர். ஆனால் எப்பொழுது ஒருவன் இவ்விஷயங்களில் ஆர்வத்தை இழந்து, திவ்யமான விஷயங்களில் ஆர்வமாக உள்ளானோ அப்பொழுது அவன் தீட்சை பெறத்தகுந்தவனாகிறான்.

- உபதேசாமிருதம், பதம் 5

**குரு வாப்பு சேவையின் முக்கியத்துவம்**

**வாணி நித்தியமாக தொடரக்கூடியது**

பௌதீக கண்ணோட்டத்தின்படி, தெய்வத்திரு.ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்கள், டிசம்பர் மாதம், கடைசி நாளன்று, 1936 ஆம் வருடம் இந்த பௌதிக உலகிலிருந்து மறைந்து விட்டாலும், அவருடைய வாணி, அவருடைய வார்த்தைகள் மூலம் எப்பொழுதும் தெய்வத்திரு என்னுடன் இருப்பதாக நான் இன்னமும் கருதுகிறேன். இரண்டு வழிகளில் சத்சங்கம் – வாணி என்றால் வார்த்தைகள். வாப்பு என்றால் உடல் இருப்பு. உடல் இருப்பு சில சமயங்களில் பாராட்டத்தக்கது. சில சமயங்களில் அவ்வாறில்லை. ஆனால் வாணி நித்தியமாகத் தொடரக்கூடியது. ஆதலால் நாம் 'வாணி' யைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், உடல் இருப்பை அல்ல. பகவத் கீதை, உதாரணத்திற்கு பகவான் கிருஷ்ணரின் வாணி. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கிருஷ்ணரே இங்கே இருந்தார். ஜடக்கண்ணோட்டத்தில் இப்பொழுது இங்கே அவர் இல்லை என்றாலும், பகவத் கீதை தொடர்ந்து இருக்கிறது.

- சைதன்ய சரிதாமிருதா, அந்த்ய லீலா, முடிவான வார்த்தைகள்

**'வாணி' சேவை 'வாப்பு' சேவையை விட முக்கியத்துவம் வாய்ந்தது**

ஆன்மீக குருவின் தோற்றத்தை வழிபடுவதை விட, அவரது உபதேசங்களை நிறைவேற்றுவதே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனால், இரண்டில் எதையும் ஒதுக்க முடியாது. உருவம் 'வாப்பு' என்றழைக்கப்படுகிறது. உபதேசங்கள் 'வாணி' என்றழைக்கப்படுகிறது. இரண்டுமே வழிபடப்பட வேண்டும். 'வாணி' 'வாப்பு'வை விட முக்கியத்துவம் வாய்ந்தது.

- துஷ்ட கிருஷ்ணாவிற்கு எழுதிய கடிதம், அகமதாபாத், 14, டிசம்பர், 1972

**அரசரின் மடியில் உட்காரும் மூட்டைப்பூச்சி**

குருவுடனான நேரடி சத்சங்கம் என்று பார்த்தால் இதுவரை பார்த்தால், நான் எனது குரு மகாராஜாவுடன் நான்கு அல்லது ஐந்து முறைகள் மட்டுமே இருந்தேன். ஆனால் நான் அவரது சத்சங்கத்திலிருந்து எப்பொழுதும் விலகவில்லை. ஒரு கணம் கூட, ஏனெனில்

நான் அவரது கட்டளைகளைப் பின்பற்றுகிறேன். நான் ஒரு பொழுதும் பிரிவை உணர்ந்ததில்லை. எனது குரு மகராஜாவுடன் இடையறாத நேரடி சத்சங்கம் கொண்டிருந்தவர்கள், ஆனால் அவரின் கட்டளைகளை அலட்சியம் செய்யும் என்னுடைய ஆன்மீகச் சகோதரர்கள் சிலர் இந்தியாவில் இங்கே உள்ளனர். இது, ஒரு அரசரின் மடியில் உள்ள மூட்டைப்பூச்சி போல, மூட்டைப்பூச்சி தனது நிலையில் கர்வம் கொள்ளலாம், ஆனால் அதன் வெற்றி எல்லாம் அரசரைக் கடிப்பதில் மட்டுமே. சேவையின் மூலமான சத்சங்கத்தைப் போல நேரடி சத்சங்கம் முக்கியமானது அல்ல.

- சததன்யாவிற்கு எழுதிய கடிதம், கோல்கத்தா, 20, பிப்ரவரி, 1972

**நான் மேற்கொண்ட பணியை நீங்கள் நிறைவேற்ற முயற்சித்தால், அதுவே நமது இடையறாத சத்சங்கம்**

என்னைப் பொறுத்தவரை, உண்மையிலேயே நான் எனது ஆன்மீக குருவிடமிருந்து எந்த பிரிவையும் உணரவில்லை. ஏனெனில், அவருடைய விருப்பத்திற்கிணங்க, அவருக்கு சேவை செய்ய முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். நீங்கள் நான் மேற்கொண்ட பணியை கனிவுடன் நிறைவேற்ற முயற்சி செய்தால், அதற்காகவே நீங்கள் அங்கு அனுப்பப்பட்டிருக்கிறீர்கள், அதுவே நமது இடையறாத சத்சங்கமாகும்.

- ஹம்ஸ தூதாவிற்கு எழுதிய கடிதம், லாஸ் ஏஞ்சல்ஸ், 22, ஜீன், 1970

**பிரிவு உணர்ச்சிகள் தெய்வீகமான பேரின்பமாக மாறும்**

தயவுசெய்து பிரிவில் மகிழ்ச்சி அடையுங்கள்.1936லிருந்து நான் எனது குரு மகாராஜாவிடம் இருந்து பிரிக்கப்பட்டிருக்கிறேன். ஆனால் அவரது கட்டளைக்கு ஏற்ப நான் சேவை செய்யும் வரை, நான் எப்பொழுதும் அவருடன் இருக்கிறேன். ஆதலால், பகவான் ஸ்ரீ கிருஷ்ணரைத் திருப்தி செய்வதற்காக, நாம் அனைவரும் ஒன்றாக சேவை செய்ய வேண்டும். இவ்வாறாக, உணர்ச்சிகள் திவ்யமான பேரின்பமாக மாறும்.

- 'உத்தவா' விற்கு எழுதிய கடிதம், பாஸ்டன், 3, மே, 1968

## பாடம் 11, குரு தியாகம் (ஆன்மீக குருவை நிராகரித்தல்)

**பாடத்தலைப்புகள்**

| |
|---|
| குரு தியாகம் – கொள்கைகள் |
| குரு பற்றிய கவலைகளை புகார் செய்யும் முறைகள் |
| திரும்பவும் தீட்சை எடுப்பது |
| அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில், தொடர்ந்து பக்தி சேவை செய்தல் |

### குரு தியாகத்தின் கொள்கைகளும், முறைகளும்

**வெறுக்கத்தக்கச் செயல்களில் ஈடுபடும் ஆசிரியர் நிராகரிக்கப்பட வேண்டியவர்**

சாஸ்திர நியமங்களின்படி, பகுத்தறிவை இழந்து வெறுக்கத்தக்கச் செயல்களில் ஈடுபடும் ஆசிரியர் நிராகரிக்கப்பட வேண்டியவர்.

- பகவத் கீதை உண்மையுருவில், 2.5

**ஆன்மீக குரு தகுதியற்றவர் எனும் பொழுது, அவர் நிராகரிக்கப்பட வேண்டும்**

ஆன்மீக குரு ஒருவர் குருவாக இருக்கத் தகுதியற்றவர் என்பதை வெளிப்படுத்தும் பொழுது, வேத நூல்களுக்கு இணங்க அவரை ஒதுக்கிவிட வேண்டும்.

- ஸ்ரீமத் பாகவதம் 1.7.43

குரோர் அபி அவலிப்தஸ்ய கார்யகார்யம் அஜானதா
உபதா – ப்ரதி பன்னஸ்ய பரித்யாகோ விதியதே

குரு புலனின்பத்தில் பற்று கொண்டு, தனது கடமை உணர்வை விடுத்து, பகவானுக்கு பக்தி சேவை செய்தல் என்ற வழியைத் தவிர ஒரு தரமிழந்த பாதையை பின்பற்றினால், அவர் நிராகரிக்கப்பட வேண்டியவர்.

- மகாபாரதம், உத்யோக பர்வா, 179.25

**தவறுதலாக நீங்கள் ஒரு பாதகனிடம் வந்து விட்டீர்கள்….. நீங்கள் அவனை நிராகரிக்க முடியும்**

தவறுதலாக ஒருவர் ஒரு பாதகனிடம் சென்றிருந்த போதிலும், நியதி இருக்கிறது. 'இங்கே, கிருஷ்ணரைப் பற்றி எதுவும் அறியாத பாதகன் இருக்கிறான் மற்றும் நான் அவனிடம் வந்திருக்கிறேன்' என்று கண்டவுடன், நீங்கள் அவனை நிராகரியுங்கள். சாஸ்திரத்தில் அது கூறப்பட்டிருக்கிறது. குரூர் அபி அவலிப்தஸ்ய கார்யகார்யம் அஜானதா பரித்யாகோ விதீயதே. (?). குருவாக எவ்வாறு இருப்பது என்று தெரியாத ஒரு பாதகனிடம் நீங்கள் தவறுதலாக வந்திருந்தாலும் கூட, நீங்கள் அவனை நிராகரிக்க வேண்டும். ஏன் அவனுடன் ஒட்டியிருக்கிறாய்? அவரை நிராகரியுங்கள்.

- அறை உரையாடல், ஜனவரி, 31, 1977, புவனேஸ்வர்

ஒரு குரு, குருவாக இருக்கத் தகுதியற்றவர் என்பது வெளிப்படும் நிலையில், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் சிஷ்யர்கள் எவ்வாறு பாதுகாக்கிறது? உங்கள் கருத்துக்களை எழுதுக.

**குரு சம்பந்தமான கவலைகளை புகார் செய்யும் முறைகள்:-**

ஒரு சிஷ்யர் தனது குரு சம்பந்தமான கவலைகளை,

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவர்களின் ஆலோசனையுடன் வெளிப்படுத்தலாம்

- கோவில் மற்றும் ஜி.பிசி. அதிகாரிகள்
- சீக்ஷா – குருக்கள்
- அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் தீர்மானங்கள்

**ஆன்மீக குருவின் சத்சங்கத்தைக் நீங்கள் கைவிட்டால், அது உங்களுக்கு நல்லதல்ல**

ஆனால் ஒருவர் ஆன்மீக குருவை விட்டு விலகும் பொழுது, ஆன்மீக குரு, ஏதாவது காரணம் இருக்கலாம். அந்த காரணமும் சாஸ்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. குரூர் அபி அவலிப்தஸ்ய கார்யகார்யம் அஜானதா (?) கார்யஅகார்ய. ஒரு ஆன்மீக குரு உண்மையில் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்று அறியவில்லை எனில் மற்றும் சாஸ்திரத்தின் விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு எதிராக செயல்படுகிறார் என்றால், பிறகு அவ்வாறான ஆன்மீக குருவை கைவிட்டுவிடலாம். ஆனால், சாஸ்திரம் அல்லது குருவின் கொள்கைகளுக்கு எதிராக ஆன்மீக குரு செயல்படுகிறார் என்பதை நீங்கள் காணமுடியாத வரை, ஆன்மீக குருவின் சத்சங்கத்தை நீங்கள் கைவிட்டால், ஆன்மீக குருவின் சத்சங்கத்தை நீங்கள் கைவிட்டால், அது உங்களுக்கு நல்லதல்ல. அதுவே உங்களுக்கு வீழ்ச்சி.

- ஸ்ரீமத் பாகவதம், 1.16.36 – டோக்யோ, ஜனவரி, 30, 1974

**உங்களது மந்திர குரு உள்ளவரை, நீங்கள் வேறு எங்கும் செல்ல இயலாது.**

ஒரு நாள், ஸ்ரீல கதாதர பண்டிதர், தான் திரும்ப தீட்சை வாங்க விரும்புவதன் காரணத்தை பகவானிடம் வெளிப்படுத்தினார். அவர் கூறினார்: எனது குருவிடம் இருந்து பெற்ற எனது இஷ்ட-மந்திரத்தை (ஒருவரின் வழிபடக்கூடிய விக்ரஹத்தின் மந்திரம்) நான் ஒரு தகுதியற்ற நபருக்கு வெளிப்படுத்திவிட்டேன். அப்போதிலிருந்து எனது மனம் கலங்குகிறது. பகவானே, பணிவுடன் நீங்கள் எனக்குத் திரும்பவும் தீக்ஷை வழங்குங்கள். பிறகு என் மனம் மீண்டும் உவகை கொள்ளும் பகவான் பதிலளித்தார். "உங்களுக்கு இஷ்ட-மந்திரத்தை உபதேசித்த குருவிற்கு எந்த குற்றங்களும் இழைக்காதீர்கள். இதில் மிகவும் கவனமாக இருங்கள். உங்கள் மந்திர-குரு இருக்கும் வரை, நீங்கள் வேறு எங்கும் செல்ல இயலாது அல்லது என்னிடம் கூட வரமுடியாது. இது நம் இருவரின் ஆன்மீக வாழ்க்கையை ஆபத்துக்கு உள்ளாக்கும்."

போத கலுசிதஸ் தேன தௌரத்யம் ப்ரக்தி-க்ருதம்
குரூர் யேன பரித்யக்தஸ் தேன த்யக்தா பூர ஹரி

ஒருவர் தன்னுடைய சொந்த ஆன்மீக குருவை நிராகரிக்கும் பொழுது, தன்னுடைய புத்தியை மாசுபடுத்துகிறார் மற்றும் தனது கடுமையான பலவீனத்தை வெளிப்படுத்துகிறார். உண்மையில், அத்தகைய மனிதர் உன்னத பகவான், ஹரியை ஏற்கனவே நிராகரித்துவிட்டார்".

- பிரஹ்ம வைவர்த புராணம்

**மீண்டும் தீட்சை**

ஜி.பி.சி வழிகாட்டுதல்களைக் கருத்தில் கொண்டும், மூத்த அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் பக்தர்களின் ஆலோசனையின்படியும், தனது தகுதி இழந்த குருவை நிராகரிப்பதாக முடிவு செய்திருந்த ஒரு பக்தர், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட குருவிடம் இருந்து தீட்சையை நாடலாம். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சட்டத்தில் முதல் மற்றும் இரண்டாவது தீட்சைக்கு உரிய வழக்கமான முறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

- அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சட்டம் 7.26

'குரு-தியாகம்' விஷயத்தில், மீண்டும் தீட்சை பெறுவதற்குமுன், ஒரு சிஷ்யர் ஸ்ரீல பிரபுபாதா, குரு பரம்பரை மற்றும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் - இவற்றோடு தொடர்ந்து தொடர்பில் இருக்கக் கூடியதற்கான வழிகளைப் பட்டியலிடுக.

**எனது உபதேசங்களின் மூலமாக என்னை எப்பொழுதும் நினைத்திருக்க தயவு செய்து முயலுங்கள். நாம் எப்பொழுதும் ஒன்றாக இருப்போம்.**

எனது உபதேசங்களின் மூலமாக என்னை எப்பொழுதும் நினைத்திருக்க தயவு செய்து முயலுங்கள். நாம் எப்பொழுதும் ஒன்றாக இருப்போம். ஸ்ரீமத் பாகவதத்தின் முதல் வெளியீடுகளில் நான் எழுதியுள்ளதைப் போல, "ஆன்மீக குரு தனது தெய்வீகமான கட்டளைகள் மூலம் எப்பொழுதும் வாழ்கிறார் மற்றும் சிஷ்யர் அவருடன் வாழ்கிறார்", ஏனெனில், எனது குரு மகராஜாவிற்கு நான் எப்பொழுதும் சேவை செய்திருக்கிறேன் மற்றும் அவரது உபதேசங்களை பின்பற்றிருக்கிறேன். தற்சமயம் கூட நான் எப்பொழுதும் அவரிடமிருந்து பிரிந்தது இல்லை.

- சிதநந்தாவிற்கு எழுதிய கடிதம், பக்திவேதாந்த மேனர், 25, நவம்பர், 1973

## பாடம் 12 ஒருவருடைய குருவை அறிமுகப்படுத்துதல்

**பாடத்தலைப்புகள்**

- ஸ்ரீல பிரபுபாதாவை அறிமுகப்படுத்துதல்
- தற்போதைய அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் குருக்களை அறிமுகப்படுத்துதல்

### ஸ்ரீல பிரபுபாதாவை அறிமுகப்படுத்துதல்

ஸ்ரீல பிரபுபாதாவை, அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில், ஸ்தாபக ஆச்சாரியராகவும், தலைமையான குருவாகவும் வெளிப்படையாக மேம்படுத்துவதில் உள்ள சில நன்மைகளை, கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் வரிசைப்படுத்துக.

### தற்போதைய அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் குருக்களை அறிமுகப்படுத்துதல்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் தற்போதைய குருக்களை அறிமுகப்படுத்துவதில், பொருத்தமற்ற வழிகள் சிலவற்றை, கீழே கண்ட கட்டத்தில் வரிசைப்படுத்துக.

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் குருக்களை பொருத்தமற்ற முறையில் அறிமுகப்படுத்துவதால், இயக்கத்திற்கு நிகழக்கூடிய விளைவுகள் என்னவாக இருக்கக்கூடும்? கீழே கண்ட கட்டத்தில், உங்களது கருத்துகளை எழுதுக.

**கூடுதல் மேற்கோள்கள் பாடம் 12 ஒருவரின் குருவை அறிமுகப்படுத்துதல்**

புதிய உறுப்பினா்களை ஸ்ரீல பிரபுபாதாவிடம் புகலிடம் கொள்வதற்கு அறிவுறுத்துங்கள்.

- அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சட்டம் 7.2.1 முதல் (ஹரிநாம) தீட்சை

**பட்டத்தை உபயோகித்தல்**

புத்தகங்கள், இதழ்கள், செய்தி மடல்கள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்புகள் முதலான அனைத்து அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் வெளியீடுகள், 'ஸ்தாபக ஆச்சாரியா், பிரபுபாதா மற்றும் தெய்வத்திரு உள்ளிட்ட பட்டங்களையும், முழுப் பெயரையும் தெளிவாகக் காட்டவேண்டும். உதாரணமாக தெய்வத்திரு அ.ச.பக்தி வேதாந்த ஸ்வாமி பிரபுபாதா, ஸ்தாபக ஆச்சாரியா், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம். (96).

- அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சட்டம் 2.3.1

**தகடுகள்**

ஸ்ரீல பிரபுபாதாவின் பெயா் பொறிக்கப்படாத அனைத்து அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் கோவில்களும், முக்கிய கட்டிடங்களும், ஸ்ரீல பிரபுபாதாவின் முழுப்பெயரையும், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியா் என அவரது நிலையையும் குறிக்கும் தகடுகளை நிறுவவேண்டும். இது பக்தி வேதாந்த புத்தக அறக்கட்டளை, பக்தி வேதாந்த நிறுவனம், ஸ்ரீல பிரபுபாதாவால் ஸ்தாபிக்கப்பட்ட அல்லது அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்துடன் இணைக்கப்பெற்ற வேறு ஏதாவது இயக்கம் - இவைகளின் முக்கியமான கட்டிடங்களுக்கும் பொருத்தும்.

- அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் 2.3.3

**ஒருவா் தன்னுடைய குருவை மறைக்க வேண்டும்**

> கோபயேத் தேவதாம் இஷ்டம் கோபயேத் குரூம் அத்மனஹ
> கோபயேச் ச நிஜம் மந்தரம் கோபயேன் நிஜ மாலிகம்

ஒருவா் தன்னுடைய இஷ்ட தேவாவை மறைக்க வேண்டும். ஒருவா் தன்னுடைய குருவை மறைக்க வேண்டும். ஒருவா் தன்னுடைய மந்திரத்தை மறைக்க வேண்டும். மற்றும் ஒருவா் தன்னுடைய ஜபமாலையை மறைக்க வேண்டும்.

- ஹரிபக்தி - விலாஸா, பதம் 2.14.7

**குருவின் சட்டைகள், சுவரொட்டிகள், ஜபம் பை பொத்தான்கள் ஆகியவற்றை வெளிப்படையாக விளம்பரம் செய்தல்**

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் தீக்ஷா மற்றும் சீக்ஷா குருக்களின் சிஷ்யா்கள், குருவின் சட்டைகள், ஜபம் பை பொத்தான்கள், விளையாட்டு தொப்பிகள் முதலானவற்றை அணிவதோ அல்லது வெளிப்படையாகக் காட்டுதலோ கூடாது. (ஸ்ரீல பிரபுபாதாவைத் தவிர).

- அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சட்டம் /
சிபாரிசு 6.4.8 வழிபாடு மற்றும் ஆசாரம்

**அகில உலக கிருஷ்ண பக்தி இயக்க தீக்ஷா அல்லது சீக்ஷா குருக்களின் உருவப்படங்கள்**

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் கோவிலில் வசிப்பவர்கள், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் தீக்ஷா அல்லது சீக்ஷா குருக்களின் உருவப்படங்களை, தனிப்பட்ட முறையில் அவர்களது ஆஸ்ரம குடியிருப்புகளில் வைத்துக் கொள்ளலாம். ஆனால் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் வளாகங்களில் வெளிப்படையாக விளம்பரம் செய்யக்கூடாது. அவ்வப்போது நடக்கிற சிறப்பு பிரச்சார நிகழ்ச்சிகளை ஊக்குவித்தல் ஒரு விதிவிலக்காக இருக்கலாம்.

- அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சட்டம், 6.4.8
வழிபாடு மற்றும் ஆசாரம்

**ஸ்ரீல பிரபுபாதாவின் படத்தை இணைய தளங்கள் முக்கியமானதாக காட்ட வேண்டும்**

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் கிளையால் வெளியிடப்படும் எந்தவொரு மற்றும் அனைத்து இணையதளங்கள், அறிமுகப் பக்கத்தில் ஸ்ரீல பிரபுபாதாவின் படத்தை முக்கியமாகக் காட்ட வேண்டும் என்பதை உறுதி செய்வதற்கு அந்த கிளையின் அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும். ஜி.பி.சி கிளையின் தலைவர் அலலது குரு போன்ற வேறு எந்த பக்தரின் உருவப்படத்தை விட, இப்படம் பெரியதாக இருக்க வேண்டும். ஸ்ரீல பிரபுபாதா, ‘தெய்வத்திரு அ.ச. பக்தி வேதாந்த ஸ்வாமி பிரபுபாதா, ஸ்தாபக ஆச்சாரியர், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம்’ என்று அவருடைய முறையான பெயராலும், பட்டத்தாலும் குறிப்பிடப்படவேண்டும்.

- 304 ஸ்ரீல பிரபுபாதாவின் நிலை மீதான ஜி.பி.சி. கூற்று, மார்ச் 2013

## பாடம் 13 அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தினுள் உறவுமுறைகள்

**பாடத்தலைப்புகள்**

- குருவின் அடிப்படையில் பாகுபாடு
- ஒத்துழைக்கின்ற உறவுமுறைகளை வளர்த்துக் கொள்ளுதல்

**குருவின் அடிப்படையில் பாகுபாடு**

பாகுபாடு

''மனதால் உணர்தல், குறிப்பு, அல்லது விஷயங்களுக்கிடையே வேறுபாடு அல்லது வித்தியாசம் செய்தல்''

- ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி, இரண்டாம் பதிப்பு,
ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகம்.

''பாகுபாடு என்பது, ''ஒரு நபர் ஒரு குறிப்பிட்ட குழுவில் அல்லது பிரிவில் உறுப்பினராக உள்ளார் என்ற அடிப்படையில் மட்டுமே, அவரை கேடு உண்டு பண்ணத்தக்க விதமாக நடத்துதல்'' ஆகும். . . . . . . . . . ஒரு குழுவில் உள்ள உறுப்பினர்களை, மற்ற குழுவினர்க்குக் கிடைக்கும் வாய்ப்புகளிலிருந்து தவிர்த்தல் அல்லது கட்டுப்படுத்துதல் ஆகியவையும் அடங்கும்.

- முன்னுரை, சமூகவியல், 7ம் பதிப்பு,
டபிள்யு,டபிள்யு, நார்டன் & கம்பெனி 2009 பக்கம் 324

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில், உங்களுடைய தீக்ஷா அல்லது சீக்ஷா குருக்களின் அடிப்படையில், பொருத்தமற்ற பாரபட்சத்தை நீங்கள் அனுபவித்த ஒரு தருணத்தை விவரிக்கவும்.

குருவின் அடிப்படையில் பொருத்தமற்ற பாரபட்சம் அல்லது ஒரு பக்கம் காய்தல் - இவற்றால் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்திற்கு எழக்கூடிய நீண்ட கால விளைவுகள் சிலவற்றை பட்டியலிடுக.

அனைத்து அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் குருக்கள், சிஷ்யர்களுக்கிடையே உறுதியான, ஒத்துழைக்கிற உறவுமுறைகளை பக்தர்கள் பேணிக்காத்தால், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் எவ்வாறு இருக்கும் என்பதற்கான உங்களது பார்வையை விளக்குக.

**உங்களுக்கிடையே இருக்கும் நட்பினைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைவதோடு, உங்கள் அனைவருக்கும் மங்களம் உண்டாகுக என்று வாழ்த்துகிறேன்**

முழுமுதற் கடவுள் கூறினார் : எனது அன்பிற்குரிய அரச குமாரர்களே! உங்களிடம் காணப்படும் நட்புறவு கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் அனைவரும் பக்தித் தொண்டு என்னும் ஒரே தர்மத்தில் ஈடுபட்டிருக்கிறீர்கள். உங்களுக்கிடையே இருக்கும் நட்பினைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைவதோடு, உங்கள் அனைவருக்கும் மங்களம் உண்டாகுக என்று வாழ்த்துகிறேன். இப்போது நீங்கள் வேண்டும் வரத்தினை என்னிடம் கேட்கலாம்.''

- ஸ்ரீமத் பாகவதம் 4.30.8

**நான் சென்ற பிறகு, இந்த இயக்கத்தை முன் நடத்திச் செல்வதற்கு ஒத்துழையுங்கள்**

ஸ்ரீல பிரபுபாதா கூறினார் : ''நான் சென்றபிறகு இந்த இயக்கத்தை முன்நடத்திச் செல்வதற்கு எவ்வளவு ஒத்துழைக்கிறீர்கள் என்பதிலிருந்து நீங்கள் என்மீது வைத்திருக்கும் அன்பு வெளிப்படுத்தப்படும்.

- ஸ்ரீல பிரபுபாதா லீலாமிருதா, பாகம் 6, 52 : ''நான் எனது பங்கை செய்துவிட்டேன்''

**ஒன்றுபட்டால் நாம் நிலைத்து நிற்போம். பிரிவுபட்டால் நாம் வீழ்வோம்**

சைதன்ய மஹாபிரபுவே நமது ஒத்துழைப்பை விரும்பினார். அவர் பகவான், கிருஷ்ணர். ஆதலால் ஒத்துழைப்பு என்பது மிகவும் முக்கியமான விஷயம். ''நான் மிகுந்த திறமையைப் பெற்றிருக்கிறேன். என்னால் செய்ய முடியும்'' என்று யாரும் நினைக்கக்கூடாது. ஒத்துழைப்பதால் மட்டுமே, நாம் மிகப்பெரிய விஷயத்தைச் செய்யமுடியும்.

இது நமது . . . . . . . ஆதலால் கிருஷ்ண உணர்வைப் பரப்புவதில் உறுதியாக இருங்கள். மற்றும் கிருஷ்ணர் உதவுவார். அவரே மிகவும் சக்தி வாய்ந்தவர். ஆயினும், நாம் ஒன்றுபட வேண்டும்.

- ராதா தமோதரா சங்கீர்த்தன குழுவுடனான அறை உரையாடல்,
மார்ச் 16, 1976 மாயாப்பூர்.

இந்த வகுப்பிலிருந்து நீங்கள் கற்றுக் கொண்டது என்ன?